












2025-26 ரூ தமி... நிதிநி... எல்லா...

சட்டப்பேரவையில் நேற்று நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்த பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ள முக்கிய அறிவிப்புகளின் விவரம் வருமாறு:

## காஞ்சிபுரம், ஈரோடு, கரூர் உள்ளிட்ட 10 இடங்களில் தோழி விடுதிகள் கட்டப்படும்




தமிழ்நாட்டின் முத்திரை பதிக்கும் திட்டங்களில் ஒன்றான தோழி பணிபுரியும் மகளிர் விடுதிகள் ஏற்கெனவே 13 இடங்களில் 1303 மகளிர் பயன் பெறும் வகையில் வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. வரும் நிதியாண்டில் காஞ்சிபுரம், ஈரோடு, கரூர் மற்றும் ராணிப்பேட்டை உள்ளிட்ட மேலும் 10 இடங்களில் 800 பெண்கள் பயன்பெறும் வகையில் ரூ.77 கோடியில் கட்டப்படும்.

சென்னை, கோவை மற்றும் மதுரை ஆகிய மாநகரங்களில் தலா ஆயிரம் மாணவியர் தங்கும் வகையில் அனைத்து நவீன வசதிகளுடன் மொத்தம் ரூ.275 கோடியில் 3 மாணவியர் விடுதிகள் அமைக்கப்படும்.

மூன்றாம் பாலினத்தவரின் நல்வாழ்விற்கென இவர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டினை உறுதிசெய்து வாழ்க்கையில் வெற்றிபெற புதுமைப்பெண் மற்றும் தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் உயர்கல்வி பயிலும் மாணவ மாணவியர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 உதவித்தொகை வழங்கும் திட்டம் இவர்களுக்கும் விரிவுப்படுத்தப்படும்.

மூன்றாம் பாலினத்தவரை போக்குவரத்து மேலாண்மை, திருவிழாக் காலங்களில் கூட்ட நெரிசலை கட்டுப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் வகையில் உரிய பயிற்சிகள் வழங்கி ஊர்க்காவல் படையில் ஈடுபடுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 50 மூன்றாம் பாலினத்தவர்களை கொண்டு சென்னை, தாம்பரம், ஆவடி மாநகரங்களில் இம்முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் அதிகம் அறியப்படாத

## சுற்றுலா தலங்களை மேம்படுத்த ரூ.100 கோடி ஒதுக்கீடு



பட்ஜெட்டில் கூறியிருப்பதாவது: சுற்றுலாத் துறையில் அதிக முதலீடுகளை ஈர்க்கவும், சுற்றுலாத்துறையில் ஈடுபடும் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கவும், தமிழ்நாடு சுற்றுலா ஊக்குவிப்பு வசதிச் சட்டம் ஒன்றினை தமிழ்நாடு அரசு கொண்டு வரும்.

லட்சக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை புரிந்திடும் முக்கிய நகரங்களான மாமல்லபுரம், திருவண்ணாமலை, ராமேஸ்வரம், குமரி, திருச்செந்தூர், பழனி மற்றும் நாகூர்- வேளாங்கண்ணி பகுதிகளில் சற்றுலா பயணிகளின் தேவைகளை நிறைவுசெய்யும் வகையில் உரிய கட்டமைப்பு வசதிகளை நவீன தரத்துடன் அமைத்திடும் நோக்கோடு மொத்தம் ரூ.300 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

முதற்கட்டமாக மாமல்லபுரம், திருவண்ணாமலை, திருச்செந்தூர் மற்றும் ராமேஸ்வரம் நகரங்களுக்கென வளர்ச்சி ஆணையங்கள் உருவாக்கப்படும். மாநிலத்திலுள்ள அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தும் பொருட்டு, அப்பகுதிகளில் சுற்றுலா கட்டமைப்பு வசதிகளை உருவாக்க ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உதகமண்டலத்தின் மைய பகுதியில் சுமார் 52 ஏக்கர் பரப்பளவில் ஓர் எழில் மிகு சுற்றுச்சூழல் பூங்கா ரூ.70 கோடியில் அமைக்கப்படும். சுற்றுலாத் துறையில் தனியார் முதலீட்டை ஊக்கவித்திடும் பொருட்டு மாமல்லபுரம்-மரக்காணம் வரையிலான கடலோர சுற்றுலா வழித்தடம், திருச்சி - தஞ்சாவூர்- நாகை சோழர்கால சுற்றுலா வழித்தடம், மதுரை - சிவகங்கை மரபுசார் சுற்றுலா வழித்தடம், கோவை - பொள்ளாச்சி வரையிலான இயற்கை நலன் சுற்றுலா வழித்தடம் உள்ளிட்ட முக்கிய பகுதிகள் அடையாளம் காணப்பட்டு, சுற்றுலா வளர்ச்சிக்கு பொதுத்துறை மற்றும் தனியார் துறை முதலீடுகளை ஈர்த்திட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

ரூ.70 கோடியில்

## 700 டீசல் பேருந்துகள் இயற்கை எரிவாயு பேருந்துகளாக மாற்றப்படும்



அலையாத்திக் காடுகள் ப... காப்பு நவீன மீன்பிடி நடைமுறை... அறிமுகம் போன்ற முக்கியப் ப... களை மேற்கொள்ளும் வகைய... கடல்சார் வள அறக்கட்டளை ரூ... கோடி தொடக்க நிதியுடன் உருவ... கப்படும்.

கடல் நீரின் தரம், சுற்றுச்... ழல் கல்வி, பொது சுற்றுச்சூ... மேலாண்மை, பாதுகாப்பு மற்... சேவைகள் ஆகிய நான்கு பெ... பிரிவுகளின் கீழ் உள்ள 33 வெவ்வே... தகுதிகளைக் கொண்டிருக்கும் கட... ரைகளுக்கு வழங்கப்படும் நீலக்கெ... சான்றினை 2025-26ம் ஆண்டில்... கோடி ரூபாய் மதிப்பீட்டில் செ... னையில் உள்ள திருவான்மியு...




பட்ஜெட்டில் கூறியிருப்பதா... இந்தியாவிலேயே, அதிக... குறு, சிறு மற்றும் நடுத்தர... தொழில் நிறுவனங்கள் அமையப்... பெற்ற மாநிலங்களில், லட்சத்திற்... மேற்பட்ட பதிவுகளுடன் தமிழ்நாடு... 3வது இடத்தில் உள்ளது. எதிர்வரு... 2025-26ம் நிதியாண்டில் வங்கிகள்... மூலம் 10 லட்சம் குறு, சிறு மற்று... நடுத்தரத் தொழில் நிறுவனங்களு... ரூ. 25 லட்சம் கோடி வங்கிக் கடன்... வழங்கப்படும்.

மாநிலம் முழுவதும் உள்ள கு... சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்கள் பயன்பெறும் வ... யில், இந்த ஆண்டு காஞ்சிபுரம்

மூத்த குடிமக்களுக்காக 10 மாநகரங்களில்


## ரூ.10 கோடியில் 25 அன்புச்சோலை மையங்கள்




மூத்த குடிமக்களின் முழுமையான பராமரிப்பிற்கென மதுரை, கோவை, திருச்சி, சேலம், திருப்பூர், ஈரோடு, தூத்துக்குடி, வேலூர், தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல் உள்ளிட்ட மாநகரங்களில் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீட்டில் 25 அன்புச்சோலை மையங்கள் அமைக்கப்படும். இந்த பகல்நேர பாதுகாப்பு மையங்களில் முதியவர்கள் தோழமை உணர்வுடனும் பயனுள்ள பணிகளிலும் ஈடுபடலாம். பகல்நேர பராமரிப்பு உதவி, அத்தியாவசிய மருத்துவ பராமரிப்புக்கான ஏற்பாடுகள் மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் துணையுடன் இந்த அன்புச்சோலைகளில் வழங்கப்படும்.

17 புராதனக் கட்டிடங்கள்

## ரூ.150 கோடியில் பழமை மாறாமல் புதுப்பிப்பு




புராதனக் கட்டிடங்களை பழமை மாறாமல் புதுப்பிக்கும் நோக்கோடு, சென்னைப் பல்கலைக்கழக மெரினா வளாகத்தில் உள்ள கீழைக் கலையியல் ஆய்வு நிறுவன புராதனக் கட்டிடம், ராணிப்பேட்டையில் உள்ள தேசிங்கு ராஜா ராணி நினைவகம், கோவையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையம், திருச்சியில் ராணி மங்கம்மாள் கோட்டை வளாக அலுவலகங்கள், தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் நகரில் உள்ள மகாகவி பாரதியார் இல்லம் உள்ளிட்ட 17 புராதனக் கட்டிடங்கள் ரூ.150 கோடியில் பழமை மாறாமல் புதுப்பிக்கப்படும். இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பொதுப் பணித் துறைக்கு ரூ.2457 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முகாம்வாழ் இலங்கை தமிழர்களுக்கு

## ரூ.206 கோடியில் கூடுதலாக 3000 வீடுகள்



■ 2024-2025ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடுகளில் ரூ.49,279 கோடி மதிப்பிடப்பட்ட வருவாய் பற்றாக்குறை, திறமையான நிதி மேலாண்மையின் பலனாக திருத்த மதிப்பீடுகளில் ரூ.46,467 கோடியாக குறைந்துள்ளது. 2025-2026ம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடுகளில், வருவாய் பற்றாக்குறை மேலும் குறைந்து ரூ.41,635 கோடியக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2024-25ம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடுகள் ரூ.1,08,690 கோடியாக மதிப்பிடப்பட்ட நிதி பற்றாக்குறை, திருத்த மதிப்பீடுகளில் ரூ.6,992 கோடியாக குறைந்து, ரூ.1,01,698 கோடி ரூபாய் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

■ 2024-25ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு 26.43 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2025-26ம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடு 26.07 சதவீதமாக மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது 15வது நிதிக்குழு 2025-26ம் ஆண்டிற்கு நிர்ணயித்துள்ள 28.70 சதவீதத்திற்குள்ளாகவே உள்ளது.

■ முகாம்வாழ் இலங்கை தமிழர்களுக்கு கூடுதலாக 3000 வீடுகள் ரூ.206 கோடி மதிப்பீட்டில் கட்டித் தரப்படும்.




வடஇந்தியாவில் மண்டலங்களுக்கு இடையே அமைக்கப்பட்டு வரும் ஆர்ஆர்டிஎஸ் ரயில்கள் தமிழ்நாட்டில் அமைக்கப்படும். இதற்கான சாத்தியக்கூறு குறித்து ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளோம் என்று நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.

சென்னை - திண்டிவனம், சென்னை - காஞ்சிபுரம் - வேலூர் மற்றும் கோவை - சேலம் இடையே ஆர்ஆர்டிஎஸ் ரயில்கள் அமைக்கப்படும். ஆர்ஆர்டிஎஸ் என்பது விரைவான மண்டல ரயில் போக்குவரத்து முறை ஆகும். ஆர்ஆர்டிஎஸ் என்பது இந்தியாவின் வளர்ச்சியில் முக்கியமான திட்டமாகும். இது நகரங்கள் மற்றும் புறநகரங்களை இணைக்கும் வேக ரயில் போக்குவரத்து அமைப்பாகும்.

டெல்லி-என்.சி.ஆர் பகுதியில் முதன்முதலில் செயல்படுத்தப்படும் இந்த திட்டம், மெட்ரோ ரயில்களை விட வேகமாகவும், சாதாரண ரயில்களை விட நவீனமாகவும் இருக்கும். தற்போது இவை டெல்லி-மேரட், டெல்லி-அல்வார், டெல்லி-பானிபத் ஆகிய வழிகளில் முதலில் செயல்படுத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. மணிக்கு 160-180 கிமீ வேகத்தில் இந்த ரயில்கள் இயங்கும். ஏசி கோச்சுகள், ஒய்-பை ஆட்டோமெட்டிக் கதவுகள், வேகமான பயணம், மெட்ரோவிற்கு மாற்றாக நீண்ட தூரப் பயணிகளுக்கு உகந்தது, மின்சாரத்தில் இயங்கும், குறைந்த கார்பன் அடையாளம் ஆகியவை இதன் சிறப்பம்சங்களாகும்.

தொழில்துறைக்கு ரூ.3,915 கோடி ஒதுக்கீடு

## ரூ.250 கோடியில் கடலூர், மேலூரில் காலணி தொழிற்பூங்கா




அதிகளவில் வேலை வாய்ப்புகளை வழங்கிட பொருளாதார வளர்ச்சியை மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் பரவலாகக் கொண்டு சேர்த்திட அரசு அயராது உழைத்து வருகிறது. அந்த உயரிய நோக்கத்தை நடைமுறைப்படுத்திடும் வகையில் தொழில் முயற்சிகள் முன்னெடுக்கப்படும்.

தோல் அல்லாத காலணி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள உலகின் முன்னணி நிறுவனங்கள் மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் விழுப்புரம். ராணிப்பேட்டை வேலூர் கன்னக்குறிச்சி கரூர், பெரம்பலூர், அரியலூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்ற தோல் அல்லாத காலணி உற்பத்தித் தொழிற்சாலைகளின் மூலம் ஒரு லட்சத்திற்கும் அதிகமான நபர்கள் வேலைவாய்ப்பு பெறுவதுடன் அவர்களில் 80 சதவீதம் பேர் ஊரகப் பகுதிகளைச் சார்ந்த பெண்களாக இருப்பார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் தோல் அல்லாத காலணி உற்பத்தி துறையில் நாட்டிலேயே அதிக வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்திட்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. இந்த உற்பத்தித் துறையில் இவ்வருடம் 10,000 நபர்கள் வேலைவாய்ப்பு பெற்றிடும் வகையில் மதுரை மாவட்டம் மேலூரிலும், 10,000 நபர்கள் வேலைவாய்ப்பு பெற்றிடும் வகையில் கடலூரிலும் இரண்டு காலணி தொழிற்பூங்காக்கள் ரூ.250 கோடியில் அமைக்கப்படும். மேலும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் காலணி திறன் பயிற்சி மையம் ஒன்றை சிப்காட் நிறுவனம் நிறுவிடும்.

தமிழ்நாட்டை உலகளாவிய கப்பல் கட்டும் மையமாக நிறுவிட 'தமிழ்நாடு கடல் போக்குவரத்து உற்பத்திக் கொள்கை 2025' ஒன்றை அரசு அறிமுகப்படுத்தும். கப்பல் மற்றும் படகு வடிவமைப்பு மற்றும் கப்பல் சட்டகம் கட்டுருவாக்கம் மற்றும் கப்பல் இயந்திர உற்பத்தி ஆகிய துறைகளில் முதலிடு மற்றும் புத்தாக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கங்களைக் கொண்டு இப்புதிய கொள்கை அமைந்திடும் இந்தத் தொழிலின் வருகையின் மூலம் கடலூர் மற்றும் தூத்துக்குடி போன்ற மாவட்டங்களில் 30000 வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும். மேலும் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை வளர்ச்சிக்கும் இக்கொள்கை வித்திடும்.

உயிரி தொழில்நுட்ப துறையில் முன்னணி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன. உயிரி தொழில்நுட்ப சூழலமைப்பை ஊக்குவிப்பதற்காகவும் உயிரியல் மருந்து மற்றும் நோய் தீர்வியல் போன்ற வளர்ந்து வரும் துறைகளில் தமிழ்நாட்டை முன்னிலைப்படுத்தவும். அதிநவீன உயிர் அறிவியல் பூங்கா ஒன்று சென்னைக்கு அருகில் உருவாக்கப்படும். இந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறைக்கு ரூ.3,915 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ரூ.500 கோடியில் தமிழ்நாடு செமி கண்டக்டர் இயக்கம் அறிமுகம்




தமிழ்நாடு கடந்த இரண்டு ஆண்டுகளாக தொழில்துறையில் அதிக அளவிலான முதலீடுகளை ஈர்த்து வருகிறது. தேசிய ஏற்றுமதியில் 33 சதவித பங்களிப்புடன் இந்தியாவின் மிகப்பெரும் மின்னணுப் பொருட்களுக்கான ஏற்றுமதிச் சூழல் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. 2020-21ம் ஆண்டில் 1.66 பில்லியன் டாலராக இருந்த மாநிலத்தின் மின்னணு ஏற்றுமதி 2023-24ம் ஆண்டில் 9.56 பில்லியன் டாலராக அதிவேக வளர்ச்சி அடைந்துள்ளது.

மின்னணுப் பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை பெற்றிட பல முயற்சிகளை அரசு எடுத்து வருகிறது.

அதன் அடுத்தகட்டமாக, தமிழ்நாடு செமி கண்டக்டர் இயக்கம்-2030 எனும் ஐந்தாண்டுகாலத் திட்டம் ரூ.500 கோடி மதிப்பீட்டில் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்படும். செமி கண்டக்டர் உயர்திறன் வடிவமைப்பு மற்றும் பரிசோதனை மையம் ஒன்று சென்னையில் முன்னணி தொழில் மற்றும் கல்வி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் ரூ.100 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும். உலக அளவில் தலைசிறந்த செமி கண்டக்டர் வடிவமைப்பு நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டுப் புத்தொழில் நிறுவனங்கள் தங்கள் வடிவமைப்பு மையங்களை தமிழ்நாட்டில் அமைத்திட ஊக்கம் அளிக்கப்படும்.

கோவை-குலூர் பகுதியில் 100 ஏக்கர் பரப்பளவிலும், பல்லடம் அருகே 100 ஏக்கர் பரப்பளவிலும் செமி கண்டக்டர் உற்பத்திக்கான இயந்திரத் தொழிற் பூங்காக்கள் உருவாக்கப்படும். அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா மற்றும் தைவானிய நிறுவனங்கள் இணைந்து அமைக்கவிருக்கும் இந்தத் தொழிற்பூங்காக்கள் கோவை மண்டலத்தின் பொருளாதார வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும்.

## ரூ.50 கோடியில் சென்னையில் திறன்மிகு மையம்




உயர்நுட்ப வே... வாய்ப்புகளை... தமிழ்நாட்டு ... ஞர்களுக்கு ஏற்படுத்தி... வகை செய்யும் பொரு... சென்னையில் தமிழ்நா... மின்னணு நிறுவனம் ரூ... ஒரு திறன்மிகு மையம்... கோடியில் உருவாக்கப்... அதனைத் தொடர்ந்து, ... துணை மையங்கள் கோ... தூர், திருச்சி மதுரை ... மற்றும் திருநெல்வேலி... மண்டலங்களில் கல்வி... னங்கள் மற்றும் புத்தொ... நிறுவனங்களுடன் இ... ஆண்டுகளில் படிப்படி... வாக்கப்படும்.

தகவல் தொழில்நுட... துறையில் செயல்படும்... ழில் நிறுவனங்களுக்கு... சேவைகள் மற்றும் தர...

இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்ட

## மீன்பிடி விசைப்படகுகளுக்கு நிவாரண தொகை ரூ.8 லட்சமாக உயர்த்தப்படு...

கன்னியாகுமரி, நாகப்பட்டினம், தூத்துக்குடி, நெல்லை, ராமநாதபுரம், கடலூர், திருவாரூர், புதுக்கோட்டை, மயிலாடுத்துறை, தஞ்சாவூர், விழுப்புரம், திருவள்ளூர் செங்கல்பட்டு மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் மீன் இறங்கு தளம், மீன்பிடி வலை பின்னுதல் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் செயல்படுத்தப்படும்.

இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளின் உரிமையாளர்கள் நலன் கருதி, இலங்கையில் நெடு... மீட்க இயலாத நிலையில் உ... விசைப்படகுகளுக்கு நிவாரண... லட்சம் உயர்த்தி வழங்கிடவும்... பொருத்தப்பட்ட நாட்டு பட... நிவாரண தொகை ரூ.2 லட்ச... வழங்கிடவும் உத்தரவிடப்... இலங்கை சிறையில் வாடும் ... பங்களுக்கு வழங்கப்பட்ட ரூ.3... வித்தொகை ரூ.500 உயர்த்தி வ... இவ்வாறு அதில் கூறப்பட்டுள்...




































பாலவாக்கம், உத்தண்டி, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள குலசேகரப்பட்டினம், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கீழ்ப்புதுப்பட்டு மற்றும் கடலூர் மாவட்டத்தில் உள்ள சாமியார்பேட்டை ஆகிய 6 கடற்கரைகள் பெற்றிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

காற்று மாசுபாட்டையும் கார்பன் தடங்களையும் குறைத்திடும் நோக்கில் மாநிலப் போக்குவரத்துக் கழகங்களின் 700 டீசல் பேருந்துகளை இயற்கை எரிவாயு மூலம் இயங்கும் பேருந்துகளாக மறுசீரமைப்பு செய்திட தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய நிதியைக் கொண்டு 70 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## தமிழ்நாட்டில் 9 இடங்களில் புதிய தொழிற் பேட்டைகள்



ரூ.366 கோடியில் அமைக்கப்படும்

மாவட்டம் திருமுடிவாக்கம், விழுப்புரம் மாவட்டம் சாரம் மற்றும் நாயனூர், கரூர் மாவட்டம் நாகம்பள்ளி, திருச்சி மாவட்டம் -சூரியூர், மதுரை மாவட்டம் கருத்தபுளியம்பட்டி, ராமநாதபுரம் மாவட்டம் தனிச்சியம், தஞ்சாவூர் மாவட்டம் நடுவூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டம்-நரசிங்கநல்லூர் ஆகிய 9 இடங்களில் மொத்தம் 398 ஏக்கர் பரப்பளவில் ரூ. 366 கோடி மொத்த திட்ட மதிப்பீட்டில் புதிய தொழிற்பேட்டைகள் தமிழ்நாடு சிறு தொழில் முன்னேற்றக் கழகத்தால் (சிட்கோ) உருவாக்கப்படும். இதன் மூலம் சுமார் 17,500 நபர்கள் வேலை வாய்ப்பினைப் பெறுவர்.

மைப்புகளுக்காக பெருமளவில் மூலதனம் தேவைப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு iTNT மற்றும் தமிழ்நாடு புத்தொழில் நிறுவனத்தில் பதிவு செய்துள்ள புத்தொழில் நிறுவனங்கள் தரவு மைய சேவைகளை எளிதில் பெறும் பொருட்டு தலா ரூ. 5 லட்சம் வரையிலான தரவு மைய சேவைகளுக்கான வில்லைகளை வழங்கிடும் திட்டம் ரூ. 10 கோடியில் தமிழ்நாடு புத்தொழில் தரவு மைய சேவைத் திட்டம்' என்ற பெயரில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.

இந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறைக்கு ரூ. 13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# திருக்குறளை 45 புதிய மொழிகளில் மொழிபெயர்க்க ரூ.133 லட்சம் ஒதுக்கீடு

## அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு




**சென்னை, மார்ச் 15:** திருக்குறளை 45 புதிய மொழிகளில் மொழிபெயர்க்க ரூ.133 லட்சம் ஒதுக்கப்படும் என்று அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.

தமிழ்மொழி வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்துப் பேசிய அவர் ''வருங்காலங்களில் தமிழ் புத்தகக் கண்காட்சிகளை தமிழ்நாடு மட்டுமின்றி இந்திய பெருநகரங்களான புதுடெல்லி, மும்பை, பெங்களூரு, கொல்கத்தா, திருவனந்தபுரம் உள்ளிட்ட இந்திய நகரங்களிலும் சிங்கப்பூர், மலேசியா, துபாய் ஆகிய வெளிநாடுகளிலும் புத்தகக் கண்காட்சி நடத்த ரூ.2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது" என்று அறிவித்தார். ஆண்டுக்கு 100 புத்தகங்கள் வீதம் வருகின்ற 5 ஆண்டுகளில் 500 தமிழ்ப் புத்தகங்களை மற்ற மொழிகளில் மொழிபெயர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவித்தார்.

**தமிழ் மரபை அறிமுகம் செய்ய ரூ.10 கோடி ஒதுக்கீடு:**

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் இளைய தலைமுறையினருக்கு தமிழ் மரபை முறையாக அறிமுகம் செய்திடும் வகையில், அயலக தமிழர் நல வாரியம் மூலம் அவர்களுக்கு தமிழ் மொழி மற்றும் நாட்டுப்புறக் கலையைப் பயிற்றுவிக்கும் 100 தமிழ் ஆசிரியர்கள் மற்றும் கலைஞர்களை வைத்து நேரடி வகுப்புகளை நடத்திட ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உலக தமிழ் ஒலிம்பியாட் போட்டி:**

"தமிழின் பெருமை மற்றும் சிறப்பை உலகத் தமிழ் இளைஞர்கள் மத்தியில் கொண்டு செல்ல, தமிழ்நாடு மட்டுமின்றி இந்தியாவில் உள்ள பிற நகரங்களில் உள்ள பள்ளிகளிலும், உலகத் தமிழ் மையங்களிலும் பயிலும் மாணவர்களுக்கு கணினி வழி உலகத் தமிழ் ஒலிம்பியாட் போட்டி ஒவ்வோர் ஆண்டும் நடைபெறும். இதில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு ரூ. 1 கோடி வழங்கப்படும்" என்றும் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.

**தொல்லியல் துறைக்கான நிதி**

வரும் நிதி ஆண்டில் தொல்லியல் ஆராய்ச்சி மற்றும் அறிவியல் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ரூ. 7 கோடி நிதி ஒதுக்கப்படும் என்று நிதியமைச்சர் அறிவித்துள்ளார். மேலும், "தென்கிழக்கு ஆசியா, மத்தியத் தரைக்கடல், அரேபிய தீபகற்பம், ரோமப் பேரரசு பகுதிகளுடன் வைத்துக்கொண்ட கடல் வழி வணிகம் தொடர்பாக ஆழ்கடல் அகழ்வாய்வுகளை தமிழ்நாடு கடற்கரைப் பகுதிகளில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன் முதல்கட்டமாக இந்த ஆண்டு தொல்லியல் ஆய்வாளர்களின் அறிவுரைப்படி காவிரிப்பூம்பட்டினம் முதல் நாகப்பட்டினம் வரை ஆழ்கடல் அகழ்வாய்வு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது" என்று அறிவித்தார். ஐம்பொன்னால் ஆன இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட செப்புத் திருமேனிகள் எழும்பூர் அருங்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளன. அதன் சிறப்பை வெளிநாட்டினரும் ரசிக்கும் வகையில், மரபுசார் கட்டட அமைப்பில் தனியாக காட்சி அரங்கம் ஒன்று எழும்பூர் அருங்காட்சியகத்தில் அமைக்க ரூ. 40 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**நகராட்சி நிர்வாகம்**

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ள பணிகளுக்காக ரூ. 2000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் 6483 கி.மீ. நீளமுள்ள சாலைகளை ரூ. 3750 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியில் கடும் போக்குவரத்து நெரிசலை தடுக்கும் ஒரு பகுதியாக வேளச்சேரி மற்றும் கிண்டியில் வசிக்கும் 7 லட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் வேளச்சேரி பிரதான சாலை துவங்கி, குருநானக் கல்லூரி சந்திப்பு வரை 3 கி.மீ. நீளத்திற்கு ரூ. 310 கோடி மதிப்பில் மேம்பாலம் கட்டப்படும். ரயில்வே துறையுடன் இணைந்து கொருக்குப்பேட்டை ரயில்வே மேம்பாலம் ரூ. 70 கோடி மதிப்பில் கட்டப்படும். கொடுங்கையூர் குப்பைக் கொட்டும் வளாகத்தில் உயிரி எரிவாயு நிலையம் - ரூ. 3450 கோடி சென்னை பெருநகர மாநகராட்சியின் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் உயிரி எரிவாயு நிலையம், இயற்கை உரம் தயாரிக்கும் நிலையம், தானியங்கி பொருள் மீட்பு மையம் மற்றும் 21 மெகாவாட் திறன் கொண்ட திடக் கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் பணிக்காக ரூ. 3450 கோடி திட்டக் காலத்திற்கான மதிப்பீட்டில் தொடங்கப்படும்.




### மகளிர் நலன்

விடியல் பயணம் என்பது கீழ் மகளிர் கட்டணம் இல்லாமல் பயணம் செய்ய அறிமுகம் செய்யப்பட்ட திட்டமாகும். அந்த ஆண்டு அத்திட்டத்திற்கான மானியத் தொகை ரூ. 3600 கோடியாக அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நிதியாண்டில் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 37 ஆயிரம் கோடி அளவுக்கு வங்கிக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம், ஈரோடு, கரூர் மற்றும் இராணிப்பேட்டை உள்ளிட்ட 10 இடங்களில் புதிதாக தோழி மகளிர் விடுதிகள் கட்ட ரூ. 77 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




**சென்னையில் ரூ.100 கோடியில் அறிவியல் மையம்**

# உயர்கல்வித் துறைக்கு ரூ.8,494 கோடி ஒதுக்கீடு




மாணவர்களிடையே அறிவியல் சிந்தனையை வளர்த்திடவும், இளைய தலைமுறையினருக்கு புதிய தொழில்நுட்ப வசதிகளைத் தொடர்ந்து அறிமுகம் செய்திடும் நோக்கோடு, சிங்கப்பூர் அறிவியல் மையத்துடன் இணைந்து நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட சென்னை அறிவியல் மையம் உருவாக்கப்படும். இதில் அனைத்து வசதிகளுடன் கூடிய பிரமாண்ட முறையில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் மற்றும் அரசு பங்களிப்புடன் உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டில் சென்னை மற்றும் கோவையில் இரண்டு அடிப்படை அறிவியல் மற்றும் கணித ஆராய்ச்சி மையங்களை இந்திய அறிவியல் நிறுவனம், டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் போன்ற நாட்டின் புகழ்பெற்ற ஆய்வு நிறுவனங்களுடன் இணைந்து உருவாக்கிட ரூ.100 கோடி நிதி வழங்கப்படும். புகழ்பெற்ற அறிவியல் அறிஞர்களின் வழிகாட்டுதலுடன் முனைவர் மற்றும் முதுமுனைவர் பட்டப்படிப்பு மூலம் உயர் அறிவியல் ஆராய்ச்சிகள் மட்டுமின்றி மாணவரிடையே ஆழமான அறிவியல் மனப்பான்மையை உருவாக்கிடவும் இம்மையங்கள் முக்கியப் பங்காற்றிடும். இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் உயர்கல்வித் துறைக்கு ரூ.8,494 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2025-26ம் நிதியாண்டில்**

# ஒரு லட்சம் மாணவர்களுக்கு ரூ.2,500 கோடி கல்விக்கடன்



தமிழ்நாட்டு மாணவர்கள் உயர் கல்வி கனவை நனவாக்கம் வகையில் 2025-26ம் நிதியாண்டில் ஒரு லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு ரூ.2,500 கோடி அளவுக்கு பல்வேறு வங்கிகள் கல்வி கடன் வழங்குவதை இந்த அரசு உறுதி செய்யும் என்று நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் நேற்று நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்த பட்ஜெட்டில் கூறியிருப்பதாவது:

அரசு பள்ளி மாணவர்களின் உயர்கல்வி சேர்க்கையை உயர்த்திடும் வகையில் கடந்த நிதியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட 'தமிழ்ப்புதல்வன்' திட்டத்தில் 3.80 லட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். அரசு பள்ளி மாணர்களை சாதனையாளர்களாக உருவாக்கிடும் பொருட்டு அவர்கள் தங்களுடைய பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி படிப்புகளை வெளிநாட்டிலுள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் பயின்றிட உதவித்தொகை அளிக்கும் வகையில் ரூ.10 கோடி நிதி வழங்கப்படும். தமிழ்நாட்டு மாணவர்களின் உயர் கல்வி கனவை நனவாக்கும் வகையில் தேவையின் அடிப்படையில் 2025-26ம் ஆண்டில் ஒரு லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு ரூ.2,500 கோடி அளவுக்கு பல்வேறு வங்கிகள் கல்வி கடன் வழங்குவதை இந்த அரசு உறுதி செய்திடும்.



# எரிசக்தித் துறைக்கு ரூ.21,178 கோடி ஒதுக்கீடு

2030ம் ஆண்டிற்குள் 100 பில்லியன் யூனிட் கூடுதல் புதுப்பிக்கத்தக்க பசுமை ஆற்றலை தமிழ்நாட்டில் உருவாக்கிட உரிய செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. அந்த இலக்கை நோக்கிய பசுமைப் பயணத்தின் முதற்கட்டமாக வெள்ளிமலைப் பகுதியில் 1,100 மெகாவாட் திறன் மற்றும் ஆழியாறு பகுதியில் 1800 மெகாவாட் திறன் கொண்ட நீரேற்று மின் திட்டங்கள் மொத்தம் ரூ.11,721 கோடி முதலீட்டில் பொதுத்துறை தனியார் பங்கேற்புடன் உருவாக்கப்படும்.

சூரிய ஒளி நேரத்திற்குப் பின்னரும் நாள் முழுவதும் தூய்மையான புதுப்பிக்கப்பட்ட மின்சாரம் வழங்கும் நோக்கத்துடன் எதிர்வரும் 2025-26ம் ஆண்டில் மட்டும். மணிக்கு 4,000 மெகாவாட் திறன் கொண்ட மின்கலன் சேமிப்பு அமைப்புகள் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த வரவு செலவத் திட்ட மதிப்பீடுகளில் எரிசக்தித் துறைக்கு 21,178 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஒன்றிய அரசு நிதி கொடுக்காவிட்டால் என்ன**

# பள்ளிக் கல்வித்துறைக்கு ரூ.46,760 கோடி நிதி ஒதுக்கீடு



பள்ளிக் கல்வித்துறையில் இடம் பெற்ற முக்கிய அறிவிப்புகள்: முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திட்டம் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மேலும் 3.14 லட்சம் மாணவர்களுக்கு விரிவுபடுத்தப்படும். ரூ.600 கோடி நிதி ஒதுக்கீடு.

பேராசிரியர் அன்பழகன் திட்டத்திற்கு ரூ.1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும். 2000 பள்ளிகளில் ரூ.160 கோடியில் கணினி ஆய்வகங்கள் மேம்படுத்தப்படும். 880 உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் ரூ.56 கோடியில் தரம் உயர்த்தப்படும். 2676 பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் ரூ.65 கோடியில் அமைக்கப்படும்.

1721 முதுகலை ஆசிரியர்களும், 841 பட்டதாரி ஆசிரியர்களும் நேரடி நியமணம் மூலம் பணியமர்த்தப்படுவார்கள். நான் முதல்வன் - கல்லூரிக் கனவு திட்டத்தின் மூலம் 2000 அரசுப் பள்ளி மாணவர்கள் அகில இந்திய அளவில் உள்ள புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கப்படுவார்கள். ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு.

ஈரோடு - சத்தியமங்கலம் - தாளவாடி, தருமபுரி - பாப்பிரெட்டிப்பட்டி, கள்ளக்குறிச்சி - சின்னசேலம், கல்வராயன் மலை, கிருஷ்ணகிரி - தளி, நீலகிரி - கோத்தகிரி, திருவண்ணாமலை - ஜவ்வாது மலை ஆகிய தொலைதூர மலைப் பகுதிகளில் உள்ள 14 உயர்நிலைப் பள்ளிகள் தரம் உயர்த்தப்படும். சேலம், கடலூர், திருநெல்வேலி மாவட்டத்தில் போட்டித் தேர்வுக்கு தயாராகும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் நூலகங்கள் அமைக்கப்படும்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.3676 கோடி நிதி ஒதுக்கீடு. பள்ளிக் கல்வித்துறைக்கு ரூ.46,767 கோடி நிதி ஒதுக்கீடு.

"புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு ஏற்றுக் கொள்ளாததால் ரூ.2,152 கோடியை ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு விடுவிக்காமல் வஞ்சித்து வருகிறது. ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கான உரிய நிதியை விடுவிக்காவிட்டாலும் மாணவர்களின் கல்வி ஒருதுளியேனும் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக மாநில அரசு தனது சொந்த நிதி ஆதாரங்களில் இருந்து விடுவித்துள்ளது.

# வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு ரூ.7,718 கோடி ஒதுக்கீடு




தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக, பழுதடைந்த நிலையில் உள்ள 6,424 குடியிருப்புகள் ரூ.1,148 கோடி மதிப்பீட்டில் மறு கட்டுமானம் செய்யப்பட்டு வருகின்றன. இதைத் தொடர்ந்து அடுத்த இரு ஆண்டுகளில் 5,256 குடியிருப்புகள் ரூ.1051 கோடி மதிப்பீட்டில் மறு கட்டுமானம் செய்யப்படும். குறைந்த வருமானம் கொண்ட வகையினருக்கான விட்டுவசதித் தேவையை நிறைவு செய்திடவும் தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு புதிய குடியிருப்புகளை ஏற்படுத்திடவும் உதவிடும் வகையில் தொகுப்பு நிதியம் ஒன்று உருவாக்கப்படும். இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு ரூ.7,718 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



இந்தியாவிலேயே விளையாட்டு துறையில் முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்தும் நோக்கில் இந்த அரசு கடந்த 4 ஆண்டுகளில் விளையாட்டு மேம்பாட்டிற்காகவும், விளையாட்டு வீரர்களின் நலனுக்காகவும் பல்வேறு முன்னோடித்திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தியாவில் மாறுபட்ட நிலப்பரப்புகள் மற்றும் ஏராளமான இயற்கை எழில் கொஞ்சும் இடங்கள் மலையேற்ற விளையாட்டு ஆர்வலர்களுக்கு ஏற்றதாக உள்ளன. பயிற்சிபெற்ற மலையேற்ற வீரர்கள் இந்தியாவில் மட்டுமின்றி, உலகெங்கும் பயணம் செய்து சிகரம் தொட விழைகின்றனர். எனவே பல்வேறு மலையேற்ற வீரர்களின் பெருங்கனவான, உலகில் உயரமான எவெரஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை புரியும் தமிழ்நாட்டை சார்ந்த வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.10 லட்சம் ஊக்கத்தொகை வழங்கப்படும். அதன்படி இந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறைக்கு ரூ.572 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறைக்கு ரூ.572 கோடி ஒதுக்கீடு



**பால் பொருட்கள் சந்தைப்படுத்துதலை ஊக்குவிக்க**

# திருவண்ணாமலையில் ரூ.10 கோடியில் சிப்பமிடும் நவீன இயந்திரம்

சேலம் ஆவின் பால் பண்ணையில் நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை ரூ.15 கோடியிலும், ஈரோடு மாவட்டத்தில் பால்பண்ணை இயந்திரங்களை நவீன மயமாக்கலுக்கு ரூ.10 கோடியிலும், சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் பால்பண்ணைகளில் நவீன பால் அளவிடும் கருவிகள், நவீன பால் தகவல் சேகரிப்பான் ஆகியவை ரூ.5 கோடியில் நிறுவப்படும். மேலும் பால் பொருட்கள் சந்தைப்படுத்துதலை ஊக்குவிக்க ரூ.10 கோடி செலவில் திருவண்ணாமலை மாவட்டத்தில் வெண்ணெய் மற்றும் பால் பவுடர் சிப்பமிடும் நவீன இயந்திரம் அமைக்கப்படும்.




















# 2025-26 ரூ தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை
## எல்லார்க்கும் எல்லாம்









## பெண்கள் பெயரில் சொத்துகள் வாங்கினால் 1% பதிவுக் கட்டணம் குறைப்பு



■ சமூகத்தில் மட்டுமன்றி, அவரவர் குடும்பங்களிலும் மகளிருக்கான சம பங்கை உறுதி செய்திடும் வகையில், வரும் 1.4.2025 முதல் 10 லட்சம் ரூபாய் வரையிலான வீடு, மனை, விவசாய நிலம் உள்ளிட்ட அனைத்து அசையா சொத்துக்கள், பெண்கள் பெயரில் பதிவு செய்யப்பட்டால் அத்தகைய ஆவணங்களுக்கு பதிவு கட்டணம் ஒரு சதவீதம் குறைக்கப்படும்.

■ தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்கு மேலும் அதிகரிக்க அடுத்து வரும் 5 ஆண்டுகளில் ஒரு லட்சம் மகளிரை தொழில்முனைவோராக உயர்த்திடும் பெருந்திட்டம் ஒன்று செயல்படும். இத்திட்டத்தின் கீழ் 20 சதவீத மானியத்துடன் ரூ.10 லட்சம் வரை வங்கி கடன் பெற்று, மகளிர் பல்வேறு தொழில்கள் தொடங்கிட உரிய திறன் மேம்பாட்டு பயிற்சிகள், விற்பனைக்கான ஆலோசனைகளும் வழங்கப்படும். இத்திட்டத்திற்கான மானிய நிதியுதவிக்கென ரூ.225 கோடி இந்த ஆண்டு ஒதுக்கப்படும்.




## ஈட்டிய விடுப்பு நாட்களில் 15 நாட்கள் வரை சரண் செய்து பணம் பெறலாம்

### பட்ஜெட்டில் அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு அதிரடி சலுகைகள்




■ கோவிட் பெருந்தொற்று காலத்தில் தமிழ்நாடு அரசின் நிதிநிலையின் மீது ஏற்பட்ட பெருஞ்சுமை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த அரசு அலுவலருக்கான ஈட்டிய விடுப்பு சரண் செய்யும் நடைமுறை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றனர். அது பரிசீலிக்கப்பட்டு, அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள், ஈட்டிய விடுப்பு நாட்களில் 15 நாட்கள் வரை 1.4.2026 முதல் சரண் செய்யும் பணப்பலன் பெறுவதற்கான நடைமுறை மீண்டும் செயல்படுத்தப்படும். இதற்குரிய அரசாணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும். இதன்மூலம் சுமார் 9 லட்சத்திற்கும் மேற்பட்ட அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பெறுவார்கள்.

■ அரசு அலுவலர்கள் விபத்தில் இறந்தாலோ, நிரந்தர ஊனம் அடைந்தாலோ தனி நபர் விபத்து காப்பீட்டு தொகை ரூ.1 கோடி நிதி வழங்கிட வங்கிகள் முன்வந்துள்ளன. மகளின் உயர் கல்வி உதவித்தொகையாக ரூ.10 லட்சம் வரை வங்கிகள் வழங்கும். ஆயுள்காப்பீட்டு தொகையாக ரூ.10 லட்சம் வங்கிகள் வழங்கும்.

■ தமிழ்நாட்டின் பல்வேறு கலை, அறிவியல், பொறியியல், வேளாண்மை மற்றும் மருத்துவம் உள்ளிட்ட அனைத்து கல்லூரிகளிலும் பயின்று வரும் மாணவர்களுக்கு உயர் தொழல்நுட்ப சாதனங்களை வழங்கிட திட்டமிட்டுள்ளது.

முதற்கட்டமாக அடுத்த 2 ஆண்டுகளில் 20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு அவரவர் விருப்பத்தின் அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் கைக்கணினி அல்லது மடிக்கணினி வழங்கப்படும். இதற்காக இந்த நிதியாண்டில் ரூ.2,000 கோடி நிதி ஒதுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## புதுமைப்பெண் திட்டத்துக்கு ரூ.420 கோடி ஒதுக்கீடு

புதுமைப் பெண் திட்டத்தின் கீழ், தற்போது நான்கு லட்சத்து ஆறாயிரம் மாணவியர்கள் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் பெற்றுப் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதற்குப் பின். உயர்கல்வியில் சேரும் மாணவியர்களின் எண்ணிக்கை சென்ற கல்வியாண்டில் 19 சதவீதம் அதிகரித்து, கூடுதலாக 40.276 மாணவியர் கல்லூரிகளில் சேர்ந்துள்ளனர். வரும் நிதியாண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்திட ரூ. 420 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

36 ஆண்டுகளுக்கு முன்னர் கலைஞரால் தொடங்கப்பட்டது தான் மகளிர் சுய உதவிக்குழு திட்டம் தற்போது 476 லட்சம் மகளிர் திட்ட சுயஉதவிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. சுய உதவிக் குழு இயக்கத்தில் இதுவரை இணைந்திடாத மகளிர் மற்றும் விளிம்பு நிலை வாழ் குடும்ப உறுப்பினர்களைக் கொண்டு, 10,000 புதிய சுயஉதவிக் குழுக்கள் வரும் நிதியாண்டில் உருவாக்கப்படும். மேலும், வரும் நிதியாண்டில் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ. 37,000 கோடி அளவிற்கு வங்கிக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



## பாஜ வெளிநடப்பு...



▶ சட்டப்பேரவையில் இருந்துவெளி நடப்பு செய்த பாஜ எம்எல்ஏக்கள்.

## ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்டத்திற்காக ரூ.3,676 கோடி ஒதுக்கீடு

### முதலமைச்சர் காலை உணவு திட்டத்திற்கு ரூ.600 கோடி ஒதுக்கீடு




முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தில் 17.53 லட்சம் மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். மேலும் 3.14 லட்சம் மாணவர்கள் பயன் பெறும் வகையில் வரும் கல்வியாண்டு முதல் இத்திட்டம் விரிவுப்படுத்தப்படும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக வரும் நிதியாண்டில் ரூ.600 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

குழந்தைகள் நல மையங்களில் அடிப்படை வசதிகளை உறுதி செய்திடும் வகையில் வரும் நிதியாண்டில் ரூ.83 கோடி செலவில் வாடகைக் கட்டங்களில் இயங்கி வரும் 500 குழந்தைகள் நல மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும். ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்டத்திற்காக வரும் நிதியாண்டில் ரூ.3676 கோடி ஒதுக்கப்படும். இந்த வரவு செலவு திட்ட மதிப்பீடுகளின் சமூக நலம் மற்றும் மகளிர் உரிமை துறைக்கு ரூ.8597 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2025-26ம் ஆண்டுக்கான வருவாய் வரவினங்கள் 3,31,569 கோடி ரூபாயாக அரசு மதிப்பீடு செய்துள்ளது. மொத்த வருவாய் வரவினங்களில் 75.3 சதவீதம் மாநிலத்தின் சொந்த வருவாயாகும். மீதமுள்ள 24.7 சதவீதம் ஒன்றிய வரிகளில் பங்கு மற்றும் ஒன்றிய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள் ஆகும்.

| வருவாயினங்கள் | வருவாய் (கோடியில்) |
|---|---|
| மாநிலத்தின் சொந்த வரி வருவாய் | ரூ.2,20,895 |
| மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய் | ரூ.28,818 |
| ஒன்றிய அரசிடம் இருந்து பெறும் உதவி மானியங்கள் | ரூ.23,834 |
| மத்திய வரிகளில் பங்கு | ரூ.58,022 |

மாநிலத்தின் சொந்த வரி வருவாய்: அரசின் சொந்த வரி வருவாய் 2025-26ம் ஆண்டில் 14.6 சதவீதம் உயருமென மதிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் முக்கிய கூறுகள் பின்வருமாறு:


| கூறுகள் | வருவாய் அளவு (சதவீதத்தில்) |
|---|---|
| வணிக வரிகள் | 74.2 |
| முத்திரைத் தாள்களும் பத்திரப் பதிவுகளும் | 11.8 |
| மாநில ஆயத்தீர்வை | 5.9 |
| வாகனங்கள் மீது வரிகள் | 6.1 |
| மற்றவை | 2 |



▶ சட்டப்பேரவையில் தமிழ்நாடு அரசின் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டதை நாகர்கோவில் அண்ணா பேருந்து நிலையத்தில் நேற்று நேரலையாக பெரிய திரையில் ஒளிபரப்பப்பட்டது. இதை ஏராளமான பெண்கள் திரண்டு ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

## சிறுபான்மையினர் நலத்துறைக்கு ரூ.1,563 கோடி நிதி ஒதுக்கீடு

### சாதிவாரியான கணக்கெடுப்பினை ஒன்றிய அரசு நடத்த தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தும்



தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரியான கணக்கெடுப்பினையும் இணைந்து ஒன்றிய அரசு நடத்திட வேண்டும் என்று இவ்வரவு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. அதிகமான மாணவர் சேர்க்கையுள்ள 27 கல்லூரி மாணவர் விடுதிகள் மற்றும் கடந்த 4 ஆண்டுகளில் கல்லூரி விடுதிகளாக தரம் உயர்த்தப்பட்ட 36 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் கல்லூரி மாணவர்கள் விடுதிகள் அடுத்த 2 ஆண்டுகளில் கட்டமைப்பு வசதி மேம்பாடு சிறப்பு பழுது நீக்கம், புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தரம் உயர்த்தி புதுப்பொலிவுடன் திகழ புதிய திட்டம் வகுக்கப்படும். பள்ளி படிப்பு உதவித் தொகை வழங்குவதற்காக ரூ.146 கோடியும், பள்ளி மேற்படிப்பு உதவி தொகை வழங்குவதற்காக ரூ.335 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

சிறுபான்மையினரின் சமூக பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்கென தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது இதுவரை 159 கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மை நிலை சான்றிதழ் வழங்கப்பட்டது மட்டுமன்றி, இவற்றுள் 103 கல்வி நிறுவனங்கள் நிரந்தர சான்றிதழும் பெற்றுள்ளன.

ஒன்றிய அரசு சிறுபான்மையின மாணவர்களுக்கு வழங்கி வந்த கல்வி உதவி தொகையினை கடந்த 2022ம் ஆண்டு முதல் நிறுத்திவிட்டாலும், தமிழ்நாடு அரசு வக்பு வாரியத்திற்கு வழங்கிய ரூ.12 கோடி நிதியை கொண்டு ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட 1 முதல் 8ம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் சிறுபான்மையின மாணவியர்களுக்கு கல்வி உதவி தொகை வழங்கப்பட்டு வருகிறது.

பழமை வாய்ந்த பள்ளிவாசல்களையும், தர்காக்களையும் பழுதுபார்ப்பதற்கும் சீரமைப்பதற்கும் வரும் நிதியாண்டில் ரூ.10 கோடி மானியம் வழங்கப்படும். அதேபோன்று பழமையான தேவாலயங்களை பழுதுபார்ப்பதற்கும், சீரமைப்பதற்கும் இந்த ஆண்டு ரூ.10 கோடி மானியம் வழங்கப்படும். இந்த வரவு செலவு திட்ட மதிப்பீடுகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைக்கு ரூ.1,563 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு ரூ.21,906 கோடி ஒதுக்கீடு

### கருப்பை வாய் புற்றுநோயை தடுப்பதற்கான தடுப்பூசிக்கு ரூ.36 கோடி நிதி



காஞ்சிபுரம் மாவட்டம் காரப்பேட்டையில் உள்ள அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்தவமனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தை மாநில அளவிலான முதன்மை புற்றுநோய் மையமாக அறிவிக்கப்படும். அதனை தரம் உயர்த்தி உலகத்தரம் வாய்ந்த புற்றுநோய் கண்டறிதல் மற்றும் கிகிச்சை, நோய் ஆதரவு சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு சேவைகளை 800 படுக்கைகளுடன் கூடிய தன்னாட்சி பெற்ற மையமாக செயல்படும் வகையில் அடுத்த 2 ஆண்டுகளில் ரூ.120 கோடி நிதி வழங்கப்படும்.

ஆரம்ப நிலையிலேயே புற்று நோய் கண்டறிதலை அறிமுகப்படுத்திட இடைநிலை மற்றும் மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளுக்கு தேவையான நவீன மருத்துவ கருவிகள் மற்றும் மனிதவளம் ஆகியவற்றை ரூ.110 கோடி மதிப்பீட்டில் அடுத்த 3 ஆண்டுகளில் வழங்கிட அரசு திட்டமிட்டுள்ளது.

கருப்பை வாய் புற்றுநோயை தடுக்கவும் தமிழ்நாட்டில் அந்நோயினை அறவை அகற்றிடவும் தப்பூசியை 14 வயதுடைய அனைத்து பெண் குழந்தைகளுக்கும் படிப்படியாக வழங்க ரூ.36 கோடி நிதி ஒதுக்கப்படும்.

அனைத்து மகளிரும் பயன்பெறும் வகையில் நடமாடும் மருத்துவ குழுக்கள் மூலம், முக்கிய புற்றுநோய்கள் மற்றும் இருதய நோய் ஆகியவற்றை கண்டறிவதற்கான சோதனைகள் மற்றும் வாழ்க்கைமுறை மாற்றங்கள் குறித்து ஆலோசனை வழங்ககுதல் ஆகிய பல்வேறு சேவைகளை வழங்கிட ரூ.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய நல்வாழ்வு குழுமம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு ரூ.2,754 கோடியும், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்திற்கு ரூ.1,092 கோடியும், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்திற்கு ரூ.1,461 கோடியும், அவசர ஊர்தி சேவைகளுக்கு ரூ.348 கோடியும் இந்த வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்த வரவு செலவு திட்ட மதிப்பீடுகளில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு ரூ.21,906 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### பேரவை எந்த துறைக்கு எவ்வளவு நிதி?

| துறை | நிதி (கோடியில்) |
|---|---|
| காவல் | ரூ.13,342 |
| போக்குவரத்து | ரூ.12,965 |
| நீர்வளம் | ரூ.9,460 |
| சமூகநலன் | ரூ.8,597 |
| தொழில், குறு, சிறு, நடுத்த நிறுவனங்கள் | ரூ.5,833 |
| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் | ரூ.3,924 |
| கல்வி | ரூ.55,261 |
| நகர்ப்புற வளர்ச்சி | ரூ.34,396 |
| ஊரக வளர்ச்சி | ரூ.29,465 |
| மக்கள் நல்வாழ்வு | ரூ.21,906 |
| எரிசக்தி | ரூ.21,178 |
| நெடுஞ்சாலை | ரூ.20,722 |

## ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத்துறைக்கு ரூ.3,924 கோடி

ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தர 'அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டு திட்டம்' செயல்படுத்தப்பட்டுகிறது இந்த திட்டத்தில் 120 கிராம அறிவுசார் மையங்கள் ரூ.117 கோடி மதிப்பீட்டில் கட்டுப்பட்டு வருகின்றன. இந்த திட்டத்திற்கு 2025-26 நிதியாண்டில் ரூ.280 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உலக புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் வாய்ப்பை வழங்க 'அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்தின்' கீழ் 2025-26ம் நிதியாண்டில் ரூ.65 கோடி நிதி ஒதுக்கப்படும். தமிழ்நாட்டில் 37 வகை தொல்குடியினா் தனிச்சிறப்பு மிக்க அடையாளத்துடன் கிழக்கு மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைகளிலும், சமவெளி பகுதிகளிலும் வாழ்கின்றனர். இவர்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்காக ஆண்டொன்றிற்கு ரூ.250 கோடி நிதி ஒதுக்கீட்டில் 4 ஆண்டுகளுக்கு ரூ.1000 கோடி மதிப்பீட்டில் 'தொல்குடித் திட்டம்' உருவாக்கி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு உயர்கல்விக்கான உதவித்தொகை வழங்குவதற்காக இந்த வரவு செலவு திட்டத்தில் ரூ.733 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வரவு செலவு திட்ட மதிப்பீடுகளில் அதிதிராவிட மாற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு ரூ.3,924 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## உலக தமிழ் ஒலிம்பியாட்டில் வெற்றி பெறுபவர்களுக்கு ரூ.1 கோடி பரிசு

தமிழ் செம்மொழி மற்றும் தமிழ் பண்பாட்டின் சிறப்பினை உலக தமிழ் இளைஞர்களிண் பரவச்செய்ய தமிழ்நாடு மட்டுமல்லாமல் இதர இந்திய நகரங்களில் உள்ள பள்ளிகள் மற்றும் உலக தமிழ் மையங்களில் பயிலும் மாணவர்களும் பங்கேற்கும் வகையில் கணினி தேர்வு முறையில் ' உலக தமிழ் ஒலிம்பியாட்' போட்டி இனி ஆண்டுதோறும் நடத்தப்படும். உலக அளவிலான வெற்றியாளர்கள் மட்டுமல்லாமல் மாநில அளவில் சிறப்பிடம் பெறும் மாணவர்களுக்கான மொத்த பரிசு ரூ.1 கோடி வழங்கப்படும்.

தமிழ் செம்மொழியின் தொன்மையை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்வதற்காக அகரம்-மொழிகளின் அருங்காட்சியகம் மதுரை உலக தமிழ்சங்க வளாகத்தில் அமைக்கப்படும்.




### பெற்றோர் இழந்த குழந்தைகள்
## 18 வயது வரை பள்ளி படிப்பு தொடர மாதம் ரூ.2 ஆயிரம் உதவி தொகை

மிகவும் வறிய நிலையில் உள்ள சுமார் 50 ஆயிரம் குடும்பங்களில், குழந்தைகள் தங்களின் இரண்டு பெற்றோரையும் இழந்து தங்களது உறவினர்களின் பாதுகாப்பில் வளர்ந்து வருவது தெரியவந்துள்ளது. இக்குழந்தைகளின் 18 வயது வரையிலான பள்ளி படிப்பு வரை இடைநிற்றல் இன்றி அவர்கள் கல்வியை தொடர மாதம் ரூ.2 ஆயிரம் உவித்தொகை வழங்கப்படும். பள்ளி படிப்பு முடித்தவுடன் கல்லூரி கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.





2025-26 தமிழ்நாடு
நிதிநிலை அறிக்கை
எல்லார்க்கும் எல்லாம்


## சொந்த வரி வருவாயில் ஆதிக்கம் செலுத்தும் வணிகவரி – பதிவுத் துறை

எதிர்வரும் நிதியாண்டிலும் தமிழ்நாட்டுக்கான சொந்த வரி வருவாயை ஈட்டித் தரும் துறைகளில் வணிகவரிகள், முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவுத் துறையே ஆதிக்கம் செலுத்தவுள்ளது. புள்ளிவிவரங்களுடன் தகவல்கள்:– (ரூபாய் கோடியில்)

| மாநிலத்தின் சொந்த வரி வருவாய் | வரி அல்லாத வருவாய் | மத்திய அரசிடம் இருந்து உதவி மானியங்கள் | மத்திய வரிகளில் பங்கு |
|---|---|---|---|
| ரூ. 2,20,895 | ரூ.28,818 | ரூ.23,834 | ரூ.58,022 |

அரசின் சொந்த வரி வருவாய் எதிர்வரும் நிதியாண்டில் 14.6 சதவீதம் உயரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

### மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் முக்கிய கூறுகள்:
(புள்ளி விவரம் சதவீதத்தில்)



| | |
|---|---|
| வணிகவரிகள் | 74.2 |
| முத்திரைத் தாள்கள் பத்திரப் பதிவுகள் | 11.8 |
| மாநில ஆயத்தீர்வை | 5.9 |
| வாகனங்கள் மீது வரிகள் | 6.1 |
| மற்றவை | 2.0 |



# 10 இடங்களில் புதிய அரசு கலை, அறிவியல் கல்லூரிகள்

**சென்னை, மார்ச் 14:** தமிழகத்தில் ஆலந்தூர், குன்னூர் உள்ளிட்ட 10 இடங்களில் புதிய அரசு கலை, அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும் என நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உயர்கல்வி சேர்க்கை விகிதம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அந்தத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் குன்னூர், நத்தம், ஆலந்தூர், விக்கிரவாண்டி, செய்யூர், மானாமதுரை, முத்துப்பேட்டை, திருவிடைமருதூர், பெரம்பலூர், ஒட்டப்பிடாரம் ஆகிய 10 இடங்களில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும்.

அரசுப் பல்கலைக்கழகங்களில் நிதிப் பற்றாக்குறையைக் குறைக்கும் வகையில் அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் தொகுப்பு நிதி நல்கை ரூ. 700 கோடியாக உயர்த்தி வழங்கப்படும்.

மேலும், தமிழகத்தின் அரசுப் பல்கலைக்கழகங்களின் கல்விச் செயல்பாடுகள், ஆராய்ச்சித் திறன் மேம்பாடு, ஆசிரியர்களுக்கான தொடர் பயிற்சி, பாடத்திட்ட மேம்பாடு, தேர்வு முறை மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம் ஆகிய தளங்களில் உரிய முன்னேற்றங்களைக் கொண்டு வரும் நோக்கில் ரூ. 200 கோடி கொண்ட சிறப்புத் தொகுப்பு நிதியம் உருவாக்கப்படும்.



**புதிய படிப்புகள் அறிமுகம்...** தமிழகத்தில் உள்ள அரசு பொறியியல் கல்லூரிகளில் வளர்ந்து வரும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் தொழில் துறை தேவைகளை நிறைவு செய்யும் வகையில் செயற்கை நுண்ணறிவு, இணையப் பாதுகாப்பு, மேம்பட்ட உற்பத்தி தொழில்நுட்பம், இயந்திரவியல், மின் வாகனத் தொழில்நுட்பம், சுற்றுச் சூழல் பொறியியல் உள்ளிட்ட வளர்ந்து வரும் துறைகளில் புதிய பட்டப் படிப்புகள் வரும் கல்வி யாண்டு முதல் அறிமுகம் செய்யப்படும். இதற்காக அரசு பொறியியல் கல்லூரிகளில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் திறன்மிகு மையங்கள் முன்னணி தொழில் நிறுவனங்களுடன் இணைந்து உருவாக்கப்படும்.

அதேபோன்று அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் திறன்மிகு உற்பத்தி, இணையப் பாதுகாப்பு, உணவுத் தொழில்நுட்பம், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொழில்நுட்பம், ஆளில்லா வான்கலம் வடிவமைப்பு ஆகிய துறைகளில் புதிய பட்டயப் படிப்புகள் அறிமுகப்படுத்தப்படும்.

**கல்லூரிகளில் கூடுதலாக 15,000 இடங்கள்....** தமிழகத்தில் அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் முதல் மற்றும் இரண்டாம் சுழற்சி முறையில் மாணவர்கள் அதிகம் விரும்பித் தேர்ந்தெடுக்கும் பாடப் பிரிவுகளில் கூடுதலாக 15,000 இடங்கள் வரும் கல்வி யாண்டு முதல் தொடங்கப்படும். இந்த முயற்சிக்குத் தேவையான கட்டமைப்பு மற்றும் மனிதவளத்துக்கென ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு பொறியியல் கல்லூரிகள், கலை அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகளில் திறன்மிகு வகுப்பறைகள், நவீன ஆய்வகங்கள், மின் பதிப்புகள் கொண்ட நூலகங்கள் போன்ற உள் கட்டமைப்பு வசதிகள் ரூ. 300 கோடியில் உருவாக்கப்படும்.

## செலவினங்கள்...

எதிர்வரும் நிதியாண்டில் மொத்த வருவாய்ச் செலவினம் ரூ. 3,73,204 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டு இருக்கிறது. அதில், ஊதியங்களுக்கான செலவினமே அதிகமாக இருக்கிறது. அதன் விவரங்கள்: (ரூபாய் கோடியில்)

| செலவினம் | தொகை |
|---|---|
| வட்டி செலுத்துதல் | ரூ.70,754 |
| ஊதியங்கள் | ரூ.90,464 |
| செயல்பாடுகள் பராமரிப்புகள் | ரூ.16,972 |
| உதவித் தொகைகள் – மானியங்கள் | ரூ.1,53,724 |
| ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால பலன்கள் | ரூ.41,290 |


## முக்கியத் துறைகளுக்கான மூலதனச் செலவினம்
(ரூபாய் கோடியில்)

வரும் நிதியாண்டில் மூலதனச் செலவுகளுக்காக ரூ.57,231 கோடி செலவிடப்படவுள்ளது.

| துறை | தொகை |
|---|---|
| சாலைகள் மற்றும் பாலங்கள் | ரூ.18,197 |
| போக்குவரத்து மற்றும் எரிசக்தி | ரூ.10,973 |
| நகர்ப்புற வளர்ச்சி | ரூ.6,292 |
| குடிநீர் வழங்கல் திட்டங்கள் | ரூ.6,231 |
| நீர் நிலைகள் | ரூ.4,465 |
| கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வு | ரூ.3,851 |

## ஒரு லட்சம் மாணவர்களுக்கு ரூ.2,500 கோடி கல்விக் கடன்

தமிழகத்தில் கல்லூரி மாணவர்கள் ஒரு லட்சம் பேருக்கு ரூ.2,500 கோடி அளவுக்கு பல்வேறு வங்கிகள் கல்விக் கடன் வழங்குவதை அரசு உறுதி செய்யும் என மாநில நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அரசுப் பள்ளி மாணவர்களை சாதனையாளர்களாக உருவாக்கிடும் பொருட்டு அவர்கள் தங்களது பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை வெளிநாட்டிலுள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழங்களில் பயின்றிட உதவித் தொகை அளிக்கும் வகையில் ரூ.10 கோடி நிதி வழங்கப்படும்.

தமிழக மாணவர்களின் உயர்கல்விக் கனவை நனவாக்கும் வகையில் தேவையின் அடிப்படையில் 2025–2026–ஆம் ஆண்டில் ஒரு லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு ரூ.2,500 கோடி அளவுக்கு பல்வேறு வங்கிகள் கல்விக் கடன் வழங்குவதை தமிழக அரசு உறுதி செய்யும் என அதில் கூறப்பட்டுள்ளது.

## நகர்ப்புற அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் காலை உணவுத் திட்டம்

நகர்ப்புற பகுதிகளில் இயங்கி வரும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.




முதல்வரின் காலை உணவுத் திட்டம் வாயிலாக தமிழகத்தில் உள்ள 30,992 அரசுப் பள்ளிகளிலும், ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள 3,995 அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் ஒன்றாம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் 17.53 லட்சம் மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். இதனால், மாணவர்களின் ஊட்டச்சத்தும் கற்றல் திறனும் மேம்பட்டுள்ளது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

நாட்டிலேயே முதல் முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த வரலாற்றுச் சிறப்புமிக்கத் திட்டம், தமிழகத்தின் நகர்ப் பகுதிகளில் இயங்கி வரும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மேலும் 3.14 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் வரும் கல்வியாண்டு முதல் மேலும் விரிவுபடுத்தப்படும்.

இந்தத் திட்டத்தினைச் செல்படுத்துவதற்காக வரும் நிதியாண்டில் ரூ. 600 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9 மாவட்டங்களில் சிட்கோ தொழிற்பேட்டை

தமிழகத்தில் 9 மாவட்டங்களில் சிட்கோ சார்பில் புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கப்படவுள்ளதாக மாநில நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு வெளியாகியுள்ளது.




குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் பயன்பெறும் வகையில் காஞ்சிபுரம் மாவட்டம் திருமுடிவாக்கம், விழுப்புரம் மாவட்டம் சாரம் மற்றும் நாயனூர், கரூர் மாவட்டம் நாகம்பள்ளி, திருச்சி மாவட்டம் சூரியூர், மதுரை மாவட்டம் கருத்தபுளியம்பட்டி, ராமநாதபுரம் மாவட்டம் தனிச்சியம், தஞ்சாவூர் மாவட்டம் நடுவூர், திருநெல்வேலி மாவட்டம் நரசிங்கநல்லூர் ஆகிய 9 மாவட்டங்களில் மொத்தம் 398 ஏக்கர் பரப்பளவில் ரூ.366 கோடியில் தமிழ்நாடு சிறு தொழில் முன்னேற்றக் கழகத்தால் (சிட்கோ) புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப்படும். இதன் வாயிலாக 17,500 பேருக்கு பணி வாய்ப்பு கிடைக்கும்.

ரூ.2.5 லட்சம் கோடி கடனுதவி: இந்தியாவிலேயே அதிக குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமையப் பெற்ற மாநிலங்களில் 32 லட்சத்துக்கும் அதிகமான நிறுவனங்களுடன் தமிழகம் மூன்றாமிடத்தில் உள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் நிதி ஆண்டில் 10 லட்சம் நிறுவனங்களுக்கு ரூ.2.5 லட்சம் கோடி வங்கி கடனுதவி கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உள்ளாட்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கு நியமன பிரதிநிதித்துவம்

**விரைவில் சட்டம்**

தமிழகத்தில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு நியமன பிரதிநிதித்துவம் வழங்கும் வகையில் நடப்பு சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதுகுறித்து நிதிநிலை அறிக்கையில் கூறியிருப்பதாவது: மாற்றுத்திறனாளிகள் தற்சார்புடன் இயல்பு நிலைக்கு நிகரான செயல்பாடுகளை மேற்கொள்ள உதவும் வகையில் உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய மேம்படுத்தப்பட்ட திறன்மிகு கண்ணாடிகள், அறிவுசார் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான கற்பிக்கும் உபகரணப் பெட்டகம், நிற்க இயலாத மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் நவீன உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு நவீன கருவிகள் அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளின் தேவைக்கேற்ப வழங்கும் திட்டம் ரூ.125 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இத்திட்டம் மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேலும் செம்மைப்படுத்தும்.



மாநிலத்தில் உள்ள அனைத்து வகை உள்ளாட்சி அமைப்புகளிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு நியமன முறையில் உரிய பிரதிநிதித்துவம் வழங்கிடும் வகையில், நடப்பு சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்படும். இதன்மூலம் மாற்றுத் திறனாளிகளின் குரல் உள்ளாட்சி அமைப்புகளில் ஒலிப்பது மட்டுமன்றி, அவர்கள் உள்ளாட்சி நிர்வாகத்தை வழிநடத்தும் வல்லமை பெற்றவர்களாகவும் திகழ்வார்கள்.

**மாற்றுத்திறனாளிகளை பணியமர்த்தினால் மானியம்...** அரசுப் பணியாளர்களுக்கான தேர்வுகளில் மாற்றுத்திறனாளிகளுக்கென நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இடஒதுக்கீடு மூலம், கடந்த 4 ஆண்டுகளில் இதுவரை 1,493 மாற்றுத்திறனாளிகள் அரசுப் பணியைப் பெற்றுள்ளனர். அதேபோன்று மாற்றுத்திறனாளிகளைப் பணியமர்த்துவதை தனியார் துறைகளிலும் ஊக்குவிக்கும் வகையில் தனியார் நிறுவனங்கள் ஒவ்வொன்றும் குறைந்தது 10 மாற்றுத்திறனாளிகளைப் பணியமர்த்தி இருந்தால், அத்தகைய நிறுவனங்களுக்கு மாதந்தோறும் ஒரு நபருக்கு ரூ.2 ஆயிரம் வீதம் ஊதிய மானியத்தை ஓராண்டுக்கு அரசு வழங்கும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச தரவரிசையில் அண்ணா பல்கலை. இடம்பெற செயல் திட்டம்

உலக அளவிலான க்யூ.எஸ். தரவரிசைப் பட்டியலில் முதல் 150 இடங்களுக்குள் அண்ணா பல்கலைக்கழகத்தை இடம் பெறச் செய்யும் வகையில் புதிய செயல் திட்டம் வகுக்கப்படவுள்ளது என நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக மாணவர்களின் தொழில்நுட்பக் கனவுகளின் சிகரமாக விளங்கிடும் அண்ணா பல்கலைக்கழகத்தை அடுத்த 5 ஆண்டுகளுக்குள் நாட்டிலேயே சிறந்த கல்வி நிறுவனங்களின் தரவரிசையில் முதல் 10 இடங்களுக்குள்ளும், உலக அளவிலான க்யூ.எஸ். தரவரிசைப் பட்டியலில் முதல் 150 இடங்களுக்குள்ளும் இடம்பெறச் செய்ய உரிய செயல் திட்டம் வகுக்கப்படும்.

இந்தத் திட்டத்தின்படி திறன்மிகு வகுப்பறைகள், நவீன தொழில்நுட்ப ஆய்வகங்கள், புதிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், புத்தொழில் நிறுவனப் பூங்கா, வளர்ந்து வரும் துறைகளுக்கான ஆராய்ச்சி உதவி, மெய்நிகர் ஆய்வகங்கள் ஆகியவை முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்களின் துணையோடு அமைக்கப்படும். கற்றல்– கற்பித்தல் அனுபவத்தை மேம்படுத்த முன்னணி தொழில்நுட்ப நிபுணர்கள், வெளிநாட்டு பேராசிரியர்கள் 3 மாதங்கள் வரையிலான குறுகிய காலத்துக்கு சிறப்பு ஆராய்ச்சிகளில் ஈடுபடுத்தப்படுவர்.




**ரூ. 500 கோடி மதிப்பீட்டில்...** உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களில் இணைப் படிப்புகளை படிப்பதற்கு வழிவகை உருவாக்கப்படும். நவீன வசதிகளுடன் கூடிய மாணவர் விடுதிகள், தலைசிறந்த வீரர்களை உருவாக்க உகந்த விளையாட்டுச் சூழல், அனைத்து உயிரினங்களும் இணைந்து வாழும் பசுமைப் பரப்பு என அண்ணா பல்கலைக்கழகத்தை ஆசியாவின் தலைசிறந்த கல்வி நிறுவனங்களின் தரவரிசையில் இடம் பெறச் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இந்த மாபெரும் கனவை நனவாக்கிய அரசு, பல்கலைக்கழக நிதி, முன்னாள் மாணவர்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் பங்களிப்பு ஆகியவற்றைக் கொண்டு அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.500 கோடியில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும்.

## ரூ. 2,200 கோடியில் கிராமச் சாலை மேம்பாடு

முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2025–26–இல் 6,100 கி.மீ. நீளமுள்ள கிராமச் சாலைகள் ரூ. 2,200 கோடி செலவில் மேம்படுத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் தொடர் பராமரிப்புக்காக ஆண்டுதோறும் மாநில நிதிக் குழு மானியத்திலிருந்து உரிய நிதி ஒதுக்க முடிவு செய்து, 2025–26–இல் ரூ.120 கோடி விடுவிக்கப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## சேலம், கடலூர், நெல்லையில் மாபெரும் நூலகங்கள்

சேலம், கடலூர், திருநெல்வேலியில் தலா ஒரு லட்சம் புத்தகங்களுடன் மாபெரும் நூலகங்கள் அமைக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாநகரில் உருவாக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு நூலகத்துக்கு இதுவரை 15 லட்சத்துக்கும் மேற்பட்ட வாசகர்கள் வருகை புரிந்துள்ளனர். தொடர்ந்து, கோவை மற்றும் திருச்சியில் மாபெரும் நூலகங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.



அறிவைப் பரவலாக்கும் முயற்சிகளின் அடுத்தகட்டமாக சேலம், கடலூர், திருநெல்வேலியில் பொதுமக்கள், போட்டித் தேர்வு எழுதும் மாணவர்கள் பயன்பெறும் விதமாக தலா 1 லட்சம் புத்தகங்கள் மற்றும் மாநாட்டுக் கூட வசதிகளுடன் நூலகங்கள் அமைக்கப்படும்.

## சென்னை, கோவையில் ரூ.100 கோடியில் அடிப்படை அறிவியல், கணித ஆராய்ச்சி மையங்கள்

சென்னை, கோவையில் அடிப்படை அறிவியல் மற்றும் கணித ஆராய்ச்சி மையங்கள் ரூ.100 கோடியில் ஏற்படுத்தப்படவுள்ளன.

இதுகுறித்து நிதிநிலை அறிக்கையில் கூறியிருப்பதாவது: மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட துறைகளின் வளர்ச்சியில் தமிழகம் சிறந்து விளங்குவதைப் போன்று அடிப்படை அறிவியல் மற்றும் கணித ஆராய்ச்சிச் சூழலும் தமிழகத்தில் மேம்பட வேண்டும் என்று கல்வியாளர்கள் கருதுவதை நமது அரசு கவனமாகப் பரிசீலித்தது. இதைத் தொடர்ந்து, தமிழகத்தில் சென்னை, கோவையில் இரண்டு அடிப்படை அறிவியல் மற்றும் கணித ஆராய்ச்சி மையங்களை இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ், டாடா இன்ஸ்டிடியூட் ஆஃப் ஃபண்டமெண்டல் ரிசர்ச் போன்ற நாட்டின் புகழ்பெற்ற ஆய்வு நிறுவனங்களுடன் இணைந்து உருவாக்க ரூ.100 கோடி வழங்கப்படும்.

புகழ்பெற்ற அறிவியல் அறிஞர்களின் வழிகாட்டுதலுடன் முனைவர் மற்றும் முதுமுனைவர் பட்டப் படிப்பு மூலம் உயர் அறிவியல் ஆராய்ச்சிகள் மட்டுமின்றி, மாணவர்களிடையே ஆழமான அறிவியல் மனப்பான்மையை உருவாக்கவும் இம்மையங்கள் முக்கியப் பங்காற்றும்.



**நான் முதல்வன் திட்டம்...** நான் முதல்வன் திட்டத்தின் கீழ் இதுவரை 41.38 லட்சம் மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். மேலும் ஒரு லட்சம் ஆசிரியர்களுக்கும் உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு பயிற்சி பெற்ற மாணவர்களில் 1.04 லட்சம் மாணவர்கள் இதுவரை வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

**யுபிஎஸ்சி ஊக்கத் தொகை...** மத்திய குடிமைப் பணித் தேர்வுகளில் தமிழகத்திலிருந்து தேர்ச்சி பெறுபவர்களின் எண்ணிக்கையை உயர்த்த ஆண்டுதோறும் தேர்வு செய்யப்பட்ட ஆயிரம் மாணவர்களுக்கு அவர்கள் முதல்நிலைத் தேர்வுகளுக்கு தயாராகும் வகையில் 10 மாதங்களுக்கு மாதம் ரூ.7,500, முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.25,000 வழங்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து, முதன்மைத் தேர்வில் வெற்றி பெற்று நேர்முகத் தேர்வுக்கு தயாராகும் இளைஞர்களுக்கு ரூ.50,000 வழங்கப்படும். இத்திட்டம் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீட்டில் நடைமுறைப்படுத்தப்படும்.

# 2025-26 தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை

## எல்லார்க்கும் எல்லாம்







தமிழக சட்டப்பேரவையில் 2025 –2026– ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வெள்ளிக்கிழமை தாக்கல் செய்த நிதியமைச்சர் தங்கம் தென்னரசு.


# மக்கள் நல்வாழ்வுத் துறை திட்டங்களுக்கு ரூ.21,906 கோடி

**சென்னை, மார்ச் 14:** மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்காக ரூ.21,906 கோடியை நிதிநிலை அறிக்கையில் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

தரமான புற்றுநோய் சிகிச்சை மற்றும் உரிய பராமரிப்பு சேவைகளை அனைவருக்கும் வழங்க அரசு உறுதிபூண்டுள்ளது. அந்த வகையில், காஞ்சிபுரம், காரப்பேட்டையில் உள்ள அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தை தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

800 படுக்கைகளுடன் கூடிய தன்னாட்சி பெற்ற மையமாக அதைச் செயல்படுத்தும் வகையில் அடுத்த இரு ஆண்டுகளுக்கு ரூ.120 கோடி வழங்கப்படும்.

**புற்றுநோய் பரிசோதனை:** புற்றுநோய் பாதிப்பை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதற்கான மருத்துவ உபகரணங்கள், மனித வளங்களை இடைநிலை மருத்துவமனை



கள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு வழங்க ரூ.110 கோடி ஒதுக்கப்படுகிறது.

மகளிர் நலன் காக்க அவர்களது வசிப்பிடங்களுக்கு அருகில் சென்று புற்றுநோய், இதய நல பரிசோதனைகளை தன்னார்வ நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ள ரூ.40 கோடி வழங்கப்படுகிறது.

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் 2.20 கோடி பேர் பயன்பெற்றுள்ளனர். இதைப் பாராட்டி ஐ.நா. அமைப்பு விருது வழங்கி கௌரவித்துள்ளது.

அதேபோன்று 'இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48' திட்டத்தின் கீழ் 3,43,156 பேருக்கு ரூ.302 கோடி மதிப்பிலான சிகிச்சைகள் கட்டணமின்றி வழங்கப்பட்டுள்ளன.

வரும் நிதியாண்டில் தேசிய நல வாழ்வுக் குழுமத்தின் திட்டங்களுக்கு ரூ.2,754 கோடி, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்துக்கு ரூ.1,092 கோடி, முதல்வரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்துக்கு ரூ.1,461 கோடி என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ரூ.21,906 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## ரூ.1,031 கோடியில் 3,000 புதிய பேருந்துகள்

தமிழகத்தில் வரும் நிதியாண்டில் 3,000 புதிய பேருந்துகளை கொள்முதல் செய்வதற்காக ரூ.1,031 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.




தமிழக சட்டப்பேரவையில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு வெள்ளிக்கிழமை தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் வரும் நிதியாண்டில் (2025–2026) ஏற்கெனவே அறிவித்துள்ளபடி 3 ஆயிரம் புதிய பேருந்துகளை கொள்முதல் செய்ய ரூ.1,031 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பயன்பாட்டுக்கு உகந்த 750 பேருந்துகளை முற்றிலும் புதுப்பித்து இயக்குவதற்காக ரூ.120 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காற்று மாசுபாட்டை குறைத்து சுற்றுச்சூழலை மேம்படுத்தும் நோக்கத்துடன் சென்னை மாநகரத்துக்கு 950 மின் பேருந்துகள், கோவை மாநகரத்துக்கு 75 மின் பேருந்துகள், மதுரை மாநகரத்துக்கு 100 மின் பேருந்துகள் என மொத்தம் 1,125 மின் பேருந்துகள் உலக வங்கி மற்றும் ஜெர்மன் வளர்ச்சி வங்கிக் கடனுதவியுடன் பொதுமக்களின் பயன்பாட்டுக்காக இந்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதுப்பொலிவாகும் எட்டயபுரம் பாரதி இல்லம்: 17 புராதன கட்டடங்களை புதுப்பிக்க ரூ.150 கோடி


எட்டயபுரத்தில் உள்ள பாரதியார் இல்லம் உள்பட 17 புராதன கட்டடங்களைப் புதுப்பிக்க ரூ. 150 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.



புராதன கட்டடங்களை பழைமை மாறாமல் புதுப்பிக்கும் நோக்கில் பொதுப் பணித் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த வகையில், சென்னை பல்கலைக்கழக மெரீனா வளாகத்தில் உள்ள கீழைக் கலையியல் ஆய்வு நிறுவன புராதன கட்டடம், ராணிப்பேட்டையில் உள்ள தேசிங்கு ராஜா ராணி நினைவகம், கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையம், திருச்சி ராணி மங்கம்மாள் கோட்டை வளாக அலுவலகங்கள், தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் உள்ள மகாகவி பாரதியார் இல்லம் உள்ளிட்ட 17 புராதன கட்டடங்கள் ரூ.150 கோடியில் அவற்றின் பழைமை மாறாமல் புதுப்பிக்கப்படும்.

பொதுப் பணித் துறைக்கு நிகழ் பட்ஜெட்டில் ரூ. 2,457 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## ஒரு ரூபாயில் வரவு – செலவு விவரம்




## இலங்கை தமிழர்களுக்கு ரூ. 206 கோடியில் புதிதாக 3,000 வீடுகள்



இலங்கை தமிழர்களுக்கு ரூ. 206 கோடியில் புதிதாக 3,000 வீடுகள் கட்டி கொடுக்கப்படும் என நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு இலங்கை தமிழர்களின் நலன் மற்றும் மறுவாழ்வை உறுதி செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. அவர்கள் கண்ணியமான வாழ்வை உறுதி செய்யும் நோக்கில் 7,469 புதிய வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதன் அடுத்தக்கட்டமாக முகாம்களில் வாழும் இலங்கை தமிழர்களுக்கு ரூ. 206 கோடியில் கூடுதலாக 3,000 வீடுகள் கட்டி வழங்கப்படவுள்ளன.

## 50 சார்–பதிவாளர் அலுவலகங்களை நவீனப்படுத்த ரூ.30 கோடி

தமிழகத்தில் உள்ள 50 சார்–பதிவாளர் அலுவலகங்கள் ரூ.30 கோடி செலவில் நவீனப்படுத்தப்படும் என்று மாநில நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஆண்டுதோறும் 30 லட்சத்துக்கும் மேற்பட்ட ஆவணங்கள் பதிவு செய்யப்படுகின்றன. இதனால் சார்–பதிவாளர் அலுவலகங்களை புதிய தொழில்நுட்ப வசதியுடன் நவீனமயமாக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.



அதன்படி, பொதுமக்களுக்கு குளிரூட்டப்பட்ட காத்திருப்போர் கூடம், இணைய வசதி, படிப்பகம், பாதுகாக்கப்பட்ட குடிநீர், தூய்மையான ஒய்வறைகள், மின்னணு நுழைவு அட்டை, பரந்த வாகன நிறுத்துமிடம் ஆகிய அனைத்து வசதிகளும் ரூ.30 கோடி செலவில் சென்னை, கோவை, மதுரை உள்ளிட்ட மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 50 சார்–பதிவாளர் அலுவலகங்களில் ஏற்படுத்தப்படவுள்ளன என்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பள்ளி உடற்கல்வி பாடத்திட்டத்தில் சதுரங்க விளையாட்டு

மாணவர்களிடையே சதுரங்க விளையாட்டை ஊக்குவிக்க பல சாம்பியன்களை எதிர்காலத்தில் உருவாக்கும் பொருட்டு, பள்ளிப் பாடத்திட்டத்தில் சதுரங்க விளையாட்டைச் சேர்த்திடும் வகையில், உடற்கல்விப் பாடத்திட்டம் உரிய வகையில் மாற்றியமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நிதிநிலை அறிக்கையில் கூறியிருப்பதாவது: சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்களை வென்ற 4,554 விளையாட்டு வீராங்கனைகளுக்கு இதுவரை ரூ.151 கோடி உயரிய ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும், விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவீத இடஒதுக்கீட்டின் கீழ், இதுவரை 93 விளையாட்டு வீரர்களுக்கு அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

44–ஆவது செஸ் ஒலிம்பியாட் 2022, கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகள் – 2023, தெற்காசிய இளையோர் தடகள சாம்பியன்ஷிப்,



ஆசிய ஆண்கள் ஹாக்கி சாம்பியன்ஸ் கோப்பை – 2023 போன்ற பல்வேறு சர்வதேச மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் தமிழக அரசால் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன.

உலக அரங்கில் சதுரங்க விளையாட்டின் தலைநகராக தமிழகம் விளங்குகிறது. இதுவரை இரண்டு சாம்பியன்கள் மற்றும் 31 கிராண்ட் மாஸ்டர்கள் தமிழ் மண்ணிலிருந்து உருவாகியுள்ளனர். இந்த வெற்றியை தக்கவைத்துக் கொள்ளும் பொருட்டும் மாணவர்களிடையே சதுரங்க விளையாட்டை ஊக்குவிக்க பல சாம்பியன்களை எதிர்காலத்தில் உருவாக்கும் வகையிலும், பள்ளிப் பாடத்திட்டத்தில் சதுரங்க விளையாட்டினைச் சேர்த்திடும் வகையிலும், உடற்கல்விப் பாடத்திட்டம் உரிய வகையில் மாற்றியமைக்கப்படும்.

பல்வேறு மலையேற்ற வீரர்களின் பெருங்கனவான உலகில் உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை புரியும் தமிழகத்தைச் சேர்ந்த வீரர்– வீராங்கனைகளுக்கு ரூ.10 லட்சம் ஊக்கத்தொகை வழங்கப்படும்.

நிதிநிலை அறிக்கையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு ரூ. 572 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரதான திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு (கோடியில்)

| | |
|---|---|
| கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் | ரூ.13,807 |
| தமிழ்ப் புதல்வன் | ரூ.420 |
| எம்ஜிஆர். சத்துணவுத் திட்டம் | ரூ.2,602 |
| முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் | ரூ.1,092 |
| மெட்ரோ ரயில் இரண்டாவது கட்டம் | ரூ.4,807 |
| புதுமைப் பெண் திட்டம் | ரூ.420 |
| முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் | ரூ.600 |
| ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் | ரூ.3,676 |
| முதியோர், விதவை ஓய்வூதியம் | ரூ.5,156 |
| பொது விநியோகத் திட்டத்துக்கு மானியம் | ரூ.14,000 |
| கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் | ரூ.2,000 |
| கலைஞரின் கனவு இல்லம் | ரூ.1,000 |
| சிங்காரச் சென்னை 2.0 | ரூ.850 |
| நான் முதல்வன் | ரூ.150 |
| விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் | ரூ.1,461 |
| விலையில்லாத வேட்டி சேலை திட்டம் | ரூ.673 |
| பல்கலைக்கழகங்களுக்கு மானியங்கள் | ரூ.1,678 |
| காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டம் | ரூ.600 |
| பள்ளிக் குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்கள் | ரூ.1,696 |

## பெற்றோர் இல்லாத குழந்தைகளுக்கு மாதம் ரூ.2,000 உதவித் தொகை

பெற்றோர்களை இழந்து தங்களது உறவினர்களின் பாதுகாப்பில் வளர்ந்து வரும் குழந்தைகளுக்கு முதல்வரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ. 2 ஆயிரம் உதவித் தொகை வழங்கப்படவுள்ளது என நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஆதரவற்றோர், தனித்து வாழும் முதியோர், ஒற்றைப் பெற்றோர் குடும்பங்கள், பெற்றோரை இழந்த குழந்தைகள், மனநலம் குன்றியவர்கள், மாற்றுத்திறனாளிகள், சிறப்புக் குறைபாடு உடைய குழந்தைகள் உள்ள குடும்பங்கள் போன்ற சமூகத்தின் விளிம்புநிலையில் வாழும் மக்கள் அனைவரும் முதல்வரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மட்டுமன்றி அரசு நலத்திட்டங்களிலும் முன்னுரிமை வழங்கப்படும்.

முதல் கட்டமாக மிகவும் வறிய நிலையில் உள்ள சுமார் 50 ஆயிரம் குடும்பங்களில் குழந்தைகள் தங்களின் இரண்டு பெற்றோரையும் இழந்து தங்களது உறவினர்களின் பாதுகாப்பில் வளர்ந்து வருவது தெரியவந்துள்ளது. தாயுமானவரின் கரங்கள் இக்குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில் இக்குழந்தைகளின் 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பு வரை இடைநிற்றல் இன்றி அவர்கள் கல்வியைத் தொடர மாதம் ரூ.2 ஆயிரம் உதவித்தொகை வழங்கப்படும். பள்ளிப் படிப்பு முடித்தவுடன் கல்லூரிக் கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பாதுகாப்புக் கட்டமைப்பு மேம்பாடு

## கோவை, திருச்சி, மதுரை, தாம்பரம், ஆவடியில் ரூ.70 கோடியில் புதிய திட்டம்

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பாதுகாப்புக் கட்டமைப்புகளை மேம்படுத்த தாம்பரம், ஆவடி, கோவை, திருச்சி, மதுரை ஆகிய நகரங்களில் ரூ.70 கோடியில் புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பெண்கள், குழந்தைகள் பாதுகாப்புக்கு தமிழக அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் வகையிலும், பிற குற்றங்களில் ஈடுபடுகிறவர்களை கைது செய்யும் வகையிலும் சென்னை மட்டுமன்றி தாம்பரம், ஆவடி, கோவை, திருச்சி, மதுரை ஆகிய மாநகரங்களில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய ஒரு புதிய திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

மேலும், இந்த நகரங்களில் தானியங்கி வாகன எண் கண்டறியும் கேமராக்கள் (ஏஎன்பிஆர்) பொருத்தப்பட உள்ளன. முக அடையாளங்களைக் காணும் மென்பொருள் அமைப்பும் நிறுவப்பட உள்ளது.

மேலும், ட்ரோன் மூலம் கண்காணிக்கும் திட்டம், விடியோ பகுப்பாய்வுத் தொழில்நுட்பம் ஆகியவை வழங்கப்பட உள்ளன. இவ்வாறு பாதுகாப்புக் கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்கள் ரூ.70 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

வெப்ப அலை செயல் திட்டம்: வெப்ப அலையை மாநிலம் சார்ந்த பேரிடராக தமிழக அரசு அண்மையில் அறிவித்தது. மாநில அளவிலான வெப்ப அலை செயல் திட்டம் மட்டுமன்றி சென்னை, மதுரை, தூத்துக்குடி, திருச்சி, கோவை, ஈரோடு, திருப்பூர், வேலூர், சேலம், தாம்பரம், ஆவடி ஆகிய 11 நகரங்களுக்கு தனியே வெப்ப அலை செயல் திட்டம் தயாரிக்கப்படும்.

பேரிடர் அபாயத்தை திறம்பட மேலாண்மை செய்து, அதன் தாக்கத்தைக் குறைக்க முதல்நிலை மீட்பாளர்கள், களப் பணியாளர்கள், மக்கள் பிரதிநிதிகள், அரசு சாரா நிறுவனங்கள் ஆகியோரின் திறன்களை மேம்படுத்த ரூ.50 கோடியில் தமிழ்நாடு மாநிலப் பேரிடர் மேலாண்மை நிறுவனம் சென்னையில் அமைக்கப்படும்.

# ரூ 2025-26 தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை

எல்லார்க்கும் எல்லாம்



## ரூ.2200 கோடியில் 6100 கிமீ சாலை மேம்பாடு

முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2025-26 நிதியாண்டில் 6100 கிமீ நீளமுள்ள கிராம சாலைகள் ரூ.2200 கோடியில் மேம்படுத்தப்படும். கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் தொடர் பராமரிப்புக்கென ஒவ்வொரு ஆண்டும் மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து உரிய நிதி ஒதுக்க முடிவு செய்து, 2025-26 நிதியாண்டில் ரூ.120 கோடி விடுவிக்கப்படும்.

பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் ஊரக பகுதிகளில் வாழும் விளிம்புநிலை மக்களுக்காக 2001-ம் ஆண்டுக்கு முன்னர் கட்டப்பட்டு, தற்போது சீரமைக்க முடியாமல் மிகவும் பழுதடைந்த வீடுகளுக்கு மாற்றாக, 2025- 26 ஆண்டில் ரூ.600 கோடியில் 25 ஆயிரம் புதிய வீடுகள் கட்டித்தரப்படும்.

ஊரகப் பகுதிகளில் பல்வேறு அடிப்படை வசதிகளை நிறைவேற்றும் நோக்கத்தில், அண்ணா மறுமலர்ச்சி திட்டம் -2-ன் கீழ் 2329 கிராம ஊராட்சிகளில் ரூ.1087 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் தமிழகத்துக்கு மத்திய அரசு வழங்க வேண்டிய ரூ.3796 கோடி நிதியை மத்திய அரசு இதுவரை விடுவிக்கவில்லை. அதை உடனே விடுவிக்க தமிழக அரசு, மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மொத்தத்தில் ஊரக வளர்ச்சி துறைக்கு ரூ.29456 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 2,676 அரசு பள்ளிகளில் ரூ.65 கோடியில் ஸ்மார்ட் வகுப்பறை

பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அரசு பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், குடிநீர் வசதி உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க ரூ.1,000 கோடி ஒதுக்கப்படும். ரூ.160 கோடியில் 2,000 அரசு பள்ளிகளில் கணினி ஆய்வகங்கள் மேம்படுத்தப்படும். 2,676 அரசு பள்ளிகளில் ரூ.65 கோடி மதிப்பீட்டில் திறன்மிகு வகுப்பறை (ஸ்மார்ட் கிளாஸ்) அமைக்கப்படும்.



அரசு பள்ளிகளில் 1721 முதுகலை பட்டதாரி ஆசிரியர்களும், 841 பட்டதாரி ஆசிரியர்களும் (மொத்தம் 2,562 பேர்) நேரடி நியமனம் மூலம் பணியமர்த்தப்படுவர். இதற்கான தேர்வு அறிவிக்கையை ஆசிரியர் தேர்வு வாரியம் விரைவில் வெளியிடும்.

அரசு பள்ளி மாணவர்களுக்கு 'நான் முதல்வன்–கல்லூரி கனவு திட்டம்' மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். முதல்கட்டமாக, 388 ஊராட்சி ஒன்றியங்களில் அமைந்துள்ள 500 அரசு பள்ளிகளில் உயர்கல்வி விழிப்புணர்வும் சிறப்பு பயிற்சிகளும் அளிக்கப்படும்.

மும்மொழிக் கொள்கையை உள்ளடக்கிய தேசிய கல்விக்கொள்கையை தமிழகம் ஏற்றுக்கொள்ளாததால், ஏற்கெனவே ஒப்புதல் வழங்கிய நிலையிலும் ரூ.2,152 கோடி கல்வி நிதியை மத்திய அரசு தமிழகத்துக்கு விடுவிக்காமல் வஞ்சித்து வருகிறது. மத்திய அரசு தமிழகத்துக்கு உரிய நிதியை விடுவிக்காவிட்டாலும் பள்ளி மாணவர்களின் கல்வி ஒரு துளியும் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக ஆசிரியர்களின் ஊதியம் உள்ளிட்டவற்றுக்கான நிதியை மாநில அரசே தனது சொந்த நிதி ஆதாரங்களில் இருந்து விடுவித்துள்ளது.

தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி, ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் மற்றும் தாளவாடி, கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் மற்றும் கல்வராயன்மலை, கிருஷ்ணகிரி மாவட்டம் தளி, நீலகிரி மாவட்டம் கோத்தகிரி, திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை உள்ளிட்ட இடங்களில் தொலைதூர மலைப்பகுதிகளில் அமைந்துள்ள 14 அரசு உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும். சேலம், கடலூர், திருநெல்வேலியில் போட்டித்தேர்வு எழுதும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் தலா ஒரு லட்சம் புத்தகங்களுடன் நூலகங்கள் அமைக்கப்படும்.

## நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறைக்கு ரூ.26,687 கோடி



தமிழக பட்ஜெட்டில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு ரூ.26,687 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ், கடந்த 4 ஆண்டுகளில் ரூ.4132 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டுள்ள பணிகளுக்காக, வரும் நிதியாண்டில் ரூ.2 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்படும்.

அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் 6,483 கிமீ நீளமுள்ள சாலைகள் ரூ.3,750 கோடியில் தரம் உயர்த்தப்படும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இதன்கீழ், சென்னை மாநகராட்சியில் ரூ.486 கோடியில் 570 கிமீ சாலைகள், கோவை மாநகராட்சியில் ரூ.200 கோடியிலும், மதுரை மாநகராட்சியில் ரூ.130 கோடியிலும் சாலை பணிகள் மேற்கொள்ளப்படும். சென்னை கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் உயிரி எரிவாயு நிலையம், இயற்கை உரம் தயாரிக்கும் நிலையம், தானியங்கி பொருள் மீட்பு மையம் மற்றும் 21 மெகாவாட் திறன் கொண்ட திடக்கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் பணி ரூ.3,450 கோடியில் தொடங்கப்படும். சென்னையில் 7 மழைநீர் உறிஞ்சும் பல்லுயிர் பூங்காக்கள் ரூ.88 கோடியில் உருவாக்கப்படும்.

காவிரி, வைகை, நொய்யல், தாமிரபரணி ஆற்றங்கரைகளில் அமைந்துள்ள மாநகராட்சி பகுதிகளில் இருந்து உருவாகும் கழிவுநீர், ஆற்றில் நேரடியாக கலப்பதை தடுக்க, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், நடைபாதைகள் உள்ளிட்டவை அமைக்கும் ஆற்றங்கரை மேம்பாட்டு பணிகள் திருச்சி, மதுரை, ஈரோடு, கோவை, திருநெல்வேலி மாநகராட்சிகளில் மொத்தம் ரூ.400 கோடியில் தொடங்கப்படும்.

சென்னையில் குடிநீர் விநியோகத்தை உறுதி செய்யும், 'முதன்மை சுற்றுக்குழாய் திட்டம்' ரூ.2,423 கோடியில் 3 ஆண்டுகளில் நிறைவேற்றப்படும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்கீழ் உள்ள 40 ஆண்டுகளுக்கு மேலான கூட்டுக் குடிநீர் திட்டங்களை புதுப்பிக்க ரூ.675 கோடியில் 102 கூட்டுக் குடிநீர் திட்டங்களில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## பணம் பெறாத இல்லத்தரசிகள் விண்ணப்பிக்க வாய்ப்பு

# மகளிர் உரிமை தொகைக்கு ரூ.13,807 கோடி

■ சென்னை

தமிழக பட்ஜெட்டில் மகளிர் உரிமைத் தொகை திட்டத்துக்கு ரூ.13,807 கோடி நிதி ஒதுக்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின் மூலம் பணம் பெறாத, தகுதியுள்ள இல்லத்தரசிகள் விண்ணப்பிக்கவும் வாய்ப்பு வழங்கப்படும் என்று நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாதமும் 1.15 கோடி குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படும் 'கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்ட'த்துக்கு நடப்பாண்டில் ரூ.13,807 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



● வங்கி கணக்கில் மகளிர் உரிமைத் தொகை வரவு வைக்கப்பட்ட குறுஞ்செய்தியை மகிழ்ச்சியுடன் பகிர்ந்த பெண். (கோப்புப் படம்)

**மூன்றாம் பாலினத்தவருக்கு ரூ.1000**

மேலும், இதுவரை உரிமைத் தொகை பெறாத தகுதியுடைய இல்லத்தரசிகள் விண்ணப்பிக்க உரிய வாய்ப்புகள் வழங்கப்படும். அதேபோல் 'புதுமைப் பெண்' திட்டத்தின் கீழ், 4.06 லட்சம் மாணவிகள் மாதந்தோறும் ரூ.1000 பெற்று பயனடைந்து வரும் நிலையில், அத்திட்டத்துக்காக நடப்பாண்டு ரூ.420 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் புதுமைப்பெண், தமிழ்ப் புதல்வன் திட்டங்கள் போல மூன்றாம் பாலினத்தவர்களுக்கும் ரூ.1,000 வழங்கும் வகையில் இந்த திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளது.

பெண்களை தொழில் முனைவோர்களாக மாற்றும் வகையில் செயல்பட்டுவரும் மகளிர் சுய உதவிக் குழுக்களை அதிகரிக்கும் வகையில், நடப்பாண்டு 10 ஆயிரம் குழுக்கள் புதிதாக உருவாக்கப்படுவதுடன், சுயஉதவிக் குழுக்களுக்குரூ.37ஆயிரம்கோடிவங்கி கடன் இணைப்பு வழங்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பணிபுரியும் பெண்களுக்காக கொண்டுவரப்பட்ட 'தோழி' மகளிர் விடுதிகள் ஏற்கெனவே சென்னை உள்ளிட்ட 13 இடங்களில் செயல்பட்டு வரும் நிலையில் ரூ.77 கோடியில் கரூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட மேலும் 10 இடங்களிலும் அமைக்கப்படும்.

**மாணவியர் விடுதிகள்**

குக்கிராமங்களில் இருந்து உயர்கல்வி பயிலவரும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையின மாணவிகளுக்காக சென்னை, கோவை, மதுரை ஆகிய மாநகரங்களில் ரூ.275 கோடியில் மாணவியர் விடுதிகள் அமைக்கப்படும். மூத்த குடிமக்களின் பராமரிப்புக்காக மதுரை, கோவை, திருச்சி, சேலம், திருப்பூர், ஈரோடு, தூத்துக்குடி, வேலூர், தஞ்சாவூர், திண்டுக்கல் ஆகிய மாநகராட்சிகளில் ரூ.10 கோடியில் 25 'அன்புச்சோலை' மையங்கள் உருவாக்கப்படும். 3-ம் பாலினத்தவர்களுக்கு சம வாய்ப்புகளை வழங்கும் வகையில் உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டு, ஊர்க்காவல் படையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

**காலை உணவு திட்டம் விரிவு**

அரசு பள்ளிகளிலும், ஊரக பகுதிகளில் அமைந்துள்ள அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் செயல்பாட்டில் இருந்துவந்த முதலமைச்சரின் காலை உணவுத் திட்டமானது, இந்த கல்வியாண்டு முதல் ரூ.600 கோடியில் நகர்ப்புற பகுதிகளில் இயங்கிவரும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்படுகிறது.


அதேபோல் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்டத்துக்காக ரூ.3,676 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் இந்த பட்ஜெட்டில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறைக்கு ரூ.8,597 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7 இடங்களில் ரூ.300 கோடியில் சுற்றுலா கட்டமைப்பு

சுற்றுலாத் துறையில் அதிக முதலீடுகளை ஈர்க்கவும், தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கவும், தமிழ்நாடு சுற்றுலா ஊக்குவிப்பு வசதி சட்டத்தை தமிழக அரசு கொண்டு வரும்.

மாமல்லபுரம், திருவண்ணாமலை, ராமேசுவரம், கன்னியாகுமரி, திருச்செந்தூர், பழனி மற்றும் நாகூர் - வேளாங்கண்ணி பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், உரிய கட்டமைப்பு வசதிகளை நவீன தரத்துடன் அமைத்திட ரூ.300 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்படும். முதல்கட்டமாக, மாமல்லபுரம், திருவண்ணாமலை, திருச்செந்தூர், ராமேசுவரம் நகரங்களுக்கென தனித்தனியே வளர்ச்சி ஆணையங்கள் உருவாக்கப்படும். மேலும், அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உதகையில் சுமார் 52 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள ரேஸ் கோர்ஸ் பகுதியில் ரூ.70 கோடியில் சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கப்படும்.



## விவசாயிகள் உள்ளிட்டோருக்கு ரூ.9.5 லட்சம் கோடி கடன்

வேளாண்மை, சிறு, குறு நிறுவனங்கள், மகளிர் சுய உதவிக்குழு, கல்வி ஆகிய துறைகளுக்கு வங்கிகள் கடன் வழங்க ரூ.9.5 லட்சம் கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் அரவிந்த் பனகாரியா தலைமையில் 16-ம் நிதி ஆணையம் தமிழகத்துக்கு வருகைதந்த போது நமது அரசு வலுவான கோரிக்கைகளை தகுந்த தரவுகளோடு முன்வைத்தது. அவற்றில், மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வை 50 சதவீதமாக அதிகரித்தல் உள்ளிட்ட அம்சங்கள் உள்ளன.



வேளாண்மை, சிறு, குறு நிறுவனங்கள், மகளிர் சுய உதவிக்குழு, கல்வி ஆகிய துறைகளுக்கு கடன் வழங்கும் வங்கிகளுக்கு இதுவரை இல்லாத அளவுக்கு வரும் நிதியாண்டுக்கென ரூ.9.5 லட்சம் கோடி என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை இணை 17.47 சதவீதம் அதிகமாகும் [illegible] ரிசர்வ் வங்கியின் புத்தாக்க மையத்துடன் இணைந்து, வங்கிகள் கடன் வழங்கும் விதிகளை எளிமைப்படுத்திடும் வகையில் ஒருங்கிணைந்த கடன் வழங்கும் அமைப்பு (Unified Lending Interface) தொழில்நுட்பத்தை பல்வேறு வங்கிகள் மூலம் விரைவில் அறிமுகப்படுத்த உள்ளது. இதன்மூலம் விவசாயிகள், பால் உற்பத்தியாளர்கள், சிறு மற்றும் குறு தொழில்முனைவோர்கள் என அனைவருக்கும் விண் காலத்தில் கடன் வழங்கப்படும்.

தமிழகத்தின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி கணக்கீட்டை துல்லியமாக கணித்திட ரூ.5 கோடியில் விரிவான நிறுவனக் கணக்கெடுப்புகளை நடத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இவை தமிழகத்தின் பொருளாதாரத்தை துல்லியமாக அளவீடு செய்வதற்கும், தரவு சார்ந்த கொள்கை முடிவுகளை எடுப்பதற்கும் வழிவகுக்கும்.

சிறந்த மற்றும் வெளிப்படையான நிர்வாகத்தை வழங்குவதற்காக பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொறியாளர் அளவீடு புத்தகப் பதிவு, ஒப்பந்த மேலாண்மை, மதிப்பீடு தயாரித்தல் மற்றும் பட்டியல் தொகை செலுத்துதல் ஆகியவற்றை இணைய வழியில் மேற்கொள்ளும் வகையில், ஒருங்கிணைந்த பணி மேலாண்மை அமைப்பு (Comprehensive Work Management System) என்ற ஒரு புதிய நடைமுறை செயல்படுத்தப்பட உள்ளது. இந்த மென்பொருள் களஞ்சியம் தளத்துடன் அண்ணா [illegible] செலவினங்கள் மற்றும் திட்டங்களை விரைவாக முடிக்க உறுதுணையாக இருக்கும்.

## இந்த ஆண்டில் 5 லட்சம் பட்டா வழங்கப்படும்

தமிழகத்தில் பல்வேறு பிரிவுகளின்கீழ் இந்த ஆண்டு 5 லட்சம் பட்டாக்கள் வழங்கப்பட உள்ளது.

சொந்த வீடற்ற, நிலமற்ற ஏழைக் குடும்பங்களுக்கு விலையின்றி வீட்டுமனைப் பட்டா தருவதை அரசு தன் முன்னுரிமை கொள்கையாக கொண்டுள்ளது. இதுவரை 10 லட்சத்துக்கும் மேற்பட்ட வீட்டுமனை பட்டாக்கள், மாநிலம் முழுவதும் பல்வேறு பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 5 லட்சம் பட்டாக்கள் இந்த ஆண்டு வழங்கப்படும்.

சென்னை மாநகர், அதை சுற்றியுள்ள பகுதிகளில் ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேல் வசிக்கும் தகுதியுடைய குடும்பங்களுக்கும், அதே போல் மாவட்டத் தலைநகரின் 16 கி.மீ. சுற்றளவுக்குள் உள்ள பகுதிகள் மற்றும் நகராட்சி மற்றும் பேரூராட்சியின் 8 கி.மீ சுற்றளவுக்குள் உள்ள பகுதிகளில் வீட்டுமனை ஒப்படை வழங்க விதிக்கப்பட்ட தடையாணை ஒரு முறை தளர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்களில் 5 ஆண்டுகளுக்கு மேல் வசிக்கும் மக்களுக்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.

உயர் தெளிவுத்திறன் செயற்கைக்கோள் ஒளிப்படங்கள் உதவியுடன், பன்முகத் தொழில்நுட்பங்கள் வாயிலாக உயர் தெளிவுத்திறன் பெருவிகித அளவிலான வரைபடம் உருவாக்கப்படும். நில அளவை, பேரிடர் மேலாண்மை, திட்டமிடல் மற்றும் இதர உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு இந்த வரைபடங்கள் பயனுள்ளதாக இருக்கும்.

குளிரூட்டப்பட்ட காத்திருப்போர் கூடம், இணைய வசதி, படிப்பகம், பாதுகாக்கப்பட்ட குடிநீர், தூய்மையான ஓய்வறைகள், மின்னணு நுழைவு அட்டை மற்றும் பரந்த வாகன நிறுத்துமிடம் ஆகிய அனைத்து வசதிகளையும் கொண்டு சென்னை உட்பட மாநகராட்சிப் பகுதிகளில் 50 சார் பதிவாளர் அலுவலகங்கள் ரூ.30 கோடியில் நவீனப்படுத்தப்படும்.

## தொழில் துறைக்கு ரூ.3,915 கோடி: ரூ.500 கோடியில் செமி கண்டக்டர் இயக்கம்



'தமிழ்நாடு செமி கண்டக்டர் இயக்கம் - 2030' எனும் 5 ஆண்டு திட்டம் ரூ.500 கோடியில் செயல்படுத்தப்படும். சென்னையில் முன்னணி தொழில், கல்வி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் ரூ.100 கோடியில் செமி கண்டக்டர் உயர்திறன் வடிவமைப்பு, பரிசோதனை மையம் உருவாக்கப்படும்.

பொறியியல், வார்ப்பக தொழிலில் சிறந்து விளங்கும் கோவை மண்டலத்தில் கோவை சூலூர், பல்லடத்தில் தலா 100 ஏக்கர் பரப்பில் செமிகண்டக்டர் உற்பத்திக்கான இயந்திர தொழில் பூங்காக்கள் உருவாக்கப்படும். இவற்றை அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, தைவான் நிறுவனங்கள் இணைந்து உருவாக்கும்.

ஓசூரில் 5 லட்சம் சதுரஅடி பரப்பில் உயர்தர அலுவலக வசதிகளை கொண்டு ரூ.400 கோடியில் டைடல் தகவல் தொழில்நுட்ப பூங்கா, விருதுநகரில் புதிய மினி டைடல் பூங்கா உருவாக்கப்படும்.

ஓசூரை ஒட்டி உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகளுடன் ஓசூர் அறிவுசார் பெருவழித்தடம் அமைக்கப்படும். கடலூர், மதுரை மாவட்டம் மேலூரில் காலணி தொழில் பூங்காக்கள் ரூ.250 கோடியில் அமைக்கப்படும். கள்ளக்குறிச்சியில் சிப்காட் நிறுவனம் மூலம் காலணி திறன் பயிற்சி மையம் அமைக்கப்படும்.

திருச்சியில் 250 ஏக்கர் பரப்பில் பொறியியல், வார்ப்பக தொழில் பூங்கா அமைக்கப்படும். தூத்துக்குடி மாவட்டத்தில் செயற்கை இழை, தொழில்நுட்ப ஜவுளி பூங்கா அமைக்கப்படும். கடலூரில் 500 ஏக்கரிலும், புதுக்கோட்டையில் 200 ஏக்கரிலும் புதிய தொழில்நுட்ப பூங்காக்கள் அமைக்கப்படும். இந்த பட்ஜெட்டில் தொழில் துறைக்கு ரூ.3,915 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 3,000 பேருந்துகள் வாங்க ரூ.1,031 கோடி

வரும் நிதியாண்டில் 3,000 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்ய ரூ.1,031 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பயன்பாட்டுக்கு உகந்த 750 பேருந்துகளை முற்றிலும் புதுப்பித்து இயக்குவதற்காக, ரூ.120 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னைக்கு 950, கோவைக்கு 75, மதுரைக்கு 100 என மொத்தம் 1,125 மினி பேருந்துகள் உலக வங்கி மற்றும் ஜெர்மன் வளர்ச்சி வங்கி கடனுதவியுடன் இந்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்படும். போக்குவரத்து கழகங்களுக்கு ரூ.2,000 கோடி தொகையுடன் ஊக்க நிதியம் வரும் நிதியாண்டில் உருவாக்கப்படும். சென்னை நகர கூட்டாண்மை திட்டத்தின்கீழ் செயல்திறன் இடைவெளி நிதியாக ரூ.646 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். மகளிர் விடியல் பயண திட்டத்துக்கான ரூ.3,600 கோடி, மாணவர்களுக்கான பேருந்து கட்டண மானியத்துக்காக ரூ.1,782 கோடி, டீசல் மானியத்துக்காக ரூ.1,85 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த பட்ஜெட்டில் போக்குவரத்து துறைக்கு ரூ.12,964 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



| பட்ஜெட் மொத்த மதிப்பு | |
|---|---|
| மொத்த வருவாய் வரவு | ரூ.3,32,330 கோடி |
| மொத்த செலவினங்கள் | ரூ.4,39,293 கோடி |
| வருவாய் பற்றாக்குறை | ரூ.41,635 கோடி |
| நிதி பற்றாக்குறை | ரூ.1,06,963 கோடி |
| **வருவாய்** | |
| மாநில சொந்த வரி வரவு | ரூ.2,20,895 கோடி |
| வரியல்லா வருவாய் | ரூ.28,818 கோடி |
| மத்திய அரசு உதவி மானியங்கள் | ரூ.23,834 கோடி |
| மத்திய வரிகளில் பங்கு | ரூ. 58,022 |
| **செலவினம்** | |
| சம்பளங்கள் | ரூ.90,464 கோடி |
| செயல்பாடு, பராமரிப்பு | ரூ.16,972 கோடி |
| உதவித்தொகை, மானியம் | ரூ.1,54,724 கோடி |
| ஓய்வூதியம், ஓய்வு பலன்கள் | ரூ.41,290 கோடி |
| வட்டி செலுத்துதல் | ரூ.70,754 கோடி |
| மூலதன செலவு | ரூ.57,231 கோடி |

**முக்கியத் துறைகளுக்கு நிதி ஒதுக்கீடு**

| துறைகள் | நிதி |
|---|---|
| கல்வி | ரூ.55,261 கோடி |
| நகர்ப்புற வளர்ச்சி | ரூ.34,396 கோடி |
| ஊரக வளர்ச்சி | ரூ.29,465 கோடி |
| சுகாதாரம் | ரூ.21,906 கோடி |
| எரிசக்தி | ரூ.21,178 கோடி |
| நெடுஞ்சாலைகள் | ரூ.20,722 கோடி |
| காவல் | ரூ.13,342 கோடி |
| போக்குவரத்து | ரூ.12,965 கோடி |
| நீர்வளம் | ரூ.9460 கோடி |
| சமூக நலன் | ரூ.8597 கோடி |
| தொழில் துறைகள் | ரூ.5833 கோடி |
| ஆதிதிராவிடர், பழங்குடியினர் | ரூ.3924 கோடி |



தமிழக சட்டப்பேரவையில் 2025-26-ம் ஆண்டுக்கான பட்ஜெட்டை நேற்று தாக்கல் செய்த நிதியமைச்சர் தங்கம் தென்னரசு.

## சென்னைக்கு அருகே 2 ஆயிரம் ஏக்கரில் புதிய நகரம்

சென்னை, கோவை, திருப்பூர், திருச்சி, மதுரை போன்ற நகரங்களை நோக்கி மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து வருவதால், உயர்ந்து வரும் மக்கள்தொகைக்கு ஏற்ப அவர்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்க, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், அதிக அளவில் நிதி ஒதுக்கி வருகின்றன.

பெருநகரங்களில் ஆங்காங்கே விரிவாக்கம் நடைபெற்று வந்தாலும், பொதுமக்களின் அனைத்து தேவைகளையும் நிறைவு செய்யும் வகையில் ஒருங்கிணைந்த புதிய நகரங்களை உருவாக்குவது மிகவும் அவசியம். அதன்படி முதல்கட்டமாக சென்னைக்கு அருகே ஓர் புதிய நகரம் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்படும்.

அதில் தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள், நிதி நுட்ப வணிக மண்டலங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள், வங்கி மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள், வணிக வளாகங்கள், வர்த்தக மையங்கள், மாநாட்டு கூடங்கள் அமைக்கப்படுவதுடன், தனியார் துறை மூலம் கல்வி மற்றும் சுகாதார சேவை வழங்கும் நிறுவனங்களும் அமைக்கப்படும்.

உயர் வருவாய் வகுப்பு, மத்திய தர வகுப்பினர் மற்றும் குறைந்த வருவாய் பிரிவினர் என அனைவருக்குமான வீட்டுவசதிகள் நிறைந்த பன்னடுக்கு கட்டிடங்கள் கொண்டதாக இந்நகரம் அமையும். விரிவான சாலைகள், தகவல் தொழில்நுட்ப மற்றும் பசுமை மின்சக்தி அமைப்புகள், பகிர்ந்த பணியிட சேவை, நகர்ப்புற சதுக்கங்கள், பூங்காக்கள் போன்ற பொழுதுபோக்கு சேவை வசதிகள் இடம் பெறும்.


இப்புதிய நகரத்தை, சென்னை மாநகருடன் இணைக்க உரிய சாலை வசதிகள், விரைவு பேருந்துகள், மெட்ரோ ரயில் விரிவாக்கம் ஆகியவை உருவாக்கப்படும். புதிய நகரத்தை உருவாக்கும் பணிகளை டிட்கோ நிறுவனம் விரைவில் தொடங்கும்.

## திருக்குறளை 193 மொழிகளில் மொழிபெயர்க்க திட்டம்

ஐ.நா. சபையால் அங்கீகரிக்கப்பட்ட 193 மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்ட பெருமையை திருக்குறள் பெறும் வகையில் மொழிபெயர்ப்புத் திட்டத்தை பிற கல்வி நிறுவனங்களுடன் இணைந்து தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் வாயிலாக 3 ஆண்டுகளில் நிறைவேற்ற ரூ.1.33 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்த 5 ஆண்டுகளில் 500 தமிழ் இலக்கிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் திட்டத்துக்கு முதல்கட்டமாக ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொல்லியல் அகழ்வாராய்ச்சி மற்றும் அறிவியல் ஆய்வு பணிகளுக்காக ரூ.7 கோடி ஒதுக்கப்படும். பழந்தமிழர்கள் கொண்டிருந்த கடல்வழி வாணிக சிறப்புகளை வெளிக்கொண்டு வரும் வகையில் தமிழகத்தின் கடற்கரை பகுதிகளில் ஆழ்கடல் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்படும். நொய்யல் அருங்காட்சியகம் ரூ.22 கோடி மதிப்பீட்டிலும், நாவாய் அருங்காட்சியகம் ரூ.21 கோடி செலவிலும் உருவாக்கப்படும்.



## தொழிலாளர் நல துறைக்கு ரூ.1,975 கோடி ஒதுக்கீடு

திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளை, புதுக்கோட்டை மாவட்டம் ஏம்பல், காஞ்சிபுரம் மாவட்டம் சாலவாக்கம், மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில், அரியலூர் மாவட்டம் தா.பழூர், ராமநாதபுரம் மாவட்டம் திருஉத்திரகோசமங்கை, திருச்சி மாவட்டம் மணப்பாறை, திருப்பூர் மாவட்டம் காங்கயம், தென்காசி மாவட்டம் குருக்கள்பட்டி மற்றும் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு ஆகிய இடங்களில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் ரூ.152 கோடியில் செலவில் தொடங்கப்படும். இதனால் ஆண்டுக்கு கூடுதலாக 1,308 மாணவ, மாணவிகள் பயிற்சி பெறுவர்.

கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் தொழிற்கல்வி பெறும் வகையில், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், காஞ்சிபுரம், மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம், திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூர், கோவை மாவட்டம் பேரூர் மற்றும் தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் ஆகிய இடங்களில் விடுதி வசதிகளுடன் 7 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் ரூ.148 கோடியில் தொடங்கப்படும் இதனால் ஆண்டுக்கு கூடுதலாக 1,370 மாணவ, மாணவிகள் பயிற்சி பெறுவர்.

கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு, தசைக்கூட்டு வலி பிரச்சினை உள்ளிட்ட பணி சார்ந்த நோய்களைக் கண்டறிந்து, உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்கும் வகையில், 40 வயதுக்கு மேற்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்கு முழு உடல் பரிசோதனை செய்து, மருத்துவப் பரிசோதனை அட்டை வழங்கப்படும். இந்த திட்டத்தின் கீழ் 16.70 லட்சம் கட்டுமானத் தொழிலாளர்கள் பயனடைவர்.



தமிழ்நாடு இணையம் சார்ந்த தற்சார்புத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், 2,000 தொழிலாளர்களுக்கு இருசக்கர மின் வாகனம் வாங்கும் வகையில் தலா ரூ.20,000 மானியமாக வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். தமிழகத்தில் உள்ள இணையம் சார்ந்த சேவைப்பணித் தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில், 15 லட்சம் தொழிலாளர்களுக்கு, விபத்து மரணம் மற்றும் இயலாமை இழப்பீட்டுக்கான குழுக் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். மேலும், இவ்வகை சேவைப்பணி தொழிலாளர்களுக்கென அனைத்து வசதிகளுடன் கூடிய ஓய்வுக்கூடங்கள், சென்னை, கோவை உள்ளிட்ட பெருநகரங்களில் உருவாக்கப்படும். தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைக்கு ரூ.1,975 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தமிழக அரசின் பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



● தமிழக பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதை சென்னை அம்பத்தூர், பாடி பகுதியில் நேரலையில் ஆர்வமுடன் பார்த்த பொதுமக்கள்.

## 10 இடங்களில் புதிய அரசு கலை கல்லூரிகள்

அடுத்த 5 ஆண்டுகளில், உற்பத்தி, கழகத்தை நாட்டிலேயே சிறந்த கல்வி நிறுவனங்களின் தரவரிசையில் முதல் 10 இடங்களுக்குள்ளும், உலக அளவிலான கியூஎஸ் தரவரிசையில் முதல் 150 இடங்களுக்குள்ளும் இடம்பெறச் செய்ய புதிய செயல்திட்டம் வகுக்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ், ஸ்மார்ட் கிளாஸ், நவீன தொழில்நுட்ப ஆய்வகங்கள், புதிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள் அமைக்கப்படும். ஆராய்ச்சி மாணவர்களை ஊக்குவிக்க புதிய திட்டம் செயல்படுத்தப்படும். உலகின் தலைசிறந்த பல்கலைக் கழகங்களுடன் இணைந்து மாணவர்கள்வெளிநாட்டுகல்விநிறுவனங்களில் இணையவழி படிப்புகளை படிக்க ஏற்பாடு செய்யப்படும்.

அரசு பல்கலைக்கழகங்களின் நிதி பற்றாக்குறையைக் குறைக்க அவற்றுக்கான தொகுப்பு நிதி ரூ.700 கோடியாக உயர்த்தி வழங்கப்படும். மேலும், கல்வி செயல்பாடுகள், ஆராய்ச்சிப் பணிகள், ஆசிரியர்களுக்கான தொடர் பயிற்சி, பாடத்திட்ட மேம்பாடு, தேர்வுமுறை போன்ற பணிகளுக்காக ரூ.200 கோடி கொண்ட சிறப்பு தொகுப்பு நிதியம் உருவாக்கப்படும்.



வளர்ந்துவரும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் தொழில்துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அரசு பொறியியல் கல்லூரிகளில் ஏஐ (செயற்கை நுண்ணறிவு), இணைய பாதுகாப்பு (சைபர் செக்யூரிட்டி), மேம்பட்ட உற்பத்தி தொழில்நுட்பம், ரோபோட்டிக்ஸ், மின்வாகன தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் பொறியியல் தொடர்பான புதிய பட்டப்படிப்புகள் வரும் கல்வி ஆண்டில் அறிமுகப்படுத்தப்படும்.

அதேபோல், அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் திறன்மிகு மற்றும் நெட் வொர்க்கிங், உணவு தொழில்நுட்பம், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொழில்நுட்பம், ட்ரோன் டிசைன் மற்றும் அப்ளிகேஷன் தொடர்பான புதிய டிப்ளமோ படிப்புகள் அறிமுகப்படுத்தப்படும்.

**உயர்கல்வி சேர்க்கை உயர்வு:** புதுமைப்பெண், தமிழ்ப் புதல்வன் உள்ளிட்ட முன்னோடி திட்டங்களால் தமிழகத்தில் மாணவர்களின் உயர்கல்வி சேர்க்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

உயர்கல்வி தேவைகளை நிறைவேற்றும் வகையில், குன்னூர், நத்தம், ஆலந்தூர், விக்கிரவாண்டி, செய்யூர் (செங்கல்பட்டு மாவட்டம்), மானாமதுரை, முத்துப்பேட்டை (திருவாரூர் மாவட்டம்), திருவிடைமருதூர் (தஞ்சை மாவட்டம்), பெரம்பலூர், ஒட்டப்பிடாரம் ஆகிய 10 இடங்களில் புதிய அரசு கலை அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும்.

## பொதுமக்கள் அளித்த 89.58 லட்சம் மனுக்களுக்கு தீர்வு

முதல்வரின் முகவரி துறையின் மூலம் இதுவரை பெறப்பட்ட 93.86 லட்சம் மனுக்களில் 89.58 லட்சம் மனுக்களுக்கு உரிய தீர்வுகள் காணப்பட்டுள்ளன. மனுக்களுக்கு காணப்பட்ட தீர்வுகளின் மீது மனுதாரர்களிடமிருந்து பின்னூட்டங்கள் பெறப்பட்டு உரிய மேல் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

பொதுமக்களின் இருப்பிடத்துக்கு அருகிலேயே, 15 அரசுத் துறைகள் சார்ந்த கோரிக்கைகளைப் பெற்று, 30 நாட்களுக்குள் தீர்வு காணும் வகையில் 'மக்களுடன் முதல்வர்' என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டது. இதுவரை, இத்திட்டத்தின்கீழ், 21.86 லட்சம் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் வகையிலும், பிற குற்றங்களை உடனுக்குடன் கண்டுபிடித்து ஆராய்வதற்கான அமைப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கோடு, சென்னை மட்டுமன்றி தமிழ்நாட்டின் இதர முக்கிய நகரங்களான கோவை, திருச்சி, மதுரை, தாம்பரம் மற்றும் ஆவடி ஆகிய பகுதிகளிலும் பெண்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ஒரு புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

குற்றங்களைத் தடுத்திடும் வகையில் சிசிடிவி, முக அடையாளம் காணும் மென்பொருள் அமைப்பு, தானியங்கி வாகன எண் கண்டுபிடிக்கும் மென்பொருள் அமைப்பு, ட்ரோன் கண்காணிப்பு மற்றும் நுண்ணறிவு அடிப்படையிலான காணொலி பகுப்பாய்வு அம்சங்களை உள்ளடக்கிய இத்திட்டம் ரூ.75 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## ரூ.50 கோடியில் மாநில பேரிடர் மேலாண்மை நிறுவனம்

வெப்ப அலையை மாநிலம் சார்ந்த பேரிடராக தமிழ்நாடு அரசு சமீபத்தில் அறிவித்தது. அதன்படி தமிழகத்தில் வெப்ப அலையால் ஏற்படும் சுகாதாரப் பாதிப்பு மற்றும் உற்பத்தித் திறன் இழப்பை குறைப்பதற்கான தணிப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள, மாநில அளவிலான வெப்ப அலை செயல்திட்டம் தயாரிக்கப்படும். அதனுடன் சென்னை, மதுரை, தூத்துக்குடி, திருச்சி, கோவை, ஈரோடு, திருப்பூர், வேலூர், சேலம், தாம்பரம் மற்றும் ஆவடி ஆகிய 11 மாநகராட்சிகளுக்கான வெப்ப அலை செயல் திட்டங்களும் தனியாக தயாரிக்கப்படும்.

பேரிடர் அபாயத்தை திறம்பட மேலாண்மை செய்து, அதன் தாக்கத்தைக் குறைக்க முதல் நிலை மீட்பாளர்கள், களப்பணியாளர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், அரசு சாரா நிறுவனங்கள் ஆகியோரின் திறன்களை மேம்படுத்த அதிநவீன வசதிகளுடன் கூடிய தமிழ்நாடு மாநிலப் பேரிடர் மேலாண்மை நிறுவனம் ரூ.50 கோடியில் சென்னையில் அமைக்கப்படும். இதேபோல், 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழ் 2023–24 மற்றும் 2024–25–ம் ஆண்டுகளில் நடைமுறையில் உள்ள திட்டங்களில் மொத்தம் ரூ.14,520 கோடி மதிப்பிலான 1,266 திட்டப் பணிகள் எடுக்கப்பட்டன. அதில் இதுவரை 389 பணிகள் ரூ.2,246 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

## தகவல் தொழில்நுட்ப துறைக்கு ரூ.131 கோடி ஒதுக்கீடு

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறைக்கு பட்ஜெட்டில் ரூ.131 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துறையில் பெருமளவில் உருவாகி வரும் புதிய தொழில் வாய்ப்புகளை பயன்படுத்தி, உயர்நுட்ப வேலைவாய்ப்புகளை தமிழக இளைஞர்களுக்கு ஏற்படுத்தும் வகையில், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலம் சென்னையில் 'AVGC–XR' எனப்படும் திறன்மிகு மையம் ரூ.50 கோடியில் உருவாக்கப்பட உள்ளது. இதன் துணை மையங்கள் கோவை, திருச்சி, சேலம், மதுரை, நெல்லை மண்டலங்களில் அடுத்த 3 ஆண்டுகளில் உருவாக்கப்படும்.

தமிழ்நாடு புத்தொழில் நிறுவனம் மற்றும் ஐடிஎன்டி மையங்களில் பதிவுசெய்து செயல்பட்டு வரும் புத்தொழில் நிறுவனங்கள் எளிதில் தரவு மைய சேவைகளை பெறும் வகையில் ரூ.10 கோடியில் தமிழ்நாடு புத்தொழில் தரவு மைய சேவைத் திட்டம் நடப்பாண்டில் செயல்படுத்தப்படும். இதன் மூலம் புத்தொழில் நிறுவனங்கள் தலா ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் தரவு மைய சேவைகளுக்கான வில்லைகளை (வவுச்சர்ஸ்) பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

முரசு: 64
ஒலி: 162
MALAI MURASU
8 பக்கம் 500 காசு
REGN.NO.TN/CH(C)/291/2024-2026
TN/PMG(CCR)/WPP-490/2024-2026
RNI Regn.No. 5843/61

மாலை முரசு
சென்னைப் பதிப்பு
www.malaimurasu.com
சனிக்கிழமை
15-03-2025 (பங்குனி 01)
★★

விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்கள்: பயிர்க்கடன் வழங்க ரூ.17,000 கோடி:

# வேளாண்மைத் துறைக்கு ரூ.45,661 கோடி ஒதுக்கீடு



தமிழக சட்டசபையில் இன்று வேளாண்மைத் துறைக்கான பட்ஜெட்டை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார். இந்த கூட்டத்தில் தி.மு.க., காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் பலர் பச்சைத் துண்டு அணிந்து வந்தனர்.

## சட்டசபையில் 5-ஆம் முறையாக தனி பட்ஜெட் தாக்கல்

சென்னை, மார்ச் 15

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் 5–ஆவது ஆண்டாக இன்று வேளாண் பட்ஜெட்டை தாக்கல் செய்தார். இதில் வேளாண் துறைக்கு ரூ.45,661 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பயிர்க்கடன் வழங்க ரூ.17 ஆயிரம் கோடி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பொதுவாக நீண்ட காலம் ஒரே பட்ஜெட் மட்டும் தாக்கல் செய்யப்பட்டுவந்தது. 2021–இல் முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்ற பின்னர், பொது பட்ஜெட் மட்டுமல்லாது, விவசாயத்திற்கெனதனிபட்ஜெட்டும் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த பட்ஜெட் 2021 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இப்போது 5–ஆவது முறையாக அமைச்சர்எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் இந்த பட்ஜெட்டை இன்று தாக்கல் செய்தார்.

அப்போது அவர் பேசியதாவது:–

வேளாண்மைத் துறையை மேம்படுத்த கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இதன் விளைவாக தமிழகத்தின் பொருளாதாரத்தில் வேளாண்மைத் துறை 2–ஆம் இடத்தில் உள்ளது.

விவசாய துறையில் தமிழகத்தின் பாரம்பரிய முறையுடன் அறிவியல் தொழில்நுட்பத்தையும் புகுத்தி வருகிறோம். இதனால் சீரான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக சாகுபடி பரப்பளவு 151 லட்சம் ஏக்கராக அதிகரித்துள்ளது.

தமிழகத்தில் இரு போக சாகுபடி பரப்பு 33.66 லட்சமாகஅதிகரித்துள்ளது. கேழ்வரகுஉற்பத்தியில்தமிழகம் முதலிடத்தில்உள்ளது. மண்ணுயிர் காப்போம் திட்டத்தில் 10 லட்சம் மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

2.31 லட்சம் விவசாயிகளுக்கு கடன் வழங்கப்பட்டு உள்ளது. 46 ஏக்கர்ஆயிரம்தரிசுநிலங்கள் விவசாயத்திற்குள்கொண்டு வரப்பட்டுஉள்ளன. 4 ஆண்டுகளில் விவசாயிகளுக்கு ரூ.1,631 கோடி நிவாரணம் வழங்கப்பட்டு உள்ளது.

இயற்கை மேலாண்மை பணிகளுக்காக ரூ.2000 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

உழவர்களுக்காகஇலவசமின் இணைப்புகளுக்கான கட்டணத் தொகையாக ரூ.8,186 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

பயிர்கடன்தள்ளுபடிதிட்டத்தின் கீழ் தற்போது வரை ரூ.10,346 கோடி தொகையும், வட்டித் தொகையும் தமிழ்நாடு அரசால் விடுவிக்கப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் பயிர்க்கடன் வழங்க ரூ.17,000 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். நெல் கொள்முதல் மூலம் ரூ. 297 கோடி நேரடியாக விவசாயிகள் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

வேளாண்துறைக்குஇந்த ஆண்டு ரூ.45,661 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள்

## உயிரிழந்தால் ரூ.2 லட்சம் இழப்பீடு வழங்கப்படும்

### வேளாண் பட்ஜெட்டில் அறிவிப்பு

சென்னை, மார்ச் 15

நிலமற்ற விவசாயிகள் உயிரிழந்தால் இழப்பீடு தொகை ரூ.2 லட்சமாக வழங்கப்படும் என அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கூறினார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:–

வேளாண்மையைதொழிலாளர்களின்நம்பியுள்ளநிலமற்ற வேளாண் வாழ்வாதாரம், சாகுபடிக்காலங்களில் கிடைக்கும் பணிகளைப் பொறுத்தே அமைகிறது.

'இயற்கைப் பேரிடர்களால் பயிர் சாகுபடி பாதிக்கும் போது உழவர்களுடன் வேளாண் தொழிலாளர்களின் வாழ்வாதாரமும் பெரிதும்பாதிக்கப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு,

1. விபத்து மரணத்துக்கான இழப்பீடு, ஒரு லட்சம் ரூபாயிலிருந்துஇரண்டுலட்சம் ரூபாயாகவும்,

2. விபத்தினால்ஏற்படும் உடல் உறுப்பு இழப்பிற்கு நிதி உதவி, 20 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு லட்சம் ரூபாயாகவும்,

3. இயற்கை மரணத்துக்கான நிதி உதவி, 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 30 ஆயிரம் ரூபாயாகவும்,

4. இறுதிச்சடங்கு செய்வதற்கான நிதி உதவி, 2,500 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும்.

இதனால் விளிம்பு நிலையிலுள்ளநிலமற்றவேளாண் தொழிலாளர்களின் குடும்ப நலன் பாதுகாக்கப்படும்.

முதலமைச்சரின்மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம். முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் பசுந்தாள் உரவிதைகள் விநியோகம், மண்வள அட்டை வழங்குதல், ஒருங்கிணைந்த பண்ணையம், வேளாண்காடுகள் உருவாக்குதல், பாரம்பரியவேளாண் வளர்ச்சித் திட்டம் போன்ற 15 திட்டக்கூறுகளுடன் 142 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், 2025–26ஆம் ஆண்டிலும்தொடர்ந்துசெயல்படுத்தப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

---

நல்லூர் வரகு, நத்தம் புளி உள்பட

## 5 பொருட்களுக்கு புவிசார் குறியீடு

சென்னை, மார்ச் 15

நல்லூர்வரகு, நத்தம்புளி உள்பட 5 விவசாயப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற நடவடிக்கை எடுக்கப்படும்எனதெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் வேளாண் – உழவர் நலத் துறை சார்பில் 35 வேளாண் பொருட்களுக்கு தனித்துவமான புவிசார் குறியீடு பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி சோழவந்தான் வெற்றிலைக்குபுவிசார்குறியீடு பெறப்பட்டுள்ளது. இதையடுத்து புதிய நிதியாண்டில்நல்லூர்வரகு(கடலூர்),

வேதாரண்யம் முல்லை (நாகப்பட்டினம்), நத்தம் புளி (திண்டுக்கல்), அயக்குடிகொய்யா(திண்டுக்கல்), கப்பல்பட்டி கரும்பு முருங்கை (திண்டுக்கல்) ஆகிய 5 பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற ரூ.15 லட்சம் ஒதுக்கப்படும்.

---

கரும்பு விவசாயிகளுக்கு

## டன்னுக்கு ரூ.349 சிறப்பு ஊக்கத் தொகை

சென்னை, மார்ச் 15

கரும்பு விவசாயிகளுக்கு டன்னுக்கு ரூ.349 சிறப்பு ஊக்கத் தொகை வழங்கப்படும்எனஅமைச்சர்தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட விவரம் வருமாறு:–

தமிழ்நாட்டில் கரும்பு சாகுபடிப் பரப்பு, உற்பத்தியினை அதிகரித்து சர்க்கரை ஆலைகள் இயக்கத்திற்கு உறுதுணையாகஇருக்கவும், கரும்பு உழவர்கள் கூடுதல் வருவாய் பெறும் வகையிலும், 20242025 அரவைப் பருவத்திற்கு சர்க்கரை ஆலைகளுக்குப் பதிவு செய்துகரும்புவழங்கியதகுதியுள்ளஉழவர்களுக்கு, ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளநியாயமான மற்றும் ஆதாய விலைக்கு மேல், முன் எப்போதும் இல்லாத அளவில், டன்ஒன்றுக்கு349 ரூபாய், சிறப்பு ஊக்கத்தொகையாக உயர்த்தி வழங்கப்படும். இதனால்கரும்புக்கு, டன்ஒன்றிற்கு 3,500 ரூபாய் வழங்கப்பட்டு, சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் கரும்புஉழவர்கள்பயன்பெறுவர். இதற்கென, 297 கோடிரூபாய்ஒதுக்கீடுசெய்யப்படும். அதிக சர்க்கரைக் கட்டுமானம், பூச்சி, நோய்த் தாக்குதலுக்கு எதிர்ப்புப் பண்புகளைக் கொண்ட புதிய கரும்பு இரகங்களை உழவர்கள் அதிக பரப்பில் சாகுபடி செய்திடவும், சாகுபடி செலவைக் குறைக்கும் விதமாக கரும்பு விதைக்கரணைகள், நாற்றுகள், இயந்திர அறுவடைக்கு ஏற்ற அகலப்பார் நடவு முறை, நுண்ணூட்ட உரக்கலவை, தோகை தூளாக்குதல், நிலப்போர்வை அமைத்தல் போன்றஇனங்களைகரும்பு உழவர்களுக்கு மானிய விலையில் வழங்கவும் ஒன்றிய, மாநில அரசு நிதியிலிருந்து 10 கோடியே 53 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

---

விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்க

## 1,000 உழவர் நல சேவை மையங்கள்

### பட்ஜெட்டில் தகவல்

சென்னை, மார்ச்.15

விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்குவதற்காக தமிழ்நாட்டில் 1,000 உழவர் நல சேவை மையங்கள் அமைக்கப்படும் என்று பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகஅமைச்சர் பன்னீர் செல்வம் கூறியதாவது:–

தமிழ்நாட்டில் ஆண்டு தோறும்4 ஆயிரம்வேளாண் பட்டதாரிகளும், 600க்கும் மேற்பட்ட வேளாண் பட்டயதாரர்களும், வேளாண்கல்வியை நிறைவு செய்கின்றனர். இவர்களின் படிப்பறிவும், தொழில்நுட்பத்திறனும் உழவர்களுக்கு உதவியாக இருந்து, வேளாண்மை செழித்திட



உதவிடும் வகையில் 1,000 முதலமைச்சரின்உழவர்நல சேவை மையங்கள் அமைக்கப்படும். இத்திட்டத்தில், 10 லட்சம் ரூபாய் முதல் 20 லட்சம் ரூபாய் மதிப்பிலான இம்மையங்கள்அமைத்திட 30 சதவீத மானியமாக 3 லட்சம் ரூபாய் முதல் 6 லட்சம் ரூபாய்வரைவழங்கப்படும். இதற்கென 42 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இம்மையங்களில் உழவர்களுக்குத் தேவையான விதைகள், உரங்கள் உள்ளிட்ட இடுபொருட்கள்விற்பனைசெய்யப்படுவதோடு, வேளாண் உற்பத்தியைப் பெருக்கவும், பயிர்களில்ஏற்படும்பூச்சி, நோய்மேலாண்மைக்கும் தேவையான ஆலோசனைகள்வழங்கப்படும். அத்துடன் நவீன தொழில்நுட்பங்கள், வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டுதல் குறித்த ஆலோசனைகளும் வழங்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.




### காய்கறிகள், பழங்கள் உற்பத்தி:

# ரூ.125 கோடியில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்!

சென்னை, மார்ச் 15

தமிழ்நாட்டில் ரூ.125 கோடியில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பானவிவரம் வருமாறு:–

மக்கள்நலமும், நல்வாழ்வும் அவர்கள் உண்ணும் உணவைப்பொறுத்தே அமைகிறது. உடல் நலம் பேண, ஊட்டச்சத்து மிக்க உணவினை உரிய அளவில் உட்கொள்வது இன்றியமையாததாகும். காய்கறிகள், பழங்கள், பெரும்பங்காற்றுகின்றன. ஊட்டச்சத்துகளை அளிப்பதில்பயறுவகைகள், சிறுதானியங்கள் ஊட்டச்சத்து வழங்கும் இந்த விளை பொருட்களின்உற்பத்தியை அதிகரித்து ஊட்டச்சத்துப் பாதுகாப்பினை உறுதி செய்வதுடன், உழவர்களின் வருமானத்தை உயர்த்தும் வகையில் “ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்” என்னும்புதியதிட்டம்தமிழ்நாட்டில் 2025 2026ஆம் ஆண்டில் 125 கோடி ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**காய்கறிகள்**

தினசரி தேவை சராசரியாக ஒருநபருக்கு 400கிராம் ஆகும். ஊட்டச்சத்து மிக்க நஞ்சற்றகாய்கறிகள்கிடைப்பதை உறுதி செய்திடவும், மக்களின் அன்றாட காய்கறித் தேவைகளை நிறைவு செய்யவும், வீட்டுத்தோட்டங்களில் காய்கறிகள் வளர்ப்பதை ஊக்குவிக்கும் விதமாக தக்காளி, கத்தரி, வெண்டை, மிளகாய், கொத்தவரை, கீரைவகைகள்போன்ற ஆறு வகையான காய்கறி விதைகள் அடங்கிய தொகுப்பு 15 இலட்சம் குடும்பங்களுக்கு 75சதவீதமானியத்தில்வழங்கப்படும்.

**பழச்செடிகள்**

நகர்ப்புரங்களிலும் கிராமப்புரங்களிலும் வசிக்கும் மக்களின் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவிரைவில்பலனளிக்கும் பப்பாளி, கொய்யா, எலுமிச்சை ஆகிய மூன்று வகையான பழச்செடிகள் அடங்கிய பழச்செடித் தொகுப்புகள்ஒன்பதுஇலட்சம் குடும்பங்களுக்கு, 75 சதவீத மானியத்தில் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில், காய்கறிகளின் தேவைக்கேற்ப அவற்றின் பரப்பு, உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு தக்காளி, வெங்காயம், முருங்கை, கத்தரி, பச்சைமிளகாய், வெண்டை, கீரை போன்ற முக்கிய காய்கறிப் பயிர்கள்14ஆயிரம்ஏக்கரில் பரப்பு விரிவாக்கம் செய்யப்படும். இந்தப் பரப்பு விரிவாக்கம் பெருமளவு சென்னைக்கு அருகிலுள்ள மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு சென்னைக்கான காய்கறித்தேவை நிறைவு செய்யப்படும்.

வைட்டமின்கள், நார்ச்சத்துகள், இரும்புச்சத்து, தாது உப்புக்கள்போன்ற சத்துகள் நிறைந்த பழங்களின் சாகுபடிப் பரப்பானது 12 ஆயிரம் ஏக்கரில்ஊக்குவிக்கப்படும்.

பந்தல்காய்கறிகளின்உற்பத்தியை அதிகரிப்பதற்காக 1,200ஏக்கர்பரப்பில்பந்தல் அமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

பயறுவகைஉற்பத்தியில் தன்னிறைவு பெற்று, உணவுப்பாதுகாப்பைஉறுதிசெய்திட, 202526ஆம்ஆண்டில், பயறு பெருக்குத் திட்டம் 5 இலட்சத்து72ஆயிரம்ஏக்கர் பரப்பளவில் 2 இலட்சத்து 50ஆயிரம்உழவர்கள்பயன் பெறும் வகையில் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் துவரையின் பரப்பு குறைந்து கொண்டே வரும் நிலையில், கடந்த ஆண்டு தமிழ்நாடு அரசு மேற்கொண்ட பல்வேறு சீரிய முயற்சிகளால், துவரை பரப்பு, ஒரு இலட்சத்து 59 ஆயிரம் ஏக்கராக உயர்ந்துள்ளது. துவரை சாகுபடிப் பரப்பு குறைந்து வரும் மாவட்டங்களில், 80 ஆயிரம் ஏக்கர் பரப்பில், துவரையைத் தனிப்பயிராகவோ, வரப்புப் பயிராகவோ அல்லது ஊடுபயிராகவோபயிரிடுவது ஊக்குவிக்கப்படும்.

பயறு வகைகள் விதைத் தொகுப்பு: நிறைந்த மரத்துவரை, காராமணி புரதச்சத்து உள்ளிட்டபயறுவகைகளை இல்லம்தோறும்வளர்க்கும் பொருட்டு பயறுவகை விதைகள் அடங்கிய தொகுப்புஒருஇலட்சம்இல்லங்களுக்கு 75 சதவீத மானியத்தில் வழங்கப்படும்.

புரதச்சத்து மிகுந்த காளான்உற்பத்தியைபெருக்குவதுடன். புதிய தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கவும், வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையிலும், ஊரகப் பகுதிகளில் ஐந்துகாளான் உற்பத்திக்கூடங்கள் அமைத்திட மானியம் வழங்கப்படும்.

உழவர்கள் தாங்கள் விளைவித்த காய் கனிகளை நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்திட, 4,000 நடமாடும் விற்பனை வண்டிகளுக்கு மானியம் வழங்கப்படும்.



திருவொற்றியூர் கார்கில் நகரில் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் பரிசோதனையும் தகுதியானவருக்கு தடுப்பூசியும் விலை இல்லாமல் போடப்பட்டது. மருத்துவக் குழுவினரோடு மாமன்ற உறுப்பினர் டாக்டர் கே கார்த்திக் உட்பட பலர் உள்ளனர்.

### திருவொற்றியூரில்

# கருப்பை வாய்புற்றுநோய்க்கு விலையில்லா தடுப்பூசி!

### கவுன்சிலர் ஏற்பாடு!!

திருவொற்றியூர், மார்ச்.15

திருவொற்றியூர் கார்கில் நகரில் மாமன்ற உறுப்பினர் டாக்டர் கார்த்திக் தலைமையில் சென்னை சமூக பணிகள்துறை கல்லூரி மாணவர்கள் கல்ப விருட்சம் அறக்கட்டளையுடன் இணைந்து, கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய், மார்பகப்புற்றுநோய் குறித்த மருத்துவ முகாமினைநடத்தினர்.

இதில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற கவுன்சிலர் கார்த்திக், கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி போடுபவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, தடுப்பூசிக்கான அனைத்து செலவுகளையும்அவரேஏற்றுக் கொண்டார்.

இதுகுறித்து கவுன்சிலர் கார்த்திக் கூறுகையில்:–

பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள்அதிகம்வசிக்கும் ஏழாவது வார்டில் இது போன்றசிறப்புமுகாம்நடத்தப்படுவது வரவேற்கத்தக்கது. அந்த வகையில், புற்றுநோய் இல்லாத சமூகத்தை உருவாக்கும் வகையில், இன்று ஒரு நாள் தடுப்பூசி போடுபவர்களின்அனைத்து செலவுகளையும் ஏற்பதாக கூறியுள்ளேன். பெண்கள் விழிப்புணர்வுடன் தாங்களாக வந்து இந்த முகாமில் பங்கேற்றது மகிழ்ச்சியாக உள்ளது. இந்நிகழ்ச்சியில், நிர்வாகிகள், அதிமுக மேலிடபொறுப்பாளர்சுபா, வட்டச் செயலாளர் கண்ணன், ஸ்டீபன், மணிமாறன், வில்சன், பிரபு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# இயற்கை வேளாண்மைக்கு ரூ.12 கோடி நிதி ஒதுக்கீடு

### பட்ஜெட்டில் அறிவிப்பு

சென்னை, மார்ச் 15

இயற்கை வேளாண்மையை பரவலாக்க ரூ.12 கோடி ஒதுக்கப்படுகிறது. இது தொடர்பாக பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட விவரம் வருமாறு:–

இயற்கை வேளாண்மையில், ரசாயனக் கலப்பு இல்லாத, சுற்றுச்சூழலுக்கு உகந்த, வயல்களில் கிடைக்கக்கூடிய வளங்களானபயிர்கள், கால்நடைகள் மற்றும் மரங்கள் ஆகியவற்றின் கழிவுகளை மறுசுழற்சி செய்து ஒருங்கிணைத்து விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது.

இயற்கை வேளாண்மையை பரவலாக்கம் செய்திடும் விதமாக பல்வேறு செயல்பாடுகள் தமிழ்நாட்டில் 37 மாவட்டங்களில் மொத்தம் 12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும்.

இயற்கை வேளாண்மையில் ஈடுபடும் உழவர்களை ஒருங்கிணைத்து, குழுக்கள் அமைத்து 7,500 உழவர்கள் பயனடையும் வகையில்



இயற்கை வேளாண்மைக்கானதேசிய இயக்கம் இரண்டாண்டுத்திட்டமாக செயல்படுத்தப்படும்.

இயற்கை மற்றும் உயிர்ம வேளாண் முறைகளில் சாகுபடி செய்யப்பட்ட வேளாண் விளைபொருட்கள் எளிதில் நுகர்வோருக்குக் கிடைக்கச் செய்யும் வகையில், தமிழ்நாட்டில்இயற்கைவேளாண் பொருட்களை பூமாலை வணிகவளாகம் உள்ளிட்ட அரசுக் கட்டடங்களில் சந்தைப்படுத்த, உரியவசதிகள் செய்து தரப்படும்.

உழவர்களிடையே உயிர்ம வேளாண்மை மற்றும் அதைச்சார்ந்த தொழில்நுட்பங்களைப்பரவலாக்கம் செய்திட, 37 மாவட்டங்களில்விழிப்புணர்வுஏற்படுத்தப்படும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வளசரவாக்கத்தில்

# மூதாட்டியை தாக்கி பணம் பறிக்க முயற்சி!

சென்னை, மார்ச். 15

சென்னைவளசரவாக்கம் பகுதியில் வீட்டில் தனியாக இருந்த மூதாட்டியை கத்தியால்தாக்கி நகைகள்மற்றும் பணத்தைகொள்ளையடிக்க முயன்ற வாலிபரை போலீசார் கைது செய்துள்ளனர்.

செவிலியர் கல்லூரியில் பேராசிரியையாக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் மணி (65), இவர் சென்னை வளசரவாக்கம், பிருந்தாவன்நகர் மெயின் ரோட்டில் தனது மகள் திவ்யா மற்றும் மருமகன் யுவகேசவன் மற்றும் பேரக் குழந்தைகளுடன் வசித்து வருகிறார்.

நேற்று இந்த பெண்மணி வீட்டில் தனியாக இருந்த போது,

அங்கு வந்த சுமார் 45 வயது மதிக்கத்தக்க ஒருநபர் மருந்துகள்டெலிவரிசெய்ய வந்திருப்பதாககூறியுள்ளார்.

உடனேமணிதனதுமகள் ஆன்லைனில் மருந்துகள் ஆர்டர் செய்துள்ளார் என நினைத்து அவரை வீட்டினுள் அனுமதித்துள்ளார்.

வீட்டினுள் மருந்துகள் கொடுப்பது போல் நுழைந்தவர் பையில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து, மணியின் இடது கையில் குத்திவிட்டு, வீட்டில் இருக்கும் ஆபரணங்கள் மற்றும் பணத்தை எடுத்து தருமாறு மிரட்டியுள்ளார்.

சத்தம்கேட்டுஅங்குவந்த வீட்டில் வேலை செய்யும் பெண் திருடன் என சத்தம் போட்டதால் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

புகாரின் பேரில் வளசரவாக்கம்போலீசார்வழக்கில் சம்பந்தப்பட்ட ராமாபுரம் பாரதிசாலையைசேர்ந்தநாக முத்து (41) என்பவரை நேற்று கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# 28 நெல் சேமிப்பு கிடங்குகள்

### பட்ஜெட்டில் அறிவிப்பு

சென்னை, மார்ச் 15

தமிழ்நாட்டில் 28 நெல் சேமிப்பு கிடங்குகள் ஏற்படுத்தப்படும் என பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விவரம்:–

விவசாயிகளிடம் இருந்து நேரடியாக கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு, சன்னரகத்துக்குடன் ஒன்றுக்கு 1,300 ரூபாயும், சாதாரண ரகத்துக்கு ரூ.1,050–ம்ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

நடப்பு ஆண்டில் 11.03.2025வரை 3.24 லட்சம் விவசாயிகளிடம் இருந்து மொத்தம் 24 லட்சம் டன் நெல் வாங்கப்பட்டுள்ளது.

புதியநிதியாண்டில்நெல் கொள்முதலுக்காக ரூ.525 கோடி ஒதுக்கப்படுகிறது.

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் 22 நெல் சேமிப்பு வளாகங்களும், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் 6 நெல் சேமிப்பு கிடங்குகளும் ஏற்படுத்தப்படும்.

மேலும் 9 ஒழுங்குமுறை விற்பனைகூடங்களில்தலா 1000 டன் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்குகளும் அமைக்கப்படும்.

இவ்வாறு பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெங்காய சேமிப்பு கிடங்குகள் அமைக்கப்படும்

### பட்ஜெட்டில் தகவல்

சென்னை, மார்ச் 15

தமிழகவேளாண்மைபட்ஜெட் உரையின் போது உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேசியதாவது:

தென்னை பரப்பு விரிவாக்கம், ஊடுபயிர்சாகுபடி, மறுநடவுமற்றும்புத்தாக்கம், செயல் விளக்கத்திடல், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காக ரூ.35.26 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

நீர் ஆதாரத்தை திறம்பட பயன்படுத்துவதற்காக, மூன்று லட்சம் ஏக்கர் பரப்பில் நுண்ணீர்ப் பாசனம் அமைக்க ரூ.1.168 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கோடைக்காலங்களில் சாகுபடிக் குறைவால் ஏற்படும் காய்கறிகளின் விலை உயர்வைக்கட்டுப்படுத்திடவும், விவசாயிகளுக்கு உரிய விலை கிடைத்திடவும் முக்கிய காய்கறிகளை ஏப்ரல், மே மாதங்களில் சாகுபடி



செய்திட ரூ.10.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4 ஆண்டுகளில் 147 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு ரூ.1,452 கோடி ஊக்க தொகை வழங்கப்பட்டுள்ளது. பருத்தி உற்பத்தியை அதிகரித்திட பருத்தி உற்பத்திபெருக்குதிட்டத்துக்கு ரூ.12.21 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வெங்காயத்தின் விளைச்சல் குறையும் காலங்களில் சந்தைக்கு நிலையான வரத்தினை உறுதிப்படுத்திடும் பொருட்டுவெங்காயசேமிப்புக்கூடங்கள்அமைக்கரூ.18 கோடிஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. புரதச்சத்துநிறைந்த காளான்உற்பத்தியைஊக்குவிக்க ஊரக பகுதியில் 5 காளான் உற்பத்தி நிலையம் அமைக்கப்படும்

இவ்வாறுஅவர்கூறினார்.

# பாமர மக்களுக்கு முக்கியத்துவம் தரும் பட்ஜெட்!

### எர்ணாவூர் நாராயணன் பாராட்டு!!

சென்னை, மார்ச்.15

கல்வி, மகளிர்க்கு, ஏழை பாமர மக்களுக்கும் முக்கியத்துவம்தரும்தமிழக 2024 – 2025 ஆம் ஆண்டு பட்ஜெட் அமைந்துள்ளது எர்ணாவூர் நாராயணன் பாராட்டு தெரிவித்து உள்ளார்.

ஏற்றத்தாழ்வற்ற, சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் உயரிய நோக்குடன் சொந்த வீடற்ற / நிலமற்ற ஏழைக் குடும்பங்களுக்கு விலையின்றிவீட்டுமனைப் பட்டா வழங்குவதை அரசு தன் முன்னுரிமைக் கொள்கையாகக் கொண்டுள்ளது. இதுவரை 10 லட்சத்திற்கும் மேற்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள் மாநிலம் முழுவதும் பல்வேறு பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், மேலும் 5 லட்சம் பட்டாக்கள் இந்த ஆண்டு வழங்கப்படும்.

தமிழ்நாடு இந்தியாவிலேயே 2வது மிகப்பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலம் என்று பெருமிதம் தெரிவித்தார். மேலும், மகளிர்விடியல்பயணத்திட்டத்திற்கு ரூ.3600 கோடி ஒதுக்கீடு, மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்கு ரூ.13,807 கோடி ஒதுக்கீடு, தமிழகத்தில் புதிய விமான நிலையம், மூன்றாம் பாலினத்தவர்களை ஊர்க் காவல் படையில் இணைக்க திட்டம், பள்ளி பாடத்திட்டத்தில்சதுரங்கம்விளையாட்டு,



20லட்சம்கல்லூரிமாணவர்களுக்கு கைக்கணினி அல்லது மடிக்கணினி வழங்கப்படும், பெண்கள் பெயரில் வீடு வாங்கினால் பதிவுக் கட்டணம் குறைப்பு, புறம்போக்கு நிலங்களில் 5 ஆண்டுகளுக்கு மேல் வசிக்கும் மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்படும் என்பதுஉள்ளிட்டபல்வேறுஅறிவிப்புகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

எல்லோர்க்கும்எல்லாம்’ எனும் உயரிய நோக்கத்துடன் தமிழ்நாட்டின் மேம்பட்ட எதிர்கால வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளம் அமைத்திருக்கிறது என்று தமிழக முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ளார் அவர் கூறியதுபோன்றுஇன்றுதமிழகத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய பட்ஜெட்டாக அமைந்துள்ளது.

பெருந்தலைவர் காமராஜர் தமிழகத்தில் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தது போல தமிழக முதல்வர் தொலைநோக்கு பார்வையுடன் மாணவர்களுக்கு பல்வேறுநல்லபலதிட்டங்களை இந்தபட்ஜெட்டில்அறிவித்துள்ளார் வரும் இரண்டு ஆண்டுகளில் 20 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினி பள்ளி மேம்பாட்டு திட்டத்திற்கு ஆயிரம்கோடி ரூபாய் மற்றும் ஸ்மார்ட் வகுப்பறைபள்ளிஆய்வகங்களுக்குநிதி, நான்முதல்வன் கல்லூரி கனவு திட்டம் விழிப்புணர்வு, பழங்குடி மாணவர்கள் இடை நிற்றிலையை போக்க உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளை தரம் உயர்த்துதல் காலை உணவு திட்ட விரிவாக்கம் ஆக மொத்தம் கல்விக்காக. 46767 கோடி ரூபாய் இந்த பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது, இந்தபட்ஜெட்தமிழகத்தின் எதிர்காலத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்கிறது சிறப்பானஇந்ததமிழகபட்ஜெட்டுக்கு சமத்துவ மக்கள் கழகம் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

தினமும் மாலையில் படியுங்கள் மாலை முரசு

## மாலை முரசு சென்னைப் பதிப்பு முரசம் 15-03-2025

# முடங்கிக் கிடக்கும் தமிழக வன ஆராய்ச்சி மையங்கள்!

தமிழகத்தில் மதுரை, திருச்சி, சென்னை, தருமபுரி, கோவை ஆகிய 5 இடங்களில் வன ஆராய்ச்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள தட்பவெப்ப சூழல், நிலத்தின்தன்மை, அங்குள்ள மாற்றங்கள் உள்ளிட்டவற்றை கருத்தில் கொண்டு புதிய திட்டங்களை ஆராய்ச்சி செய்து செயல்படுத்துவார்கள். குறிப்பாக புதிதாக மரக்கன்றுகளை உற்பத்தி செய்தல், மரங்கள் விரைவாக வளர்வதற்கும், நோய், பருவநிலை மாற்றம் உள்ளிட்ட பல காரணிகளால் பாதிப்படையாமல்இருக்க என்னென்ன செய்ய வேண்டும் என்பவை குறித்து அவ்வப்போது ஆராய்ச்சி செய்வது இந்த மையங்களின் பணியாகும்.

மேலும் தட்பவெப்ப மாறுதலுக்கு ஏற்ற உயர் ரக மரக்கன்றுகளை வளர்த்தல், அவற்றை விவசாய நிலங்களில் நடுதல், புதிய தொழிநுட்பங்களை புகுத்துதல் உள்ளிட்டவையும் இந்த மையங்களின் பணியாகும். இந்த மையங்களில் கடந்த, 2023–24, 2024–25 ஆகிய 2 ஆண்டுகளில் ஆராய்ச்சிக்கான நிதியை தமிழக அரசு ஒதுக்காததால் பணிகள் முடங்கியுள்ளதாக புகார் கூறப்படுகிறது. இதனால் ஆராய்ச்சி மையங்கள் தற்போது பொருட்காட்சி போல காட்சி அளிப்பதாகவும், இங்கு, பணிபுரியும் 100–க்கும்மேற்பட்டோர் எந்த பணியுமின்றி அலுவலகத்துக்கு வருவதும், செல்வதுமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, 2023–24 –ஆம் ஆண்டு ரூபாய் 7 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அரசுக்கு உரிய நேரத்தில் அனுப்பாமல், காலதாமதமாக அனுப்பப்பட்டதால் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை, மேலும், 2024–25 –ஆம் ஆண்டு அதே திட்டத்தை செயல்படுத்தஅரசிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. அதுவும் காலதாமதமாக முன் வைக்கப்பட்டதால், ரூ.7 கோடி மட்டுமே வழங்குவதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கும் அறிக்கை அனுப்புவதில் வனத்துறை உயர் அதிகாரிகள் காலதாமதம் செய்தனர். இதனால் நிதி கிடைக்கவில்லை. இந்த ஆண்டாவது அரசு தலையிட்டு நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

தமிழகத்தில் உள்ள ஆராய்ச்சி மையங்களில் இளம் ஆராய்ச்சியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், அலுவலக உதவியாளர்கள், தோட்ட பராமரிப்பாளர்கள், கணினி ஆபரேட்டர்கள், ஓட்டுநர்கள் என சுமார் 140–க்கும் மேற்பட்டோர் பணிபுரிகின்றனர். இவர்களுக்கு கடந்த 3 மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை. வனத்துறையின் நிர்வாக சீர்கேடால் ஊழியர்கள் சம்பளம் இன்றி தவித்து வருகின்றனர். இது குறித்து இயற்கை நல ஆர்வலர்கள் குமரன் கூறுகையில், தமிழகத்தில் பசுமை பரப்பளவை அதிகரிக்க அரசு சார்பில் திட்டங்கள் தீட்டினாலும், அதை செயல்படுத்துவதில் பல்வேறு சிக்கல்கள் இருப்பதால் பெரும்பாலான திட்டங்கள் தொடங்கிய நிலையிலேயே முடங்கி விடுகின்றன. தற்போது வனப்பகுதிகள் குறைந்து வருவதால் வெப்பமயமாதல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இவற்றை குறைக்க வேண்டும் என்றால் இயற்கை சூழ்ந்த வனப்பகுதியை அதிகரிக்க வேண்டும். அதற்காக, புதிய ஆராய்ச்சிகள் செய்யப்பட வேண்டும். ஆனால் 2 ஆண்டுகளாக நிதி ஒதுக்காமல் ஆராய்ச்சி மையங்கள் முடங்கி இருப்பது வேதனை அளிக்கிறது. அரசு சார்பில் இந்த ஆண்டாவது கூடுதல் நிதி ஒதுக்கி அதிகளவில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். நிதியாண்டு தொடக்கத்தில் ஆராய்ச்சி பகுப்பாய்வு குழுவினர் கூட்டங்களை நடத்தி என்ன மாதிரி ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும் என்று வனத்துறைக்கு அறிக்கை தாக்கல் செய்வார்கள். அந்த குழுவில் அனைத்து துறை அலுவலர்களும் இடம்பெற்றிருப்பார்கள்.

இவர்கள் தரும் அறிக்கையை கொண்டு என்னென்ன மாதிரி ஆராய்ச்சிகள் செய்யப்பட வேண்டும். அதற்குண்டான செலவினங்கள் உள்ளிட்டவை குறித்து வனத்துறை சார்பில் அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். ஆனால், அறிக்கை கால தாமதமாக அனுப்பப்படுவதால் நிதி ஒதுக்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது. அரசு நிதி ஒதுக்க தயாராக இருந்தும், திட்டத்தை அரசின் கவனத்துக்கு முறையாக கொண்டு செல்வதில் வனத்துறை உயரதிகாரிகள் அலட்சியம் காட்டுவதால், கடந்த 2 ஆண்டுகளாக அரசு சார்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. பல்வேறு நிலைகளில் பணிபுரியும் தற்காலிக ஊழியர்களுக்கு கடந்த சில மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை. எனவே அரசு இதில் தலையிட வேண்டும் என்றார்.

# மாணவர்களுக்கு வேளாண் சுற்றுலா



சென்னை, மார்ச் 15

தமிழ்நாட்டில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் வேளாண் பண்ணைகளுக்குசுற்றுலாவாக அழைத்துச் செல்லப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விவரம் வருமாறு:–

தமிழ்நாட்டிலுள்ள மேல்நிலைப்பள்ளிகள்மற்றும்கல்லூரிகளைச்சேர்ந்த, 38,600 மாணவர்கள் உயிர்ம வேளாண் பண்ணைகளுக்குக் “கண்டுணர் சுற்றுலா” அழைத்துச்செல்லப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். உயிர்ம வேளாண் முறையில் சாகுபடி செய்யும் உழவர்களுக்கு வேளாண் விளை பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்தி, ஏற்றுமதி செய்ய, எஞ்சிய நச்சு மதிப்பீடு பரிசோதனை செய்வதற்கான கட்டணத்திற்கு, முழு மானியம் வழங்கப்படும்.

உயிர்ம வேளாண் நிலையை அடைந்த உழவர்களை ஊக்குவிக்கும் விதமாக, அவர்களுக்கு ஊக்கத்தொகைவழங்கப்படும்.

மேலும், உயிர்ம வேளாண்மை சான்றிதழ் பெற, உழவர்கள் பதிவு செய்வதற்கான கட்டணத்திற்கு முழு விலக்கு அளித்து, இலவசமாகப் பதிவு செய்யப்படும்.

### 1.45 மணி நேரம் வாசித்தது தான் சாதனை:

# வேளாண் பட்ஜெட் ஒரு அவியல்!

## விவசாயிகளுக்கு பயனளிக்கும் திட்டம் எதுவும் இல்லை என எடப்பாடி பேட்டி!!

சென்னை, மார்ச்.15– இன்று தாக்கல் செய்யப்பட்ட வேளாண் பட்ஜெட் ஒரு அவியல். இந்த பட்ஜெட்டை 1.45 மணி நேரம் வாசித்ததுதான்சாதனையே தவிர, அதில் விவசாயிகளுக்கு பயனளிக்கும்திட்டம்எதுவும்இல்லை என எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

தமிழக சட்டசபையில் வேளாண் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வேளாண் பட்ஜெட்டை இன்று தாக்கல் செய்தார். இதுகுறித்து அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமானஎடப்பாடி பழனிசாமி நிருபர்களிடம் கூறியதாவது:–

கடந்த 4 ஆண்டுகளாக தாக்கல் செய்யப்பட்ட நிதி நிலை (பட்ஜெட்) அறிக்கையோடு விவசாயத்திற்கான தனிபட்ஜெட் 5–ஆம் ஆண்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகளை ஏமாற்றுவதில் தி.மு.க.வினர் வல்லவர்கள். வேளாண்மை பட்ஜெட்டில் அமைச்சர் 1.45 மணி நேரம் வாசித்தது சாதனை படைத்துள்ளார். அது மட்டும் தான் சாதனையே தவிர இந்த பட்ஜெட்டினால் விவசாயிகளுக்கு எந்த நன்மையும் இல்லை. வெறும் ஏமாற்றம்மட்டும்தான்மிஞ்சியுள்ளது.

இந்த பட்ஜெட் ஒரு அவியல் கூட்டு மாதிரி. கால்நடைத்துறை, வேளாண்மைத்துறை, நீர்வளத்துறை, மீன்வளத்துறை, பால்வளதுறையில் உள்ள ஒரு சில திட்டங்களை இணைத்து ஒரு புத்தகமாக வேளாண்மை பட்ஜெட்எனஅமைச்சர்தாக்கல் செய்துள்ளார்.

விவசாயிகளை ஏமாற்றுவதில்திமுகவினர்வல்லவர்கள். அ.தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாட்டில்நெல், கரும்பு உற்பத்திகுறைந்திருந்தது. சாகுபடி பரப்பை 75 சதவிகிதமாக உயர்த்துவதாக கூறினார்கள். ஆனால் இதுவரை 37.7 சதவிகிதமாகவே உள்ளது. சாகுபடி பரப்பு அதிகரிப்பதாக கூறி ஆட்சிக்கு வந்த தி.மு.க. ஆட்சியில் ஆண்டுதோறும் சாகுபடி பரப்பு குறைந்து வருகிறது. அதை உயர்த்துவதற்கு தி.மு.க.விடம்எந்ததிட்டமும் இல்லை. இதுதான் உண்மை. தவறுசெய்யவசதியான திட்டங்களே வேளாண்பட்ஜெட்டில்உள்ளது.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் தான் பல உள்ளன. புதிய திட்டங்கள் எதுவும் இல்லை.

அத்திக்கடவு அவினாசி திட்டம்போலதி.மு.க.எந்த திட்டமும் கொண்டுவரவில்லை.

அத்திக்கடவு–அவினாசியில்2–வதுதிட்டத்தைஅ.தி.மு.க. கொண்டுவந்தது. அதனையும்இந்தஅரசு கைவிட்டுள்ளது.இந்தியாவில்கடன் வாங்குவதில் முதல் மாநிலமாகதமிழகம்உருவாகிஉள்ளது. இதுதான் ஸ்டாலின் அரசின் பெருமை.

கடன் பெற்று தான் திட்டங்களை நிறைவேற்றும் நிலை உள்ளது.

நிதி மேலாண்மை சரி செய்யஅமைக்கப்பட்டநிபுணர் குழு என செய்தது ? நிதி மேலாண்மை நிபுணர் குழு அமைத்த பின்னர் தான் தி.மு.க அரசு நிறைய கடன் வாங்கியுள்ளது. மழைநீரைசேமிக்கும்குடிமராமத்துதிட்டத்தைதி.மு.க. அரசு கைவிட்டுள்ளது.

தமிழ்நாடுஅரசுமுழுமையாககடனில்மூழ்கியுள்ளது. தமிழ்நாட்டில் எந்த விவசாயிகளுக்கும் கிடைக்கும்நன்மையில்கூடஊழல் செய்கிறது தி.மு.க. அரசு. எங்களுக்கு ஒரே எதிரி தி.மு.க. தான்.

வேறு யாரும்எங்களுக்கு எதிரி இல்லை.

விவசாய பம்பு செட்டுகளுக்கு டெல்டா மாவட்டத்தை தவிர இதர பகுதிகளில் ஷிப்ட் முறையில்தான் மும்முனை மின்சாரம் வழங்கி வருகின்றனர். அ.தி.மு.க ஆட்சியில் 24 மணி நேரம் வழங்கப்பட்டது.

நேற்றையபட்ஜெட்டில்பல திட்டங்களை அறிவித்தார்கள். அந்த திட்டங்களை இவர்கள்நிறைவேற்றவேண்டும் என்றாலும் கடன் வாங்கி தான் திட்டத்தை நிறைவேற்றவேண்டும்.மக்களை பற்றி இவர்களுக்கு கவலை இல்லை. எல்லாவற்றிலும் அரசியல் செய்கிறார்கள்.

இந்தியா கூட்டணி கட்சிகளை இங்குள்ள அமைச்சர்கள்சென்றுசந்திக்கிறார்கள். இந்தியா கூட்டணியால் தமிழ்நாட்டுக்கு என்ன நன்மை வந்துள்ளது. நதிநீர் பிரச்சினையைதீர்த்தார்களா அல்லது பேசினார்களா ஒன்றுமில்லை.

13 ஆண்டுகள் மத்தியில் ஆட்சியில் இருந்தார்கள் அப்போதுகல்வியைமாநில பட்டியலில் சேர்க்க வைக்கவில்லை. ஏன் எல்லாவற்றிலும் அரசியல் ஆதாயம் தான்.

விவசாயிகளை ஏமாற்ற வேளாண் பட்ஜெட் என்ற நாடகத்தைஅரங்கேற்றிஉள்ளனர்இதுஒருகண்துடைப்பு விவசாய பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும்என்பதுஎங்களது குறிக்கோள் அது கடினம் தான் ஆனாலும் எதிர்பார்த்தோம், அது இல்லை.


இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறினார்.



சட்டசபை வளாகத்தில் எடப்பாடி பழனிசாமி பேட்டி அளித்த போது எடுத்தபடம்

### உயரிய தொழில்நுட்பம் அறிய

# வெளிநாடுகளுக்கு விவசாயிகள் சுற்றுலா!



சென்னை, மார்ச் 15 தமிழக வேளாண் பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ள விவரம் வருமாறு:–

ஜப்பான், சீனா, வியட்நாம் ஆகிய நாடுகள் நெல் உற்பத்தியில் சாதனை அடைந்துள்ளது. அங்குஉயரியதொழில்நுட்பங்கள் மூலம் இந்த சாதனை படைக்கப்பட்டுள்ளது.

எனவே நமது விவசாயிகள் நெல் உற்பத்தித்திறனில்அதிகசாதனைஅடைந்துள்ள ஜப்பான், சீனா, வியட்நாம் ஆகிய நாடுகளில்கடைப்பிடிக்கப்படும் உயரிய தொழில்நுட்பங்களை நேரடியாகச் சென்று கண்டுணர்ந்து, அத்தகைய தொழில்நுட்பங்களைத் தங்கள்வயல்களில்செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

அதற்காக 100 முன்னோடி விவசாயிகள் ஜப்பான், சீனா, வியட்நாம் ஆகிய நாடுகளுக்குக் கண்டுணர் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

இதற்காகரூ.2கோடிநிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

### ஓ.பி.எஸ்.சுடன் நெருங்குகிறாரா?

# எடப்பாடி - செங்கோட்டையன் இடையே அதிகரிக்கும் விரிசல்!

## சட்டசபைக்கு தனியாக வருகிறார்!!



சென்னை, மார்ச். 15– எடப்பாடி பழனிசாமிக்கும், செங்கோட்டையனுக்கும் இடையே விரிசல் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. சட்டசபைக்கு தனியாக வரும் செங்கோட்டையன் ஓ.பன்னீர் செல்வத்துடன் நெருங்குகிறாராஎன்றுகட்சித் தொண்டர்கள் கருதுகின்றனர்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கும், அக்கட்சியின் முக்கியத்தலைவர்களில்ஒருவரான செங்கோட்டையனுக்கும் இடையே கடந்த சில நாட்களாக விரிசல் இருந்து வருகிறது.அத்திக்கடவு–அவினாசி திட்டம் நிறைவேற்றியதற்காக கோவை மாவட்டம் அன்னூரில் விவசாயிகள் சங்கம் சார்பில்எடப்பாடிபழனிசாமிக்கு பாராட்டு விழா நடத்தப்பட்டது. இதில் செங்கோட்டையன் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தார்.

இதுகுறித்து அவரிடம் கேட்டபோது விழா தொடர்பாக ஒட்டப்பட்ட சுவரொட்டிகளில் எம்.ஜி.ஆர். மற்றும் ஜெயலலிதாபடங்கள்இடம் பெறவில்லை. எனவே இந்த விழாவில் நான் கலந்து கொள்ள வில்லை என தெரிவித்தார்.அதைத்தொடர்ந்து மறைந்த முன்னாள்முதல்வர் ஜெயலலிதாவின்பிறந்தநாள் விழா சென்னையில் உள்ள அ.தி.மு.க.தலைமைஅலுவலகத்தில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெற்றது.

இந்த விழாவிலும் கலந்து கொள்ளாமல்செங்கோட்டையன் புறக்கணித்தார். மாறாக அவரது சொந்தஊரானகோபியில் விழா நடத்தினார்.

கோவையில்நடைபெற்ற முன்னாள்அமைச்சர்வேலுமணியின் மகன் திருமண வரவேற்பில் எடப்பாடி பழனிசாமி கலந்து கொண்டார். இந்த விழாவில் பங்கேற்ற செங்கோட்டையன், எடப்பாடி பழனிசாமியுடன் பேசாமல் முகத்தை திருப்பியபடி சென்று விட்டார். இது போன்று அவர்களிடையே தொடர்ந்து விரிசல் இருந்து வருகிறது.

இந்நிலையில்தமிழகபட்ஜெட் கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது.முதல்நாளான நேற்று பொது பட்ஜெட்டும், இன்று வேளாண் பட்ஜெட்டும்தாக்கல்செய்யப்பட்டது. சட்டசபைநிகழ்வுதொடங்குவதற்கு முன்னதாக நேற்றும், இன்றும், அவையில் என்னென்ன விவகாரங்கள் குறித்து விவாதிக்கலாம் என்பதுகுறித்துஎதிர்க்கட்சிதலைவர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் நடைபெற்றது.

கூட்டம் நடைபெற்ற 2 நாட்களிலும் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் பங்கேற்கவில்லை. நேற்று பொது பட்ஜெட் தாக்கலின் போது எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க.வினர் வெளிநடப்பு செய்தனர். முதலில் செங்கோட்டையன் பங்கேற்கவில்லை. மற்ற அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் அழைத்ததின் பேரில் பின்னர் வெளிநடப்பு செய்தார்.இந்த நிலையில், கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் பங்கேற்காதது குறித்து இன்றுசெய்தியாளர்கள்எடப்பாடி பழனிசாமியிடம் கேள்வி எழுப்பினர்.

அதற்குஅவர்,ஏன்என்னை சந்திக்கவில்லை என்பதை செங்கோட்டையனிடமே கேளுங்கள். செங்கோட்டையனுக்கு ஏதாவது வேலை இருந்திருக்கும். நான் யாரையும் எதிர்பார்ப்பவன் இல்லை. அ.தி.மு.க. சுதந்திரமாக செயல்படும் கட்சி என்றார்.

முன்னதாக,சட்டசபைக்கு வந்தசெங்கோட்டையன்சபாநாயகர் அறைக்கு சென்று அவரை சந்தித்து பின்னர் அவைநிகழ்வில்பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதிமுக தலைமை மீது அதிருப்தியில் உள்ள செங்கோட்டையன் கடந்த இரண்டு நாட்களாக சட்டப்பேரவைக்கு தனியாக வருவதும் வெளியேறும்போது பத்தாம் எண் கேட்டு வழியாக வெளியேறி வந்தார். பெரும்பாலும்அதிமுகஉறுப்பினர்களுடன் அவ்வளவாக பேசவில்லை. சட்டமன்றத்தில் முன்னாள் சபாநாயகர் தனபால் வராததால் ஓ. பன்னீர்செல்வம் அருகே செங்கோட்டையன் இருக்கும் படியான ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இன்றுஓ.பன்னீர்செல்வம் சட்டசபைக்கு லாபியில் வரும்போது அருகில் வந்த செங்கோட்டையன் புன்னகையுடன் அவரைப் பார்த்தார். இருவரும் பேசிக்கொள்ளாவிட்டாலும் புன்னகைத்துக் கொண்டனர். இந்த சம்பவத்தைபார்க்கும்போது எதிரும் புதிருமாக இருந்த ஓ.பன்னீர்செல்வத்துடன் செங்கோட்டையன்நெருங்குகிறாரா என்ற சந்தேகம் கட்சி தொண்டர்களுக்கு ஏற்பட்டு உள்ளது.

எடப்பாடிபழனிசாமியை புறக்கணித்து விட்டு செங்கோட்டையன் தனித்து செயல்படுவதால் அ.தி.மு.க.வில் சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

மாலை முரசு செய்திகள்
தொலைக்காட்சியை இணையதளத்தில் காண
மாலை முரசு செய்திகள்
www.malaimurasu.com

### 4 ஆண்டுகளில்



# 147 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல்!

## கரும்புக்கு ரூ. 848 கோடி ஊக்கத் தொகை விநியோகம்!!

சென்னை, மார்ச். 15 நெல் கொள்முதல், கரும்புக்கு ஊக்கத் தொகை குறித்து வேளாண் பட்ஜெட்டில் கூறியிருப்பதாவது:–

உழவர்களின் நலன் கருதி, ஒன்றிய அரசால் நெல்லுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதரவு விலைக்குமேல், சன்னரகத்திற்குக் குவிண்டால் ஒன்றிற்கு 130 ரூபாயும், சாதாரண ரகத்திற்கு குவிண்டால் ஒன்றிற்கு 105 ரூபாயும் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 4 ஆண்டுகளில் இதுவரை 147 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு 1,452 கோடி ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

கரும்பு விவசாயிகளுக்கும் ஒரு மெட்ரிக் டன்னிற்கு 215 ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு, இதுவரை 425 லட்சம் மெட்ரிக் டன் கரும்புக்கு ரூ. 848 கோடி ஊக்கத்தொகையாக உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இயற்கைப் பேரிடர்களால் வேளாண்மை, தோட்டக்கலைப்பயிர்களில் ஏற்பட்ட சேதங்களுக்கு நிவாரணமாக, 1,631 கோடியே 53 லட்சம் ரூபாய் நிதி, 20 லட்சத்து 84 ஆயிரம் ஆண்டுகளில்உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பயிர்க்காப்பீட்டு இழப்பீட்டுத் தொகையாக 5,242 கோடி ரூபாய் நிதியானது, கடந்த 4 ஆண்டுகளில் சுமார் 30 லட்சம் உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சட்டசபை தேர்தலில்

# பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. கூட்டணி அமைக்குமா?

## செல்லூர் ராஜூ பதில்!

சென்னை, மார்ச் 15 அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ அளித்தபேட்டியின்விவரம் வருமாறு:–

எங்கள்கட்சியின்பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில்கூட்டணி குறித்து தேர்தல் நேரத்தில் முடிவு செய்யப்படும் என்று கூறிஇருக்கிறார்.அதில்எந்த தவறும் இல்லை. எங்களின் தலைவர் புரட்சித்தலைவி அம்மா தி.மு.க. என்ற தீய சக்தியைஒழிக்கஉருவாக்கப்பட்டஅ.தி.மு.க.வைலட்சியத்தோடு வளர்த்தார்.

எங்களின் ஒரே அரசியல் எதிரி தி.மு.க. தான். அன்றைக்கு காங்கிரசுடன் தி.மு.க.கூட்டணியைமுறித்தபோதுஇனியொருபோதும் காங்கிரசுடன் தி.மு.க. கூட்டணி இல்லை. அப்படி கூட்டணி வைத்தால் அது தற்கொலை செய்து கொள்வதற்கு சமம் என்று கருணாநிதி கூறினார். ஆனால் அதே கருணாநிதி தான் சொன்னதையும் மீறி காங்கிரசுடன் கூட்டணி வைத்துக்கொண்டார்.

தி.மு.க. உடைத்தால் மண்குடம்.நாங்கள்உடைத்தால் பொன் குடமா? தற்கொலைக்கு சமம் என்று சொன்னகருணாநிதியேதங்கள் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு காங்கிரசுடன் கூட்டணி வைத்தார். அந்த அளவுக்கு கூட எங்கள் அண்ணன் (எடப்பாடியார்) இப்போது தெரிவிக்கவில்லை. எனவே தேர்தல் நேரத்தில் கூட்டணி குறித்து முடிவு செய்யலாம்.

இவ்வாறுஅவர்கூறினார்.

செல்லூர்ராஜூவின்இந்த கருத்து தற்போது சமூக வலைத்தளங்களிலும்,அரசியல் தலைவர்கள் மத்தியிலும் பல்வேறு விமர்சனங்களைஏற்படுத்தி உள்ளது.

### கடந்த 4 ஆண்டுகளில்

# விளை நிலமாக மாற்றப்பட்ட 46 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள்!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் பெருமிதம்!!

சென்னை, மார்ச். 15 தமிழக வேளாண் பட்ஜெட்டில் கூறப்பட்டிருப்பதாவது:–

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் வேளாண்மை உழவர் நலத்துறைத் திட்டங்களுடன், பிறதுறைகளின் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, கடந்த நான்கு ஆண்டுகளில் 10,187 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தியதன் விளைவாக 46,000 ஏக்கர் பரப்பளவில் தரிசு நிலங்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.



மேலும், ஆதி திராவிட, பழங்குடியின உழவர்களுக்கு 1,611 ஆழ்துளை மற்றும் குழாய்க்கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. 46 லட்சம் தென்னங்கன்றுகள், 16 லட்சம் பழச்செடித் தொகுப்புகள் போன்றவை விநியோகிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தில் 787 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 50 லட்சத்து 71 ஆயிரம் உழவர்கள் பயனடைந்துள்ளனர்.

முதலமைச்சரின் “மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்” திட்டத்தில் 4,000 மெட்ரிக் டன் பசுந்தாள் உர விதைகள், 23,000 மண்புழு உரப்படுக்கைகள், 10 லட்சம் வேப்பமரக் கன்றுகள், 50 லட்சம் ஆடாதொடா மற்றும் நொச்சி நடவுச் செடிகள், 8 லட்சத்து 88 ஆயிரம் ஊட்டச்சத்துத் தளைகள் உள்ளிட்ட திட்டக்கூறுகளின்கீழ் 21 லட்சத்து 35 ஆயிரம் உழவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

**மாவட்ட கூடுதல் நீதிமன்றம்**
**பூவிருந்தவல்லி**
**MCOP.146/2024**

ஜோதி பிரகாஷ் மற்றும் மூவர்
எண். 17, 3-வது குறுக்கு தெரு,
திருவேங்கடம் நகர், திருநின்றவூர்,
சென்னை-602024.
...மனுதாரர்கள்
-எதிர்-
B.பிரகாஷ் மற்றும் ஒருவர்
.....எதிர் மனுதாரர்கள்

பெறுநர்:
1.B.பிரகாஷ்,
த/பெ.பூஷணம்,
எண். 16/5, 6-வது குறுக்கு தெரு,
லஷ்மிபுரம், திருநின்றவூர்,
சென்னை-602024.
... முதல் எதிர்மனுதாரர்

மேற்கூறிய MCOP வழக்கு எண். MCOP.146/2024, 08.04.2025 தேதியன்று காலை 10.30 மணியளவில் முதல் எதிர் மனுதாரர் ஆஜர் ஆவதற்காக போடப்பட்டுள்ளது. மேற்கூறிய முதல் எதிர் மனுதாரர் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ மேற்கூறிய நீதிமன்றத்திற்கு வரவேண்டியது. தவறும் பட்சத்தில், மேற்கூறிய MCOP. வழக்கில் ஒருதலைபட்சமாக ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

S.ரேணுகா தேவி, BBM., LLB.,
E.அருண்குமார்
மனுதாரரின் வழக்கறிஞர்கள்.

---

**BEFORE THE HON'BLE XXVII ASST CITY CIVIL COURT AT CHENNAI**
**E.P.No. 774 OF 2019**
**IN**
**A.R.C.No. 874 OF 2015**

Margadarsi Chits Private Limited
...Petitioner/Decree holder
Versus
M/s.Sree Andal Foundation rep by Proprietrix Mrs.M.Andal and others
..Respondents/Judgement Debtors

To
M.Rekha-JD2
(W/o.K.Chandrasekaran)
No.18/27, Flat No.SF2,
Subramaniam Flats,
Girija Nagar West, Kolathur,
Chennai-600 099.

Please take notice in the above Execution Petition filed against you for sale of your Immovable property described in the schedule hereunder. You are hereby requested to be present in person or your counsel and your property will be auctioned in Public, as per the order of the Honorable XXVII Asst. City Civil Court, Chennai at 4.00 P.M. on 27-03-2025 in the City Civil Court Campus, High Court Buildings, Chennai.

SCHEDULE

All that piece and parcel of the Residential Flat bearing Flat No.SF 01 in Second Floor in the building known as Subramaniam Flats" measuring about 1000 Sq.feet together with 547 sq.feet or 50.817 sq.mts of undivided share of land measuring an extent of 3080 Sq.feet or 286.138 sq.mts situated in Plot No.27, Door No.18/27, Girija Nagar West, Kolathur, Chennai – 600 099. Approved Layout D.T.C.P.No.372/73, comprised in Survey No.73/4, 73/7, 73/8 as per patta C.A.No.2217/2007-2008, T.R.No.4246/2007/2008 T.S.No.29, Block No.44 of Kolathur Village, Perambur-Puraswakkam Taluk, within the limits of Chennai Corporation, measuring an extent of 3080 sq.feet or 286.138 sq.mts land and bounded on the
North by : 20 Feet wide Road
South by : Vinayagar Temple
East by : Plot No.28
West by : Plot No.26
Admeasuring
East to West on the Northern side - 40 feet
East to West on the Southern side – 40 feet
North to South on the Eastern side – 79 feet
North to South on the Western side – 75 feet
In all measuring an extent of 3080 sq.feet or 286.138 sq.mt. of land, within the Registration District of North-Chennai and Sub-Registration District of Sembium.

M.DURAIRAJ
Counsel for Petitioner/Decree Holder

---

**PUBLIC AUCTION**

**IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS (ORDINARY ORIGINAL CIVIL JURISDICTION)**

**PROCLAMATION No. 4 OF 2019**
**In**
**EP No. 10 of 2017**
**In**
**ARB. Case No.SKPL/SF/001 of 2014**

M/s.Sundaram Finance Ltd.,
No.21, Patullos Road,
Chennai 600 002.
..Petitioner/Decree Holder
-Vs-
1. M/s.Arunachalam Sugar Mills Ltd
Regd office: Ariyur Post
Kandamangalam Post
Pondicherry 605 102
Rep. by the Official Liquidator Madras High Court as Provisional Liquidator having their office at UTI Building RajajiSalai,
Chennai 600 001.
2. Mr.V. Kannan,
S/o.Mr.Venkatarama Iyer
No.24, 10th Cross Venkateswara Nagar, Kottivakkam,
Chennai 600 041.
3. M/s.V. Baskaran,
S/o.Mr.Venkatarama Iyer
No.24, 10th Cross Venkateswara Nagar, Kottivakkam,
Chennai 600 041.
4. M/s.New Horizon Sugar Mills Ltd.,
Ariyur, Kandamangalam,
Pondicherry 605 102.
...Respondents/Judgment Debtors

In the above mentioned Proclamation, the Learned Master of Hon'ble High Court, Madras will sell by Public Auction, the property being Schedule Property belonging to 2nd, 3rd and 4th Judgement Debtors, at 4.00 p.m. on 2nd day of April, 2025 at the Master Court Hall, High Court, Madras.

The property has also been attached by the Government of Tamil Nadu on behalf of the Depositors of Pondicherry Nidhi Limited (PNL) by G.O.Ms.No.474 dated 16.06.2006

Details and copies of the Public Auction sale and Proclamation will be available at the Office of the Nazir, High Court, Madras during office hours between 11.00 a.m. and 5.00 p.m.or contact the Advocates for Decree Holder M/s.S. Vasudevan, and K. Krishnaswamy at No.32, Errabalu Chetty Street, First Floor, Chennai-600 001 during office hours between 10.00 a.m. and 5.00 p.m on all working days. Phone Nos. 044 25225096, 25223898, 25231979 and 42163532, Mobile Nos.9840340123 and 9566268730.

**SCHEDULE PROPERTY**

3/5th undivided share Built up area owned by Second, Third and fourth Respondents admeasuring 11,195 Sq. Ft. including the common area identified as Sixth Floor Tower II "Royala Towers" and the lease hold interest to an extent of 3/5th sq.ft. the Lease hold Undivided interest out of 3305 sq.ft., of Undivided land share lease hold interest in the property of land bearing Old No.781-785, Anna Salai, Chennai 600 002, bounded on the (amended as per order dated 3.2.2020 in Appln.No.439 of 2020)
North by : RS No.21,
South by : Anna Salai and RS No.23,
East by : RS No.22/2
West by : RS No.24,
comprised in RS No.22/1 Block No.4 containing one cawnie 15 grounds and 1300 Sq. Ft. equal to 8800 Sq. Meters or thereabouts less apportion of land admeasuring about 585 Sq. Meters gifted to the Corporation of Madras and situated in Nungambakkam Village, Triplicane-Mylapore Taluk, in Sub Registration District of Triplicane, Registration District of Madras Central now included in the office the Sub Registrar, Thousand lights.

Upset price fixed at Rs.1,40,00,000/- (Rupees One Crore Forty Lakh only)
Auction Venue : Before the Hon'ble Master Court, High Court, Madras
Time : 4.00 p.m. on 02.04.2025
EMD:25% of the upset price i.e.Rs.35,00,000/- by Demand Draft payable in the name of The Register General, High Court, Madras-600 104 and the balance amount of the bid(75%) payable by Demand Draft within 15 days from the date of sale of Schedule Property.

S.Vasudevan
K.Krishnaswamy
Advocates
New No.32, Old No.16,
1st Floor, ErraBaluChetty Street, Chennai - 600001
Counsel for Decree Holder.

---


**மாநகர உரிமையியல் மற்றும் அமர்வு நீதிமன்றம்**
**VIII உதவி அமர்வு நீதிமன்றம்**
**சென்னை**
**O.S.No.1573/2024**

தினேஷ்
-மனுதாரர் / வாதி
-எதிர்-
திருமதி. பவானி
திரு.சந்திரசேகரன்
வெங்கடேஸ்வரா கார்ஸ்
நம்பர். 72 A, தில்லைநகர்
கொளத்தூர்,
சென்னை-600 090
எதிர்மனுதாரர்/பிரதிவாதி

அறிவிப்பு


இந்த நம்பர் வழக்கில் மேற்படி எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கு மாற்றுமுக சார்வுக்கு உத்திரவாதிஷையார் சமூகம் நீகிமன்றத்தில் ஆஜராக எதிர்வரும் 08/04/2025 ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளதால் அன்றையதினம் காலை சுமார் 10.30 மணியளவில் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தங்கள் ஆட்சேபணைகளை தெரிவித்து கொள்ள வேண்டியது; தவறும் பட்சத்தில் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன்மூலம் அறிவிக்கலாயிற்று

K.ரகுராமன் B.COM, BL, MBA
N.செந்தில்குமார், BSC.BL
D. காமேஷ், BBA, LLB(HONS)
A. அகிலாராணி BSC, LLB (HONS)
N.சந்தோஷ்குமார், BA,LLB (HONS)MBA
S.டிம்பிள் சங்கீதா, BA,LLB (HONS) LLM
அட்வகேட்ஸ் சென்னை



# தமிழக வேளாண் பட்ஜெட்

## 2025-2026



### சாகுபடி பரப்பு 151 லட்சம் ஏக்கராக உயர்வு:

## கேழ்வரகு விளைச்சலில் தமிழகம் முதலிடம்!

### கரும்பு, சோளம் 2–ஆம் இடம்; நிலக்கடலை 3–ஆம் இடம்!!



**சென்னை, மார்ச். 15**

தமிழ்நாட்டில் சாகுபடி பரப்பளவு 151 லட்சம் ஏக்கராகஉயர்ந்துள்ளது. கேழ்வரகு விளைச்சலில் முதலிட த்தையும், கரும்பு, மக்காச் சோளம் விளைச்சலில் 2–ஆம் இடத்தையும், நிலக்கடலைவிளைச்சலில் 3–ஆம் இடத்தையும் தமிழகம் பிடித்துள்ளது.

சட்டசபையில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் இன்று 2025–26–ஆம் ஆண்டுக்கான வேளாண் பட்ஜெட்டை தாக்கல் செய்தார். அதில் கூறியிருப்பதாவது:–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சீரிய வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளார். அவரது தொலைநோக்குத்திட்டங்களைச் செயல்படுத்தியதன் விளைவாக, 2019–2020 ஆம் ஆண்டில் 146 லட்சத்து 77 ஆயிரம் ஏக்கராக இருந்த மொத்த சாகுபடிப் பரப்பு, 2023–24 ஆம் ஆண்டில் 151 லட்சம் ஏக்கராக உயர்ந்துள்ளது. மேலும், 2019–20 ஆம் ஆண்டில் 29 லட்சத்து 74 ஆயிரம் ஏக்கராக இருந்த இருபோக சாகுபடிப் பரப்பு 2023–2024 ஆம் ஆண்டில் 33 லட்சத்து 60 ஆயிரம் ஏக்கர் என்ற அளவினை எட்டியுள்ளது. மேலும், பயிர் உற்பத்தித்திறனை உயர்த்திடும் முயற்சியில், பல்வேறு உயர் தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்தி, வேளாண்பயிர்களில் தமிழ்நாடு அகில இந்திய அளவில் கேழ்வரகு உற்பத்தித்திறனில் முதல் இடத்திலும், மக்காச்சோளம், எண்ணெய்வித்துகள், கரும்பு ஆகியவற்றில் இரண்டாம் இடத்திலும், நிலக்கடலை, குறுதானியங்கள்உற்பத்தித்திறனில் மூன்றாம் இடத்திலும் உள்ளது.

2021–22 முதல் 2023–24 ஆம் ஆண்டு வரை 346 லட்சத்து 38 ஆயிரம் மெட்ரிக்டன் உணவுதானியஉற்பத்தி அடையப்பட்டுள்ளது. உழவர்களின் நீர்ப்பாசன ஆதாரத்திற்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு அரசு முன்னுரிமை அடிப்படையில் புதிய பாசன மின் இணைப்புகளை 2021–22 ஆம் ஆண்டு முதல் வழங்கி வருகின்றது.

இந்த சிறப்பு முயற்சியின் காரணமாக, இதுவரை, ஒரு லட்சத்து 81 ஆயிரம் பாசன மின் இணைப்புகள் உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. வேளாண்மையில் எந்திரங்களின் பயன்பாடு இன்றியமையாத ஒன்றாக மாறிவிட்ட நிலையில், கடந்த நான்கு ஆண்டுகளில் வேளாண் எந்திரமயமாக்குதல் திட்டத்தின் கீழ், 55,000 உழவர்களுக்கு வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன.

இதுதவிர, 1,109 வேளாண் எந்திர வாடகை மையங்கள், 98 கரும்பு அறுவடை எந்திரங்கள் வழங்கப்பட்டு உழவர்களின் எந்திரத் தேவைகள் மொத்தம் 510 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்ற ப்பட்டுள்ளன.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



சட்டசபைக்கு எம்.எல்.ஏ.க்கள் பச்சை துண்டு அணிந்து வந்த போது எடுத்த படம்.



## பயிர்க் காப்பீட்டுக்கு ரூ.841 கோடியில் திட்டம்!

**சென்னை, மார்ச் 15**

தமிழக வேளாண் பட்ஜெட்டில் கூறியிருப்பதாவது:–

பருத்தி உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்க, பருத்தி சாகுபடித் திட்டம் 2021–2022–ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2025–2026–ஆம் ஆண்டிலும் இத்திட்டம் 12 கோடியே 21 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

இயற்கைச் சீற்றங்களால் விளையும் பயிர்ச் சேதங்களினால் ஏற்படும் வருவாய் இழப்புகளில் இருந்து பாதுகாத்து, உழவர்களின்ன் வாழ்வாதாரத்தை நிலைப்படுத்த, பயிர்க் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம், 2025–2026–ஆம் ஆண்டில், 35 லட்சம் ஏக்கர் பரப்பிலான பயிர்களைக் காப்பீடு செய்யும் வகையில், ரூ.841 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல் படுத்தப்படும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

2

திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டுள்ளன; தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வேளாண்மை – உழவர் நலத்துறையின் அமைச்சராக, வேளாண் நிதிநிலை அறிக்கையை ஐந்தாவது முறையாக, இம்மாமன்றத்தில் அளித்திடும் அரிய வாய்ப்பினை எனக்கு வழங்கியுள்ள. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு, வேளாண் பெருமக்கள் சார்பாகவும் வேளாண்மை–உழவர் நலத்துறை சார்பாகவும் ... கனிந்த நன்றியைத் தெரிவித்து

## கோடை உழவு செய்ய ஏக்கருக்கு ரூ.2,000 மானியம்

### மலைவாழ்

## விவசாயிகளுக்கு உழவர் கடன் அட்டை




**சென்னை, மார்ச்.15**

மலைவாழ் விவசாயிகளுக்கு கடன் அட்டை வழங்கப்படும்என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விவரம் வருமாறு:–

2025–26 ஆம் ஆண்டில் சுமார் 63 ஆயிரம் மலைவாழ் உழவர்கள் பயனடையும் வகையில், குறுதானிய சாகுபடி, இடுபொருள்கள் விநியோகம், காய்கறிப்பயிர்களில் பரப்பு விரிவாக்கம், வேளாண் இயந்திரங்கள், மதிப்புக்கூட்டுதல், நுண்ணீர்ப்பாசனம், ஒருங்கிணைந்த பண்ணையம் போன்றவற்றிற்கு மானியம் வழங்கிட 22 கோடியே 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு மலைவாழ் உழவர் முன்னேற்றத்திட்டம் செயல்படுத்தப்படும்.

மேலும். இப்பயனாளிகளுக்கு உழவர் கடன் அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இத்திட்டம் திருவண்ணாமலை, நீலகிரி, சேலம். கள்ளக்குறிச்சி, நாமக்கல், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், திருப்பத்தூர், திருநெல்வேலி, வேலூர், கன்னியாகுமரி, தேனி, தென்காசி, விருதுநகர், கிருஷ்ணகிரி, தருமபுரி, ஈரோடு, திருப்பூர், விழுப்புரம், கோயம்புத்தூர் ஆகிய 20 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சிறந்த சேவைக்கான டாக்டர் பட்டம்:

### சட்டசபைக்கு பச்சை துண்டு